ஶிவாகமச் சிந்தனைகள்

(தொகுதி இரண்டு)



"அகோர ஶிவாசார்ய"
ப்ரஹ்மஸ்ரீ ஸே. அருணஸூந்தர குருக்கள்

ஶிவாகமச் சிந்தனைகள்

(தொகுதி இரண்டு)

ஆசிரியர்
'அகோர ஶிவாசார்ய'
டாக்டர். ப்ரஹ்மஶ்ரீ. ஸே. அருணஸுந்தர குருக்கள், M.A.,M.Phil.,B.Ed.,Ph.d.
துறைத் தலைவர், வியாகரணப் பிரிவு,
சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரி,
மயிலாப்பூர், சென்னை.

திருமணவிழா மலர்
மணமக்கள்
'ஶிவாகம பாஸ்கர'
ஶிவஶ்ரீ K. அருள்முத்துக்குமார ஶிவம்
ஶ்ரீமதீ B. ப்ரியங்கா, B.C.A.
அருள்மலை, தோரணவாவி.
17.04.2017

நூல் விளக்கக் குறிப்பு

பெயர்	-	ஶிவாகமச் சிந்தனைகள்
பொருள்	-	ஶிவாகமப் பொருள் விளக்கம்
ஆசிரியர்	-	ப்ரஹ்மஶ்ரீ ஸே. அருணஸுந்தர குருக்கள் சென்னை.
தொகுப்பு	-	ஶிவஶ்ரீ G. கார்த்திகேய ஶிவம் திருப்பரங்குன்றம்.
மொழி	-	தமிழ்
எழுத்து	-	க்ரந்தம், தமிழ்
ஆண்டு	-	2017
எழுத்து அளவு	-	12 புள்ளிகள்
அளவு	-	1/8
தாள்	-	மேப்லித்தோ 80 GSM
பக்கங்கள்	-	95
ப்ரதிகள்	-	1000
அச்சுக்கோர்ப்பு	-	ஶிவஶ்ரீ G. கார்த்திகேய ஶிவம், திருப்பரங்குன்றம். ஶ்ரீ அரவிந்த ஶிவம், ஈரோடு. ஶ்ரீ அருண் ஶிவம், கோவில்பட்டி.
அச்சிடல்	-	ஹேமா க்ராபிக்ஸ், சிவகாசி.
வெளியீடு	-	ஶிவஶ்ரீ K. அருள்முத்துக்குமார ஶிவம் ஶ்ரீமதீ B. ப்ரியங்கா, B.C.A. அருள்மலை, தோரணவாவி.

நூல் கிடைக்குமிடங்கள் -

ப்ரஹ்மஶ்ரீ ஸே. அருணஸுந்தர குருக்கள், சென்னை.

ஶிவஶ்ரீ க. கார்த்திகேய ஶிவம், திருப்பரங்குன்றம்.

ஶிவஶ்ரீ கா. அருள்முத்துக்குமார ஶிவம், அருள்மலை.

ஶிவஶ்ரீ பு. அரவிந்த ஶிவம், ஈரோடு.

உ

ஸ்ரீ ஸ்கந்தாய நம:

கந்தன் பாதம் கனிவுடன் துணை செய்யும்

சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி

சிவஸ்ரீ S.K. ராஜா பட்டர் (எ) சந்த்ரசேகர பட்டர்

ஸ்தானிகர், அருள்மிகு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்
அர்ச்சகர், அருள்மிகு மீனாக்ஷி - ஸுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
முதல்வர், ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.

வாழ்த்துரை

திருப்பரங்குன்றம், நமது ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலய மாணவர் அருள்மலை, தோரணவாவி **'ஶிவாகம பாஸ்கர்' ஶிவஸ்ரீ K. அருள்முத்துக் குமார ஶிவம்,** நமது மாணவர் ஈரோடு **ஸ்ரீ பு. அரவிந்த ஶிவத்தின்** ஸஹோதரி, **ஸ்ரீமதீ B. ப்ரியங்கா, B.C.A.** ஆகியோரின் திருமணவிழா நடைபெரும் நன்னாளில் சென்னை, பேராசிரியர், வியாகரண ஶிரோமணி, டாக்டர். ப்ரஹ்மஸ்ரீ **ஸே. அருணஸுந்தர குருக்கள்** அவர்கள் எழுதிய **'ஶிவாகமச் சிந்தனைகள்'** என்ற தொகுப்பின் இரண்டாம் பகுதியை வெளியிடுதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம்.

ஆசிரியர் அவர்கள் வியாகரணம் மற்றும் ஶைவாகம ஶாஸ்த்ரங்களில் ஆழங்கால்பட்டவர்கள் என்பதை நம் ஸமூஹம் நன்கு அறியும். நமது வித்யாலயத்திற்கு அவர்கள் பலமுறை வந்திருந்து வகுப்புக்கள் பல நடத்தி மாணவர்களை நெறிப்படுத்தியுள்ளார்கள் நெறிப்படுத்தி வருகிறார்கள். அவர்களது வழிகாட்டுதல் நம் மாணவர்களுக்கு என்றும் தேவை.

அவர்கள் எழுதியுள்ள அற்புதமான இந்த நூல் சிறப்பாகப் பயனளிக்கவும், திருமணவிழா இனிது நடபெற்று மணமக்கள் ஸகலநலன்களும் பெற்று வாழவும் திருப்பரங்கிரிதனில் கோயில் கொண்டருளும் தெய்வானை மணாளன் முருகப்பெருமானின் திருவடிக் கமலங்களையும், மதுரையம்பதியில் வீற்றிருந்தருளும் ஸ்ரீஅங்கயற்கண்ணி உடனமர் ஆலவாயண்ணலின் பொற்றாள் மலர்களையும் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

பேரன்புடன்

திருப்பரங்குன்றம்

ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

திருச்சிற்றம்பலம்

தண்ணிலவார் சடையார்தாம் தந்த ஆகமப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்பக்
கண்ணிய அத் திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க
எண்ணிறைந்த வுணர்வுடையார் ஈசர் அருளெனவுணர்ந்தார்.

- பா.எண் 23, திருமூலநாயனார் புராணம், பெரியபுராணம்,

பதிப்புரை

சென்னை, ஸம்ஸ்க்ருதக் கல்லூரியின் வியாகரணத்துறைத் தலைவர், பேராசிரியர், வியாகரண ஶிரோமணி, எங்கள் ஆசார்யப்பெருந்தகை, டாக்டர். ப்ரஹ்மஶ்ரீ ஸே. அருணஸுந்தர குருக்கள் அவர்கள் எழுதிய '*ஶிவாகமச் சிந்தனைகள்*' என்ற தொகுப்பின் இரண்டாம் பகுதியை வெளியிடும் வாய்ப்புக் கிடைத்தமையை எண்ணி எண்ணி மகிழ்கிறோம்.

இந்நூலில் இடம்பெற்றிருக்கின்ற சிந்தனைகள் யாவும் ஆசிரியர் அவர்களால், பல ஸந்தர்பங்களில் பல்வேறு காரணங்களுக்காக எழுதப்பட்டவை. எனவே இதனுள் தொடர்ச்சியைக் காணமுடியாது. ஆனால் இதனுள் அமைந்திருக்கின்ற விஷயங்கள் யாவும் மிகமிக முக்கியமானவை, தேவையானவை என்பதில் ஐயமில்லை.

சிறப்புமிக்க இப்பொக்கிஷத்தை வழங்கும் வல்லமை படைத்த ஆசார்யரை ஶைவாகம உலகம் பெற்றிருப்பது ஶைவாகம உலகின் தவப்பயன்.

அற்புதமான இந்த பொக்கிஷத்தை, எல்லாம்வல்ல இறைவனின் திருவருளாலும், ஸத்குருநாதரின் நல்லாசியாலும் நடைபெறும், திருப்பரங்குன்றம், எங்கள் ஶ்ரீஸ்கந்தகுரு வித்யாலய மாணவர் அருள்மலை, தோரணவாவி '*ஶிவாகம*

பாஸ்கர்' ஶிவஶ்ரீ K. அருள்முத்துக்குமார ஶிவம், ஶ்ரீமதீ B. ப்ரியங்கா, B.C.A. ஆகியோரின் திருமணவிழா நன்னாளில் வெளியிட்டு மகிழ்கிறோம்.

நூலுள் அமைந்துள்ள அஷ்டத்ரவ்யங்கள் எனும் சிந்தனையைத் தேடி எடுத்து அனுப்பிய காஞ்சீபுரம் சிவாகம சக்ரவர்த்தி சாளவ க. ராஜப்ப ஶிவாசார்யர் அவர்களது பௌத்ரன் சிவஶ்ரீ செந்தில்நாத ஶிவாசார்யர் மற்றும் ஶிவஶ்ரீ க்ருஷ்ணமூர்த்தி ஶிவாசார்யர் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூல்வெளியீட்டுப் பணியில் உதவிய திருப்பரங்குன்றம் ஶ்ரீஸ்கந்தகுரு வித்யாலய மாணவர்கள், ஈரோடு ஶ்ரீ பு.அரவிந்த ஶிவம், கோவில்பட்டி, ஶ்ரீ அருண் ஶிவம் ஆகியோருக்கும், நல்லமுறையில் அச்சிட்டுத்தந்த சிவகாசி ஹேமா க்ராபிக்ஸ் அச்சகத்தாருக்கும், அட்டைப் படத்தை வடிவமைத்துத் தந்த தேனி ஶ்ரீ ஸுந்தரராஜன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஶிவாகமச் சிந்தனைகள் மூன்றாம் தொகுதி விரைவில் வெளிவர எல்லாம்வல்ல இறைவனின் திருவடிமலர்களைச் சிந்திக்கின்றேன்.

பேரன்புடன்
'ஶிவசரணகமலைகஶரண்யன்'
க. கார்த்திகேய ஶிவம்
திருப்பரங்குன்றம்

உ

ஸ்ரீ குருப்யோ நம:

முகவுரை

ஸ்ரீஜீ-ஜெஶிகவாஜெஹூஃ ஸஶக்கிஹோ நஜொ நஃஃ ।
ஸஊ ஶிஷ ாத்ூ-விஹக்கி-காரணெஹோ நஜொ நஃஃ ॥

யஸ்லிவொ நாஊஉவாஹூாஂ யா ஜெவீ ஸவூஊஜஊ ।
தயொஃ ஸஂஸ்லரணாக் ஊஂஸாஂ ஸவூதொ ஜயஊஜஊட ॥

கருணைக்கடலான பரமேஶ்வரனால் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருளப்பட்ட நூல்கள் ஶிவாகமங்கள். அவை ஞானம், க்ரியை, யோகம், சரியை என நான்கு பாதங்களில், பதி, பஶு, பாஶம் எனும் முப்பொருள்களை விளக்குகின்றன.

இவ்வாகமங்களுள் கூறப்படும் விஷயங்கள் ஒவ்வொன்றும் பெருங்கடல் போலவும், பெருமலைபோலவும் விளங்குகின்றன. தகுந்த அனுபவம் வாய்ந்த ஆசார்யர்களின் துணையின்றி இவ்வாகமப் பெருங்கடலில் முத்தெடுப்பது என்பது அரிதினும் அரிதே.

ஆனால், அடியேனது ஆசார்யர்கள் 'ஶிவாகம ப்ரவீணர்' 'வியாகரண ஶிரோமணி' **சிவஸ்ரீ V. ஸோமஶேகர ஶிவாசார்யர்**, 'ஶாஸ்த்ரசூடாமணி - பேராசிரியர்' **சிவஸ்ரீ K.A. ஸபாரத்ன ஶிவாசார்யர்** இருவருமே ஶிவாகமப் பெருங்கடலில் முத்துக் குளித்தவர்கள். அவர்கள் அளித்த வித்யாதானம் தான் **'ஶிவாகமச் சிந்தனைகள்'** எனும் இச்சிறுநூல் வெளிவருவதற்கு முக்கியக் காரணம் என்றால் அது மிகையாகாது.

இதனுள் காணப்படும் விஷயங்கள் யாவும் அடியேன், பல தருணங்களில், கருத்தரங்கங்களுக்காகவும், சில கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்காகவும், சில புஸ்தகங்களுக்கு அணிந்துரை போன்றவையாகவும் எழுதியவைகள். எனவே இவற்றுள் தொடர்ச்சியைக் காண முடியாது. ஆனால், விஷயங்கள் யாவும் ஶைவாகமம் பயிலும்

மாணவர்களுக்குப் பெரிதும் உதவும் என்று எண்ணியே இதை வெளியிடுகிறோம்.

இதுபோன்று இன்னும் எவ்வளவோ விஷயங்கள் ஶிவாகமங்களில் மலைபோலக் கொட்டிக் கிடக்கின்றன. அவற்றைத் தெரிந்துகொள்வதற்கு ஒரு சிறு வழிகாட்டிபோல் இந்நூல் அமையும் என்று நம்புகிறோம்.

பல்வேறு நூல்களில் எழுதப்பட்டிருந்த இவை அனைத்தையும் தொகுத்துத் தனது ஸஹோதரியின் திருமண விழாவில் வெளியிடவேண்டும் என்று கேட்டுக்கொண்ட 'ஶிவாகம பாஸ்கர' ஈரோடு **சிவஸ்ரீ B. அரவிந்த ஶிவத்திற்கு** வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொருளுதவி செய்து இந்நூலை தனது திருமணவிழாவில் வெளியிடும் விழா நாயகர், தோரணவாவி அருள்மலை சிரஞ்சீவி, 'ஶிவாகம பாஸ்கர' **சிவஸ்ரீ K. அருள்முத்துக்குமார ஶிவம்,** நாயகி **ஸ்ரீமதீ B. ப்ரியங்கா** தம்பதிகளுக்கு கற்பகாம்பிகை உடனமர் கபாலீஸ்வரப் பெருமானின் திருவருளால் ஸகலநலன்களும் உண்டாகப் ப்ரார்த்திக்கிறோம்.

நூல்வெளியீட்டுப் பணியில் உதவி செய்தவர்களுக்கும், நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த அச்சகத்தாருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நூலில் காணப்படும் சொற்பிழையையும், பொருட் பிழையையும் அவசியம் சுட்டிக்காட்டி மென்மேலும் தெளிவுற வழிவகைசெய்ய வேண்டுகிறோம்.

ஸகலாஜ்ஞாநதம் விஶ்வ-விஜ்ஞாநகுருமீஶ்வரம் ।
வித்யாபீடஸ்திதம் தேவம் வாகீ-விதாத்ரே நமஃ ॥

பேரன்புடன்

ப்ரஹ்மஸ்ரீ ஸே. அருணஸுந்தர குருக்கள்
திருமயிலைக் கபாலீஸ்வரம், சென்னை

பொருளடக்கம்

எண்	தலைப்பு	பக்
1.	ஶைவஸமயமும் ஶிவாகமங்களும்	1
2.	இறைவனைத் தரிசிக்க எல்லோருக்கும் உரிமை	18
3.	கொடிக்கவியில் வடமொழி இலக்கணம்	33
4.	கும்பாலங்காரம்	48
5.	ப்ராஸாத:	54
6.	வைத்தன அத்துவாவும் வடிவென மறைகளெல்லாம்	58
7.	ஶிவபெருமானின் திருமுகங்களும் வேதங்களும்	64
8.	வைதிக-ஶைவஸந்த்யாவந்தனங்கள்	68
9.	ஸ்ரீ சிவபஞ்சாஸன வேதிகை	71
10.	திருவாசகச் சிந்தனை	79
11.	பக்ஷிச்-சித்ரம்	81
12.	குருக்கள் ஆத்மார்த்தபூஜையைச் செய்து முடித்த பின்புதான் பரார்த்தபூஜைக்குச் செல்ல வேண்டுமா?	85
13.	அஷ்டத்ரவ்யங்கள்	88
14.	மந்த்ரமஹிமா	92
15.	நூல் விபரம்	96

பிழைத் திருத்தங்கள்

பக்கம்	வரி	பிழைகள்	திருத்தங்கள்
வாழ்த்துரை	6	நடைபெரும்	நடைபெறும்
வாழ்த்துரை	18	நடபெற்று	நடைபெற்று
பதிப்புரை	26	இந்த	இந்தப்
8	24	பட்டதாயுமுள்ள	பட்டனவாயுமுள்ள
10	15	காளாமுஶைவம்	காளாமுகஶைவம்
34	28	ஒன்பது நூல்களோடு	ஒன்பது நூல்களின் எட்டு உரைகளோடு
38	9	"பிஞ்செழுத்து	பிஞ்செழுத்து
38	28	நுகறும்	நுகரும்
41	22	கொண்க்	கொண்டுக்
48	27	[38] வாமதேவபத்ததி, ச்லோ.எண்., 114-B, பக்.12	[38] வாமதேவபத்ததி, ச்லோ.எண்., 98-B, பக்.11
62	26	நமக்கு கிடைக்கின்றன	நமக்குக் கிடைக்கின்றன
65	5	என்று தெரிகிறது	என்றுத் தெரிகிறது
78	14	ஸ்ரீ(ஞானஶம்பு)	ஸ்ரீ ஞான(ஶம்பு)
91	11	29, 30	25, 26
92	13	1961	1961 (முதற்பதிப்பு)
95	12	ரௌரவோத்தரம்	ரௌரவாகமம்
95	13	1985	1985 (இரண்டாம் பதிப்பு)
96	3	சிவதத்தாதிமத:	சிவதத்த தாதிமத:
97	6	க்ரியக்ரமத்யோதிகா	ஸ்ரீமத் - அகோரஶிவாசார்ய பத்ததி க்ரியாக்ரமத்யோதிகா
97	7	உரை,	ப்ரபா உரை,
97	17	வரிக்குப் பிறகு சேர்க்கவும்	பூர்வகாரணாகமம், இரண்டாம் பதிப்பு, மயிலை அழகப்ப முதலியார், கலி. 5023.
97	33	ரௌரவாகமம் ஸ்ரீமத்,	ரௌரவாகமம்,
98	14	வரிக்குப் பிறகு சேர்க்கவும்	ஶிவலிங்கப்ரதிஷ்டா விதி, ஶிவஸ்ரீ ச. குமாரசுவாமி குருக்கள், அச்சுவேலி யாழ்ப்பாணம், 1994. (இரண்டாம் பதிப்பு)
98	24	36) ஶைவகாலவிவேகம், ஸ்ரீவெங்கடேஶ்வர வேத விஶ்வ வித்யாலயம், திருப்பதி, 2015	36) ஶைவகால விவேகம், ஸ்ரீ மனோன்மணி க்ரந்த மாலா குசுமம், மைசூர், 1966.

குறியீட்டு விளக்கம் - II

1. ஸ.ஸா.ஸ = ஸகலாகம ஸார ஸங்க்ரஹம்
2. ஶி.லி.ப்ர.வி. = ஶிவலிங்க ப்ரதிஷ்டா விதி
3. ஶி.ப்ர.வி. = ஶிவப்ரதிஷ்டா விதி
4. பூ.கார. = பூர்வகாரணாகமம்
5. க்ரி.க்ர.த்யோ.ப்ர. = க்ரியா க்ரம த்யோதிகா ப்ரபா
6. ப்ர.ஸா.ஸா.ஸ. = ப்ரபஞ்ச ஸார ஸார ஸங்க்ரஹம்
7. க.உ.அ.ம.க.வி. = கணபதி உபாஸனை அல்லது மகாகணபதி விதானம்

ஶிவபெருமானின் திருமுகங்களும் வேத திசைகளும்

(பக்கம் - 64 - அமைவிடவிளக்க அட்டவணை)



I [illegible]

II [illegible]

III [illegible]

IV [illegible]

[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	✓		✓	
[illegible]		✓		✓
[illegible]	✓	✓	✓	✓
[illegible]	✓	✓	✓	✓

ஸ்ரீ குருப்யோ நம:

ஶைவஸமயமும் ஶிவாகமங்களும்

(சொல்-பொருள் விளக்கம்)

பாரததேஶத்திலுள்ளப் பல்வேறுக் கல்வித் துறைகளுள் = வித்யாஸ்தானங்களுள் ஶைவாகமமென்றக் கல்வித்துறை, ஸமயம் / மதம் தொடர்பானது மட்டுமல்லாமல் மிகவும் பழமையானதாகவும் திகழ்கிறது. எனவே ஶைவாகமம் எந்த ஸமயத்தினை அல்லது மதத்தினைச் சார்ந்தது? என்று முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஸமயம் - மதம்

நமது இந்தியத் திருநாட்டில் ஆன்மிக ஸம்ப்ரதாயங்களும், பழக்கவழக்கங்களும் பலவாறாகவும், பலவாயும் இருந்தன. இருந்து கொண்டிருக்கின்றன. அந்த ஸம்ப்ரதாயங்களுக்கு **'ஸமயம்'** அல்லது **'மதம்'** என்பது சொல்வழக்கு . மஹாபாரதத்தில்,

> "தே³ஶாசாராந் ஸமயாந் ஜாதித⁴ர்மாந்
> பு³பூ⁴ஷதே ய: ஸ: பராவரஜ்ஞ:"[1]

(நாட்டின் / ஊரின் பழக்கவழக்கங்களையும், ஸமயங்களையும், ஜாதியொழுக்கங்களையும் எவனொருவன் பேணுகின்றானோ, அவனே இருநிலைகளையும் அறிந்தவனாவான்.) என்று காணப்படுகிறது. அவ்விடத்தில் **'ஸமயம்'** என்ற சொல்வழக்கினைக் காணலாம்.

ஶைவம், ஶாக்தம், காணாபத்யம், கௌமாரம், ஸௌரம், வைஷ்ணவம் என்ற ப்ரஸித்தமான ஆறுமதங்கள் மட்டுமல்லாமல், பௌத்தம், ஆர்ஹதகம் என்ற சமணம், முதலிய மதங்களும், பாஞ்சராத்ரம், பாஶுபதம், ஸோமம்,

---

[1] *ஶப்தகல்பத்ருமம், பாகம்-5, ஸமய:, பக். 268*

லாகுலம், காலாமுகம், காபாலிகம், வாமம், தக்ஷிணம், மிஸ்ரம் முதலிய மத உட்பிரிவுகளும் கூட இருந்ததற்கான ஆதாரங்கள் கீழ்கண்ட நூல்களிலிருந்து அறியக் கிடைக்கின்றன.

"ஸித்தாந்தஶேகரம்" என்ற நூலின் "ஆகமார்ச்சன விதானம்" என்ற பகுதியில்,

> "ஶைவம் ச வாஶுபாதம் ச ஸளஃ சூஹூதகம் தயா ॥ ச
> சதுர்யூா ஸஉயா: ஷிஹா: தேஷு ஶைவம் வருயாநகஃ ।
> ஶைவம் வாஶுவதம் ஷோஉம் ஶாகூஷம் ச சதுர்விபூயஃ ॥ ரு॥
> தேஷு ஶைவம் ஶூஹம் ஜ்ஞேயம் ரளஜ்ரம் வாஶுவதாஓிகஃ ।
> ஶைவம் வூநஶகதுஹெூஉம் ஷிஃஷாஜம் உக்ஷிணம் தயா ॥ சு ॥
> வாஉம் ஒிஸ்ரஃ ஐதி ஜ்ஞேயம் தேஷு ஷிஃஷாஜஃ உத்தஉஃ ।"[2]

என்று காணப்படுகிறது.

இதுபோலவே ஸ்ரீமத் காமிகத்தில்,

> "மாரூஙம் ஷூதந்த்ரம் ச ஹௌரவம் வாஉதந்த்ரகஃ ॥ ககச ॥
> காவாஷம் வாஞுநாகும் ச ஶாகூஷம் - கூஷஶாஷ்லகஃ ।
> தந்த்ரம் வாஶுவதம் வாநூக் வூராணம் யஉூஶாஷ்லகஃ ॥ககரு
> ஐதிஹாஸம் ஷஙஜம் ச ஜ்ஞேூஜூஷ்ஸாஉஸஞ்ஜ்ஞகஃ ।
> கூயவூணம் தயா ஸளஃ சூஹூதம் உதஒேவ ச ॥ ககசு ॥"[3]

என்று காணமுடிகிறது.

இவ்வாறாக நமது பழம்பெரும் பாரதத்திருநாட்டில் பல ஸமயங்களும், ஸம்ப்ரதாயங்களும், மதங்களும் எங்கும் பரவியிருந்ததால், அந்தந்த ஸம்ப்ரதாயங் களுக்கும், அந்தந்த மதங்களுக்கும் பரம-ப்ரமாணமாய்த் திகழும் நூல்களும் ஆகமம் என்று அழைக்கப் பட்டனவெனத் தீர்மானமாய்ச் சொல்ல நம்மால் இயலும்.

---

[2] ஸித்தாந்தஶேகரம், பக் - *105*

[3] காமிகாகமம்.பூர்வபாகம், பக் -*7*

இப்புண்ணிய பாரததேஶத்தில் வேதங்கள், ஆகமங்கள், இதிஹாஸங்கள், தர்மஶாஸ்த்ரங்கள் எனப் பல்வேறானநூல்கள் மிகப் பழமை வாய்ந்தவையாய்த் திகழ்கின்றன. அவற்றுள் வேதநூல்களுக்கு நிகமம் என்ற பெயரும், ஆகமநூல்களுக்குத் தந்த்ரம், ஸம்ஹிதா, (ஸித்தாந்தம்) ஆகிய பெயர்களும் ப்ரஸித்தமான முக்கியப் பெயர்களாய்த் திகழ்கின்றன.

பல்வேறு ஸம்ப்ரதாய நூல்களுக்கும் ஆகமம் என்ற பெயர்

ஆகமம் என்ற சொல் வெவ்வேறான பல ஸம்ப்ரதாய நூல்களுக்கும், பல பொருளில் - பல விளக்கங்களோடு பயன்படுத்தப்படுவதை நம்மால் காண முடிகிறது. ஆகமம் என்ற சொல்லால் வேதநூல்கள் சுட்டிக் காட்டப்படுவதை வடமொழி இலக்கணநூலாகிய மஹாபாஷ்யம் என்ற நூலில் பார்க்கலாம்.

'ஆகம: கல்வபி'[4] என்ற வரிக்கு 'ஆகம இத்யனேந ஶ்ருதி:'[5] என்று (பொருள்; ஆகமம் என்ற சொல்லினால் ஶ்ருதியாகிய வேதம் எனப் பொருள்கொள்ளப்படவேண்டும்) உத்யோதம் எனும் உரை விளக்குவதைக் காணலாம்.

வேறுசில இடங்களில், வேதங்களைக் காட்டிலும் பிறநூல்களை ஆகமம் எனும் சொல்லால் குறிப்பதைக் காணமுடிகிறது. அதாவது,

'ஶைவாஶ்ச வைஷ்ணவாஶ்சைவ ஸௌரா: ஶாக்தாஶ்ச யேந ச ।
பாஞ்சராத்ராஶ்ச ஆகமாஶ்ச ப்ரணீதா: ஶங்கரேண து ॥'[6]

என்றும் அறிய முடிகிறது.

---

[4] பாதஞ்ஜல வ்யாகரண மஹாபாஷ்யம், ஆன்ஹிகம் -*1*, பக் -*23*

[5] பாதஞ்ஜல வ்யாகரண மஹாபாஷ்யம், ஆன்ஹிகம் -*1*, பக் -*24*

[6] ஸித்தாந்தஶேகரம். , பக் - xii

ஶப்தகல்பத்ருமம் எனும் அகராதியானது ஆகமம் என்ற ஶப்தத்திற்கு 1. ஶாஸ்த்ரம், 2. வருதல், 3. பெறுதல், 4. ஈட்டுதல், 5. ஸாக்ஷிபத்ரம் முதலியன, 6. வடமொழி இலக்கண நிகழ்வுகளில் பகுதிக்கோ விகுதிக்கோ திரிபு ஏற்படாதவாறு அவற்றினருகில் முளைக்கும் எழுத்து, 7. ஶாஸ்த்ர அறிவு என ஏழு பொருள்களைத் தருகிறது.

‘ஆமஃ = ஶாவஜாகுஃ, ஆமகநஃ, வுாவதி:, உவாஜூநஃ, ஸாக்ஷிவகுாஜி:, வுகூதி-வுதூய-கூஙுவவாதி-காயபூஃ, ஶாவூ ஜூாநஃ’.[7]

ஆகமம் என்றால் 1. உபதேஶ பரம்பரை, 2. ஸம்ப்ரதாயம், 3. மஹாபாஷ்ய கர்த்தாவாகிய பதஞ்ஜலியின் வசனம் என்று பொருள் என மஹாபாஷ்ய நூலில் உத்யோத உரையாசிரியர் ஸ்ரீநாகேஶர் குறிப்பிடுகிறார்.

‘ஆமஃ = உவஷெஶவாஜூரா, ஸஜூஊாயஃ, ஹாஷ்யோக்கி:’[8]

இவ்வாறாக ஆகமம் எனும் சொல் பலதரப்பட்ட பலபொருள்களில் கையாளப்படுவதை நாம் உறுதிசெய்து கொள்ளலாம்.

ஆகமம் சொல் - பலவாறான பகுப்புகளும், விளக்கங்களும்

I. கடவுளாரின் தன்மையை; நிலையை விளக்கவல்ல சொற்கட்டுகளுக்கு ஆகமங்கள் எனப் பெயர் எனப் பெரியோரின் கருத்தாய் உள்ளது. அதாவது “மேன்மைக்கும் மோக்ஷத்திற்குமான உபாயங்களை அறிவிக்கும் காரணிகள் ஆகமங்கள்” என தத்வ வைஶாரதீ எனும் நூலில் வாசஸ்பதி மிஶ்ரர் ஆகமச் சொல்லின் விளக்கத்தை இவ்வாறு தருகிறார்.

---

[7] ஶப்தகல்பத்ருமம். , பக் - 165

[8] பாதஞ்ஜல வ்யாகரண மஹாபாஷ்யம், உத்யோதः, பக் -145, 161

"ஆமச்ச்தி = ஊர்ஜிஏ ஆஶொஹதி யஸ்மாக் அஸ்யுஉய-நிஃஶ்ரெயஸ -உபாயாஃ ஸஃ ஆமஃஃ"9

(உலகியல் உயர்விற்கும், மோக்ஷத்திற்குமான வழிமுறைகள் நமது அறிவினை எந்த நூலின் வாயிலாக எட்டுகின்றனவோ அது ஆகமம்.)

II. காஶ்மீரஶைவத்தின் ப்ரத்யபிஜ்ஞா ஸித்தாந்தத்தினைத் தழுவிய 'ஸ்வச்சந்தோத்யோதம்' எனும் நூல் ஆகமச் சொல்லின் பொருளை, இவ்வாறாய் விளக்கும். - பரமேஶ்வரனது தன்மையை - நிலையை, வேறு படாதவாறு முழுமையாக விமர்ஶனம் செய்வது = வெளிப் படுத்துவது எதுவோ அதுவே ஆகமம்.

பராஶக்தியானவளே (உண்மையில்) பரமேஶ்வரனது நிலையை விமர்ஶிப்பதால் பராஶக்திக்கே ஆகமம் என்று பெயர். இந்த விஷயத்தினை நாம் உணர உபாயமாக உள்ளது ஶாஸ்த்ரம் தான். எனவே அப்படிப்பட்ட சொற் கூட்டமே (= ஶாஸ்த்ரமே) பிற்பாடு ஆகமம் என வழங்கப்படுகிறது என்பதை கீழே காணும் ப்ரமாணத்தால் உணரலாம்.

"ஆ=ஸமந்தாக், மஃயதி=அபெஹெந விம்ருஶதி, பாரமெஶம் ஸ்வரூபஏ இதி ஆகமா பராஶக்திஃ ஏவ ஆமஃஃ। தத்ப்ரதிபாதகஃ து ஶப்தஸந்தூஃ । தஉபாயகவாக் ஶாஸ்த்ரஸ்ய"[10]

எனவே (அ) ஸ்வச்சந்த உத்யோதத்தின்படி ஆகமம் என்பதன் முக்கியப்பொருள் பரஶக்தி

---

[9] குமாரதந்த்ரம் - முன்னுரை, பக்.2

[10] ஸ்வச்சந்ததந்த்ரம் I, ஸ்வச்சந்த உத்யோதம், பக்.எண்.229

என்றும், அப்பொருட்களை விளக்கவைக்கும் நூல்கள் உபசாரமாய் ஆகமம் எனச் சொல்லப்-படுகின்றன என்றும், (ஆ) வாசஸ்பதி மிஶ்ரரின் விளக்கப்படி நூல்களுக்கே ஆகமம் என்பது முக்கியச் சொல் என்றும் புரிந்துகொள்ளமுடிகிறது.

III. இவற்றைத் தவிரவும், முற்றறிவினைக் கொடுப்பதே ஆகமம் = 'ஆ=ஸஃஞாக், கூய௨ஂ மஃயதி = ஆமஃ'[11] என்றும்,

பரம்பரை பரம்பரையாக அறியப்பட்டதே ஆகமம் = 'பாரஂபரயா ஆமதஃ ஆமஃ'[12] என்றும்,

வடமொழி இலக்கணப்படிச் ''செல்லுதல் எனும் பொருளுடைய அனைத்து மூலவினைச் சொற்களுக்கும் - தாதுக்களுக்கும், அறிதல் என்ற பொருளும் உண்டு'' - என்றிருப்பதால், ''ஆங்'' என்ற உபஸர்கத்தோடு கூடிய ''கம்ல்..'' என்ற மூலவினைச் சொல்லிற்குச் ''செல்லுதல்'' என்பதோடு மட்டுமல்லாமல் ''அறிதல்'' என்ற பொருளும் உண்டு. எனவே ஆ= முழுமையான, கம: = அறிவு, அதாவது முற்றறிவே ஆகமம் -

'யெ மதுயடூகாஃ தெ ஜூாநாயடூகாஃ ஐதுூக்ஷூா ஆஜ்-வூவடூகஸூ கூஸூ 'மஃண' - யாதூநிஷூஜஸூ ஆமஃஶாஷூஸூ வூணடூஜூாநடீ ஐதி கூயடூஃ பொயூதெ'

என்றும், பலவாறானப் பகுதி - விகுதிப் பகுப்புக்களும், விளக்கங்களும் காணக் கிடைக்கின்றன.

---

11 ஸித்தாந்தஶேகரம் - முன்னுரை, பக். X

12 ஸித்தாந்தஶேகரம் - முன்னுரை, பக். X

ஆகமம் - எழுத்துக்களின் விளக்கம்

பகுதி - விகுதிகளின் பகுப்பு, (ப்ரக்ருதி-ப்ரத்யய விவேசனம்) தொகைச் சொற்களின் விளக்கம் - போன்றவை இலக்கணம் சார்ந்த விவரணங்களாகும். எழுத்துக்களை மையமாகக் கொண்டு அளிக்கப்படும் - பெறப்படும் விளக்கங்கள் நிருக்தம் என்ற ஶாஸ்த்ரத்தினைச் சார்ந்தவை.

இனி, நிருக்தரீதியிலான விளக்கத்தினைக் காண்போம். **'மஹாஸ்வச்சந்த தந்த்ரம்'** எனும் நூலின்படி **ஆ, க, ம** என்ற மூன்று எழுத்துக்களும் ஒன்று சேர்ந்து **"ஆகம"** என்ற சொல் உண்டாயிற்று. அம்மூன்று எழுத்துக் களும் மூன்று வெவ்வேறு சொற்களின் முதலெழுத்துக் களாகும்.

அதாவது **ஆகதம், கதம், மதம்** என்ற மூன்று சொற்களின் முதல் எழுத்துக்கள் ஒன்றுசேரவே **'ஆகமம்'** என்ற ஒரேசொல் உருவாயிற்று. எனவே முதல் மூன்று சொற் களுக்குத் தனித்தனியே என்னென்ன பொருள்களோ, அவை மூன்றுமே 'ஆகம' என்ற ஒரே சொல்லின் பொருளாய் அமைந்துவிட்டன.

'ஆகதம்' என்றால் வந்தது என்றும், 'கதம்' என்றால் 'சென்றது' என்றும், 'மதம்' என்றால் 'ஏற்புடையது' என்றும் பொருளானபடியால், 'எந்தவொன்று வந்ததாயும், சென்றதாயும், ஏற்கப்பட்டதாயுமுள்ளதோ அது ஆகமம். அதாவது 'ஆகமம்' அப்படிப்பட்டதே என்று தெளிவாகிறது. இதனை,

"𑌆𑌗𑌤𑌂 𑌶𑌿𑌵𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌗𑌤𑌂 𑌚 𑌗𑌿𑌰𑌿𑌜𑌾𑌨𑌨𑍇 ।
𑌮𑌤𑌂 𑌚 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌾𑌗𑌮 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇[13] ॥"

என்ற 'மஹாஸ்வச்சந்த தந்த்ர' வரியிலிருந்து அறியலாம்.

---

[13] குமாரதந்த்ரம் முன்னுரை, பக் - 1

எனவே ஐந்துமுகக்கடவுளான பரமேஶ்வரனிடமிருந்து தோன்றிவந்து, மலைமகளைச் சென்றடைந்து, மஹா விஷ்ணுவுக்கு ஏற்புடையதாய்த் திகழும் காரணத்தாலேயே 'ஆகமம்' என்ற திருப்பெயர் ஏற்பட்டதை அறியலாம். எனவே ஆகமங்கள் ஶிவபெருமானிடமிருந்து வந்தவை = தெரிந்து கொள்ளப்பட்டவை என்பது தீர்மானம்.

இதுவரை அலசப்பட்ட விளக்கங்களிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால் - மேற்சொன்ன விளக்கங்கள் பொருந்தக்கூடியவையெல்லாம் 'ஆகமம்' என்று ஆகிவிடமுடியாது. மாறாக 'ஆகமம்' என்று எவை ஏற்கனவே அழைக்கப்படுகின்றனவோ, அவைகளுக்கு மேற்சொன்ன விளக்கங்கள் பொருந்தும் - என்று புரிந்து கொள்ளவேண்டும்.

மேற்கண்ட தொகைச்சொற்களின் விளக்கங்கள், சொற் பகுப்புக்கள், எழுத்துவிளக்கங்கள் ஆகிய அனைத்தையுமே ஒருசேரச் சிந்தித்தால், 'ஆகமங்கள் ஶிவபெருமானின் ஐந்துமுகங்களிலிருந்து வெளிப்பட்டதாயும், மலைமகளைச் சென்றடைந்ததாயும், மஹாவிஷ்ணுவிற்கும் ஸம்மதமான தாயும், பரமேஶ்வரனுடைய ஸ்வரூபத்தினை விளக்குவ தாயும், வாழ்வியல் முன்னேற்றத்திற்கும் வீடுபேறுபெறவும் வழிமுறைகளைப் போதிப்பனவாயும், முழுமையான அறிவினைத் தருவனவாயும், உபதேஶ பரம்பரையில் பெறப் பட்டதாயுமுள்ள சொற்கூட்டங்களின் அமைப்பாய்த் திகழ்வன' என்பதனைப் புரிந்துகொள்ளலாம்.

எனவே 'ஆகமம்' எனும் சொல் 'காரணஇடுகுறி' 'யோகரூடம்' ஆகும்.

எண்ணில் ஆகமங்கள் இயம்பிய இறைவன்

வேதங்களிலிருந்து தனித்துத் திகழும் ஆகமங்கள் 1.ஶைவாகமங்கள் 2.வைஷ்ணவாகமங்கள் 3.ஶாக்தாகமங்கள் என்றவாறு பலவாறாய் வேறுபட்டுத் திகழ்கின்றன.

"ஶைவம், வைஷ்ணவம், ஸௌரம், ஶாக்தம், காணாபத்யம் என அனைத்து ஆகமங்களுமே ஶங்கரனாகிய இறைவனால் அருளப்பட்டவை" என்ற குறிப்பு,

ஶைவாஶ்ச வைஷ்ணவா: சைவ ஸௌரா: ஶாக்தாஶ்ச யேந ச ।
காணாபத்யாஶ்ச ஸூக்ஷ்மாஶ்ச ப்ரணீதா: ஶங்கரேண து ॥[14]

என்றவாறு அறியப்படுகிறது. மேற்படி இந்த வாக்யத்திலிருந்து ஐந்துவகைப்பட்ட ஆகமங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

எனவே இவ்வாறாக, அந்தந்த மதத்தின், அந்தந்த ஸமயத்தின், அந்தந்த ஸம்ப்ரதாயத்தின் ப்ரமாணமாயும், வேதங்களைத் காட்டிலும் தனித்துமுள்ள நூல், அவரவர் வழக்கில் ஆகமம் என்று குறிக்கப்பட்டதாய்ப் புரிந்து கொள்வதில் தவறில்லை எனத் தெரிகிறது.

ஶைவமதமும் ஶைவாகமங்களும்

தென்னிந்தியா பல திருக்கோயில்களால் நிரம்பப் பெற்றது. அதிலும் தமிழகம் குறிப்பிடத்தக்க விஶேஷமான திருக்கோயில்களால் நிரம்பியது. அத்திருக்கோயில்களுள் ஶைவத்திருக்கோயில்களுக்கு ஶைவாகமங்கள் ப்ரமாண நூல்கள். ஶிவபெருமானை முக்கியமாயும் மையமாயும் கொண்ட வழிபாட்டினையே ஶைவாகமங்கள் போதிக்கின்றன. ஶைவ ஸம்ப்ரதாயத்தில் ஶிவபெருமானே பரமான தெய்வமாவார்.

---

[14] ஸித்தாந்தஶேகரம், முன்னுரை, பக்.எண். xii

பாரததேஶத்தில் ஶிவபெருமானை வழிபடும் பரம்பரை - முறை பன்னெடுங்காலமாக நிலவி வருவதை பல்வேறு நூல்களும், பல்வேறு கற்சிலைகளும், கல்வெட்டுகளும், ஓவியங்களும் இன்னும் பலவித மறுக்கமுடியாத சான்றுகளும் உறுதிசெய்கின்றன. மேலும், மொஹஞ்ஜதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் நிகழ்ந்த அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப் பெற்றவைகளின் அடிப்படையில் பார்க்கும் பொழுது "ஐயாயிரம் வருடங்களுக்கும் முன்பே ஶிவனை வழிபடும் ஸம்ப்ரதாயம் இருந்ததெனவும், அம்முன்னோர்கள் ஶிவனை பஶுபதி வடிவத்தில் ஆராதித்தனர்' என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

காஶ்மீரம் முதற்கொண்டு கன்யாகுமரி வரை பரவி விரிந்த பாரததேஶத்தில் காஶ்மீரஶைவம், வீரஶைவம், காளாமுஶைவம், காபாலிகஶைவம், பாஶுபதஶைவம், ஸித்தாந்தஶைவம் என்பதாகிய அனைத்து மதங்களிலும், ஶிவபெருமானை வழிபடும் முறைமை ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருவது அனைவராலும் அறியப்பட்ட ஒன்றாகும். அனைத்துவிதமான ஶிவாலயங்களுக்கும் ஶிவாகமங்களே ப்ரமாணமானவை.

ஶைவம், பாஶுபதம், ஸோமம், லாகுலம் என ஶிவப்ரதானமான ஸமயம் நால்வகையாகும் என்று முதலில் ஸித்தாந்தஶேகரம் எனும் நூலிலிருந்து அறிந்தது போலவே ஸ்ரீமத் காமிகாகமத்திலிருந்தும் அறியமுடிகிறது. அந்த நால்வகை ஸமயங்களுள் ஶைவமதத்தில் 1. வாமம் 2. தக்ஷிணம் 3. ஸித்தாந்தம் என மூன்று பிரிவுகள் குறிப்பிடப் படுகின்றன.

1. காபாலிகம், காளாமுகம், அகோரம் முதலிய ஸமயங்களும், அவற்றின் ஆகமங்களும் வாமம் என்ற பிரிவினுள் அடங்குகின்றன.

2. மாலினீவிஜயம், ஸ்வச்சந்தபைரவம் முதலிய ஆகமங்களும் அவற்றின் ஸமயங்களும் **தக்ஷிணம்** என்ற பிரிவினுள் அடங்குகின்றன.
3. காமிகம் முதற்கொண்டு வாதுளம் ஈறான ப்ரஸித்தமான 28 ஆகமங்களும், அவை சார்ந்த ஸமயமும் **ஸித்தாந்தம்** எனும் பிரிவினுள் அடங்குகின்றன.

இவ்வாறாக 'ஶைவம்' என்ற மதத்தினுடைய 'ஸித்தாந்தம்' எனும் பிரிவாகக் குறிப்பிடப்பட்ட 28 ஆகமங்களே "ஶைவஸித்தாந்தங்கள்" என்ற பெயரினை உடையன என்று தீர்மானமாகிறது. அதே 28 ஆகமங்கள் "ஶைவாகமங்கள்" என்றும் ப்ரஸித்தமாக அழைக்கப் படுகின்றன. அந்த 28 ஆகமங்களுக்கு, உபாகமங்கள் என 207 நூல்கள் உள்ளன. அந்த 207 உபாகமங்களுக்கும் கூட, இந்த 28 ஆகமங்களே மூலமானவை = ஆதாரமானவை என்ற படியால், இந்த 28 ஆகமங்களுக்கு 'மூலாகமங்கள்' என்ற மற்றொரு சொல்வழக்கும் உள்ளது.

வைஷ்ணவாகமங்கள்

விஷ்ணு - ஆலயங்களுக்கு வைஷ்ணவாகமங்கள் ப்ரமாணம். விஷ்ணுவை மையமாயும் முக்கியமாயும் கொண்ட ஆராதனை முறையை வைஷ்ணவாகமங்கள் விளக்குகின்றன.

ஶாக்தாகமங்கள்

ஶக்தி கோயில்களுக்கு ஶாக்தாகமங்கள் ப்ரமாணம். ஶக்தியை மையமாயும் முக்கியமாயும் கொண்ட ஆராதனை முறையை ஶாக்தாகமங்கள் விளக்குகின்றன.

ஶைவமதங்களும் - அதன் உட்பிரிவுகளும்

ஸித்தாந்தஶேகரமெனும் நூலில், ஆகமார்ச்சன விதானப் பகுதியில் *1.* ஶைவம் *2.* பாஞ்சராத்ரம் *3.* பௌத்தம் *4.* ஆர்ஹதகம் என நான்கு ஸமயங்கள் முதல் நிலையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் முதலாவதாகிய ஶைவத்திற்கு மறுபடியும் நான்கு உட்பிரிவுகள் இரண்டாம் நிலையில் குறிப்பிடப்படுகின்றன. அவை *1.* ஶைவம் *2.* பாஶுபதம் *3.* ஸோமம் *4.* லாகுளம் என. அதாவது முதலில் சொன்ன ஶைவமதத்துள் இவை நான்கும் உட்சமயங்கள் என்று பொருள். இவை நான்குமே ஶிவனையே வெவ்வேறு முறையில் பிரதானமாகக் கொண்டவை.

இவற்றுள் ஶைவம் என்பது ஶுபமானது: ஶாந்தமானது. பாஶுபதம், ஸோமம், லாகுளம், ஆகிய மூன்றும் ரௌத்ரமானவை. சற்றுக் கடுமையானவை.

மேலே இரண்டாம் நிலையில் குறிப்பிடப்பட்ட ஶைவமானது மறுபடியும் மூன்றாம் நிலையில் 1.ஸித்தாந்தம் 2.தக்ஷிணம் 3.வாமம் 4.மிஶ்ரம் என நான்கு பிரிவுகளாய் வேறுபடுகிறது. இவை நான்குமே கூட, இரண்டாம் நிலையில் விளக்கப்பட்ட **ஶைவம்** என்பதன் உட்பிரிவு களானபடியால், அதை விளக்கவே, **ஶைவத்தின் ஸித்தாந்தம், ஶைவத்தின் தக்ஷிணம், ஶைவத்தின் வாமம், ஶைவத்தின் மிஶ்ரம்** என்று சொல்லவேண்டிய அவசியம் ஏற்படவே, ஶைவத்தின் உட்பிரிவாகிய ஸித்தாந்தம் = **ஶைவ ஸித்தாந்தம்** என்ற சொல்வழக்கு ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீமத்-காமிகாகமத்தின் உத்தரபாகத்தில் ஆசார்யாபிஷேக விதி படலத்தில், மேலே இரண்டாம் நிலையில் குறிப்பிடப்பட்ட **ஶைவம்** மேலே சொன்னது போல நான்காகப் பிரிக்கப்படாமல் 1.வாமம் 2.தக்ஷிணம்

3.ஸித்தாந்தம் என மூன்று உட்பிரிவுகளே உபதேஶிக்கப் பட்டுள்ளன. அதாவது **மிஶ்ரம்** என்ற உட்பிரிவு உபதேஶிக்கப்படவில்லை. அவ்விடத்தில்,

"தஞாவி ஶைவஸிஸாஜஃ ஸவெ்ூஹ்ொாஹ்ூத்தொாத்தஃ ।"[15]

"தஜ்ஸவுூஃயாரீகூதூ ஶைவஸிஸாஜ ஈஸிதஃ ।"[16]

என்று **ஶைவஸித்தாந்த** எனும் சொல் 28 ஆகமங்களைப் ப்ரமாணமாகக் கொண்ட ஶிவஸமயத்தினைக் குறிக்கக் கையாளப்படுவதை உணரலாம்.

இதேபோல ஸ்ரீமத்-காமிகாகமம் பூர்வபாகத்தில் தந்த்ராவதார படலத்தில்,

"ஶிவஸிஸாஜதஜெ்ண வூாஶஞ்ஜும் கஷூணாஉிகூ ।"[17]

என்று '*ஶிவஸித்தாந்த*' எனும் சொல் கையாளப்படுவதையும் காணலாம்.

எனவே '*ஶைவஸித்தாந்தம்*' எனும் சொல் தத்துவத்துறைக்கான பெயர் மட்டுமே என மயங்காது, அது தமிழகத்தில் பரவியுள்ள நமது சமயத்தின் மற்றும் அதன் ஒட்டுமொத்த ப்ரமாணநூல்களின் பெயர் என்று தெளிய வேண்டியது அவசியமாகிறது.

மேற்படி நமது ஸமயத்திற்கும் நூல்களுக்கும் ஸித்தாந்தம் என்ற பொதுப்பெயரும் உண்டு. இந்த நமது ஸமயத்திற்கு ஶிவாகமங்களே ப்ரமாணங்கள் என்பதனை,

"வெஉயஉூாஹியாயிகூாகஃ ஸிஸாஜாவூஃ ஶிவாமஃ ।"[18]

என்ற வரியினால் அறியலாம்.

---

[15] ஶ்லோகம்- 81, ஆசார்யாபிஷேக விதி, ஸ்ரீமத் காமிகம்-உத்தரம்

[16] 119-B, தந்த்ராவதார படலம் ஸ்ரீ மத்-காமிகம் பூர்வம்.

[17] 113-a, தந்த்ராவதார படலம் ஸ்ரீ மத்-காமிகம் பூர்வம்.

[18] ஸித்தாந்தஶேகரம், பக் - xii

ஸித்தாந்த ஶேகர
நூலின்படி
ஸமயவிளக்க அட்டவணை



ஶ்ரீமத் காமிகாகமம் (உத்தரபாகம்) நூலின்படி
ஸமயவிளக்க அட்டவணை



ஶைவாகமங்களை இயற்றியவர்

ஶைவாகமங்களுக்குக் கர்த்தா யார்? என்று சிந்திக்க நேரும்போது கீழ்கண்ட ப்ரமாணவரிகளை நாம் ஸ்மரிக்க வேண்டியது அவசியமாகிறது. ஸ்ரீமத்- ஸுப்ரபேதாகமத்தில் -

"நிஶ்வஸிதஂ யஸ்ய வேதாஃ வாஙூவாஃ ச ஆகமாஃ யஸ்ய ।"[19]

என்றுள்ளது. ஶிவபெருமானின் மூச்சுக்காற்றே வேதங்களாயும், வாக்கானது ஆகமங்களாகவும் திகழ்கின்றன என்று இதன் பொருள். மூச்சுக்காற்றுதான் காதுகளால் கேட்கப்படும் ஒலித்தன்மையை அடைகிறது. அதாவது மூச்சு ஸூக்ஷ்மமான நிலை. அதன் ஸ்தூலநிலையே வாக்கு - ஒலி. எனவே பெருமானின் அபிப்ராயமானது வேதமாக வெளிப் படும்போது ஸூக்ஷ்மமாகவும், அதே அபிப்ராயமானது ஆகமமாக வெளிப்படும் போது ஸ்தூலமாயும் உள்ளதென நாம் தாத்பர்யநிர்ணயம் செய்து கொள்ள வேண்டும்.

ஸூக்ஷ்மத்திற்கும் ஸ்தூலத்திற்கும் பெருத்த வேறுபாடு கிடையாது என்பதால் வேதத்திற்கும், ஆகமத்திற்கும் பெரும் வேறுபாடு கிடையாது என்பதனை பரமேஶ்வரனே ஸ்ரீமத் - வாதுளோத்தரத்தில் விளக்குவதனைக் காணலாம்.

"வெடாயடூ ஹைவ டெவெஶி ! காஂரிகாஂ - ஆமஸெஃ உூநஃ ।
கூயி ஹெஹெந டெ ஹுஷ஁ம் வணிடூதாஃ கூஃஸொ ஃயா[20] ॥"

மேலும் ஸ்ரீமத்- ஸ்வச்சந்த தந்த்ரமானது,

"ஶூஶூஶிஷூவடெ ஹிஃகூா ஹுயம் டெவஃ ஸஃாஶிவஃ ॥
உூவெடூாத்தூவஸெவூாக்யெஹுஹூ஁ ஆயாாஹெஉதஃ[21] ।"
(வேடெஹூாத்தூவஸெஃ வாக்யெஃ தஂதும் ஸஃவதாாயகூ[22])

---

[19] ஸித்தாந்தஶேகரம், பக் -X
[20] க்ரியாஸார:-பாகம்-2, பக் -338- ஸித்தாந்தஶேகரம். பக்-X
[21] ஸ்வச்சந்ததந்த்ரம், பாகம் -2, 31A, 32B., பக்-76
[22] குமாரதந்த்ரம் (ஆமுகம்) பக் -2

என்று குறிப்பிடுவதால் இயற்றியருளியவர், கேட்டவர் என்ற இரண்டுமே பரமேஶ்வரரே என்றாகிறது.

இதேபோல மஹாஸ்வச்சந்த தந்த்ரமானது,

“ஶூமதம் வஞுவக்துாத்ஜு மதம் ச திரிஜாநமே ।
ஊதம் ச வாஸுஜெவஸ்ய தஸ்ாக் ஶூமஃ௴ உஜூதெ[23] ॥”

என்றும், ஸூத ஸம்ஹிதாவானது,

“கூஷாஉஶவுராணாநாம்கூதூா ஸதூவதீஸுதஃ ॥
காமிகாஜிவ்ரஹெஊாநாம் யயா ஜெவொ ஊஹெஶ்வரஃ[24] ।”

என்றும் குறிப்பிடுகின்றன. ஸ்ரீமாதவாசார்யரால் இயற்றப் பட்ட ஸூதஸம்ஹிதையின் தாத்பர்யதீபிகா என்னும் உரையில்,

“காமிக-காரணாதீநாஂ ஶூமஃஸம்ஹிதாநாம் ஶிவெநைவ வ்ரணயநாக் வ்ராஊாண்யெ யயா விஸ்ரஜ்ஃ -”[25]

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ‘‘பரமேஶ்வரரால் இயற்றப்பட்ட காரணத்தால் காமிக-காரணாதி ஸம்ஹிதைகளின் ப்ராமாண்யத்தின் மேல் எவ்வாறு விஶ்வாஸமோ, அதேபோல் ஸத்யவதீயின் மைந்தராகிய வியாஸரால் இயற்றப்பட்ட காரணத்தால் பதினெண் புராணங்களின் மேலும் விஶ்வாஸம் உண்டு’’ என்று பொருள்.

மேற்படி ஆறு ப்ரமாணங்களையும் ஒருசேர எண்ணிப் பார்த்தால், மஹேஶ்வரனின் மூச்சுக் காற்றாகிய வேதத்தின் பொருளே, அம்பிகையின்பாலிருந்த அன்பின் காரணமாக, மறுபடியும் மஹேஶ்வரனின் ஐந்துமுகங்களிலிருந்து சொல் வடிவத்தினை அடைந்து, காமிகம் முதலிய பல்வேறு சிறப்புப்

---

23 குமாரதந்த்ரம் (ஆமுகம்) பக்-1
24 குமாரதந்த்ரம் (ஆமுகம்) பக் -2
25 ஸூதஸம்ஹிதை, ஶிவமாஹாத்ம்ய கண்டம், அத்-1,ஶ்லோ.,11B12A,பக்.8

பெயரோடும், தந்த்ரம், ஸம்ஹிதா, ஆகமம் முதலிய பொதுப் பெயரோடும், கேள்வி பதில் பாணியில் மஹேஶ்வரராகிய **ஸதாஶிவப் பெருமானால்** அருளப்பட்டது எனத் தீர்மானிக்க முடிகிறது. எனவே, ஶைவாகமங்களுக்கு பரமேஶ்வரரே கர்த்தா என ஸித்தமாகிறது.

ஶைவாகமங்களின் பகுதிகள்

ஶைவாகமங்களுள் **மூலாகமங்கள்** இருபத்தெட்டு என்றும் உபாகமங்கள் இருநூற்று ஏழு என்றும் பார்த்தோம். ஒரு முழுமையான பொருளை நான்காகப் பிரித்தால், நான்கின் ஒரு பங்கிற்கு **பாதம்** என்று எவ்வாறு பெயரோ, அதுபோலவே, ஆகமங்களின் கருத்தாகிய மையப்பொருளை அடைந்திட வேண்டி உதவும் உபாயமானது ஒன்றாக இருந்தாலும், அந்த உபாயத்திற்கு ஞானம், க்ரியா, யோகம், சர்யா என நான்கு கூறுகள் அவசியம் என்பதால், ஒவ்வொரு ஆகமத்திற்கும், ஞானபாதம், க்ரியாபாதம், யோகபாதம், சர்யா பாதம் என நான்கு பகுதிகள் காணப்படுகின்றன. எனவே நான்குகூறுகளும் சேராமல் எவ்வாறு ஒரு முழுமைப்பொருள் உண்டாகாதோ, அவ்வாறே நான்கு பாதங்களும் சேராமல் ஒரு முழுமையான ஆகமமோ, அல்லது ஆகமத்தின் கருத்தோ நிறைவுபெறாது எனத் தெளிவாகிறது.

மேற்படி மூலாகமங்களையும், உபாகமங்களையும் தவிரவும் பதினெட்டு பத்ததி நூல்களும், பெரியோர்கள் மதிப்புடன் கையாளும் இன்னும் பல நூல்களும் **ஶைவாகமங்கள்** என்னும் கல்வித்துறையினுள் அடங்கி விடுகின்றன. எனவே, இச்-ஶைவாகமங்களே ஶைவ ஸமயத்தின் ப்ரமாண நூல்கள் எனத் தெளிவுருவோமாக.

[26]இறைவனைத் தரிசிக்க எல்லோருக்கும் உரிமை

“இந்துமத இறைவனைத் தரிசிக்க இந்துக்கள் எல்லோருக்கும் உரிமை உண்டா? கிடையாதா? என்பதுதான் இந்தத் தலைப்பின் கருத்து” என்று எடுத்துக் கொண்டு இவ்வுரையை நிகழ்த்துகிறேன்.

இப்படியொரு கருத்துக்கோவையை நடத்த வேண்டிய அவசியம் என்ன? என்றால், எனக்குத் தெரிந்தவரை, தமிழகத்தில் ஒரு திருக்கோயில் விழாவில் நடந்த கோஷ்டிப் பூசல்தான் காரணம். வீதியுலாவரும் இறைத்திருமேனியை **‘சிலசாரார் தரிசிக்கக் கூடாது’** என்று வேறு சிலசாரார், அவர்களைத் தடுத்துள்ளனர். எனவே **அது சரியா! தவறா!** என்பதைத் தெளிவுபடுத்தவே இக்கருத்துக்கோவை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு மதம் சார்ந்த இதுபோன்ற ஐயம் ஏற்படும்போது, என்ன செய்ய வேண்டும்? நமது சொந்தக் கருத்துக்களைக் கொண்டு அந்த ஐயம்தீர, வழி சொல்வது, என்பது தவறானது. ஏனெனில் **‘மதம்’** என்பது நமக்கெல்லாம் முன்பே, பல காலங்களுக்கு முன்னரே, இறைவனாலோ, இறைத் தூதர்களாலோ, சிலராலோ, பலராலோ அமைக்கப்பட்ட ஒரு அமைப்பு.

அவர்கள் அவ்வமைப்பினை ஏற்படுத்தும்போது, அதற்கென சில நெறிமுறைகளை ஏற்படுத்திவிட்டுத் தான் சென்றிருக்கிறார்கள். ஒரு அமைப்பில் ஐயம் எழும்போது,

---

26 **“இந்திய தேசிய சமதர்ம சங்கம்”**, *30.09.2007* அன்று மாலை, வடபழனி பத்மராம் மஹாலில், ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளின் முன்னிலையில் ஏற்பாடு செய்த **“இறைவனைத் தரிசிக்க எல்லோருக்கும் உரிமை”** என்ற கருத்துக் கோவை நிகழ்ச்சியில், வாசிக்கப்பட்ட கருத்து.

சிக்கல் எழும்போது, நீதிமன்றங்கள் கூட, அவ்வமைப்பின் நெறிமுறைகளைத் தான் முதலில் ஆராய்கின்றன. **'இந்துமதம்'** என்ற அமைப்பின் நெறிமுறைகள் வேதங்கள், ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள், திருமுறைகள், திவ்ய பிரபந்தங்கள் போன்றவையே. எனவே, மேற்படி ஐயம் பற்றியத் தெளிவுபெற நமது நெறிநூல்களை ஆராய்வோம்.

நமது இந்துமதத்தில், ஸநாதனமதத்தில், பல்வேறு சமயப்பிரிவுகள் காணப்பட்டாலும், பெரும்பாலும் எல்லா சமயங்களிலும்,

1. உயிர்களுக்குப் பல பிறப்பு
2. பல்வேறு உலகங்கள்; நம்மால் இப்பிறப்பில் காணமுடியாத உலகங்கள்,
3. ஸ்வர்கம்
4.மோக்ஷம்

போன்றவற்றில் நம்பிக்கை காணப்படுகிறது.

'மோக்ஷம் அல்லது வீடுபேறு' என்பதனை, எல்லாச் சமயங்களும் மிக மிக உயர்வாகவே பேசுகின்றன. அப்படிப்பட்ட **'மோக்ஷம்'**, பிராம்மணர்களுக்கு ஒரு விதமாகவும், பிறருக்கு வெவ்வேறு விதமாகவும் தான் அமையும். அதாவது, இறைவன் அந்தணர்களுக்கு உயர்ந்த மோக்ஷத்தினையும், பிறருக்கு தரந்தாழ்ந்த மோக்ஷத்தினையும் அளிக்கிறார். ஜாதியடிப்படையில் வீடுபேறு தருகிறார் என்று எந்த சமய நூல்களும் கூறவில்லை.

'இந்து மதம்' என்பது சுயலாபத்திற்காகச் சிலர் கூடி உருவாக்கிய **'கட்டுக்கதை'** என்று கூறுபவர்களின்படிக்குப் பார்த்தால், மோக்ஷத்திலும் கூட **'வேறுபாடு'** என்ற கதையைக் கட்டியிருக்கலாமே! ஆனால் அவ்வாறு வேறுபாடு எந்த சமயங்களிலும் கூறப்படவில்லை. இதுவே இந்துமதத்தின் நேர்மைக்கும் ஸநாதனத்தன்மைக்கும் எடுத்துக்காட்டு.

இப்புலன்களுக்குப் புலப்படாத மோக்ஷநிலையில் வேறுபாடில்லையென்றாலும், இவ்வுலகம் சார்ந்த மத நெறிமுறைகளில் வேறுபாடு காணப்படுவது என்பது உண்மையே. எனவே மேற்படி தலைப்பில் சமயநூல்களின் கருத்துக்களை ஆராயவேண்டியது கட்டாயமாகிறது.

இவ்விஷயத்தினை நின்று ஆராய, **“நாம் அனைவரும் வேறுபாடின்றி இறைவனைத் தரிசிக்க விரும்புவது போலவே, இறைவன் நம் அனைவரையும் வேறுபாடின்றி தரிசிக்க; பார்க்க விரும்புகிறாரா? அல்லது வேறுபாட்டின் அடிப்படையில், சிலரைப் பார்க்க விரும்புவதில்லையா?”** என்பதையும் ஆராய வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில், எவருக்கு நம்மைப் பிடிக்கவில்லையோ! நம்மைப் பார்ப்பது பிடிக்கவில்லையோ! அல்லது நாம் அவரைப் பார்ப்பது பிடிக்கவில்லையோ! அப்படிப்பட்டவரை நாம் பார்த்து நமக்கு என்ன ஆகப் போகிறது?

அப்படிப் பார்க்கும் போது, இறைத்திருமேனிகளை சிலர் சில நேரங்களில் பார்த்தலை இறைவன் விரும்பவில்லை. இதோ இறைவனின் திருவாக்கு:-

> ஜெவாநாஂ கூவூநெ காெெ வுர்ஜுஊவடிஜூதுஉஂ ।
> வெஉவிகூயிகெெபஷாவி ஹூஙவிகூயிகெெஃ தயா ॥
> வாவ-கூூர-வாிஹுஷ-நாவஷிகெெஃ ஶுஜூதிஉூஷகெெஃ ।
> உூபஷகெூஃ கூஷுஸஂயூகெெஃ ஶிவஉுவூாவஹாரகெெஃ ॥
> ஶூரூஉுவூாவஹாகெரபஷ ஶூரூயுூஜிுபஷ வாதகெெஃ ।
> யஉி வுஉாஉாகூ உூஜெூத வூஜாயாஃ நிஷ்ஷஂ ஹவெகூ ॥

- பக்கம்:150, நித்ய பூஜா லக்ஷண ஸங்க்ரஹம்.

விற்பனையாக மட்டுமே நினைத்து, விசுவாசமின்றி வேதத்தினைக் கற்றுக்கொடுப்பவர்கள், அறிவு பெருக வேண்டுமென்ற எண்ணமின்றி வெறும் விற்பனை நோக்கில்

நூல்களை விற்பவர்கள், பாவிகள், கொடூரமானவர்கள், நிலை தவறியவர்கள், நாஸ்திகர்கள், வேதத்தினை நிந்திப்பவர்கள். குஷ்டம் போன்ற நோய் வாய்த்தவர்கள், சிவன் சொத்தினைத் திருடியவர்கள், ஆசார்யரின் சொத்தினைத் திருடியவர்கள், ஆசிரியருக்கு துரோகம் புரிந்தவர்கள், மா-பாதகர்கள் போன்றோர், இறைத்திருமேனியைத் தரிசிக்கக்கூடாது, எனவே, மூலவர் இறைத்திருமேனிக்குச் செய்யப்படும் அர்ச்சனைக் காலம், அபிஷேககாலம், நைவேத்யகாலம் போன்ற முக்கிய காலங்களில் திரைபோடுவது அவசியம் என்பது பொருள்.

ஆனால், மேற்படித் தீயவர்கள் தவிர பிறரின் வழிபாட்டினை இறைவன் அப்படியே ஏற்கிறார் என்பது கிடையாது என்பதனை ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதர், **'ஶிவோத்கர்ஷ மஞ்ஜரீ'** எனும் நூலில் தெளிவுபடுத்துகிறார்.

ஶம்பாவிதி தியா யதேவ குஸுமம் க்ஷிப்த்வா ஜநோ முச்யதே
வித்யாமீதி தியா ததேவ விகிரந் ஹஸ்தேக்ஷணோ ஸ்மயம் ।
இத்தம் ஸ்வாஶய வ்ருத்திமாத்ர ரஸிக: பாபாநபேக்ஷஶ்ச ய:
ஸ ஸ்வாமீ மம தைவதம் ததிதரோ நாம்நாபி ந ஜ்ஞாயதே ॥

- ஶ்லோ.2. ஶிவோத்கர்ஷமஞ்ஜரீ

இறைவன் மீது மலரினை இட்டு ஒருவன் மோக்ஷத்தினை அடைகிறான். அதே மலரினை இறைவன் மீது இட்ட மன்மதனோ எரிக்கப்படுகிறான். என்ன காரணம்? முதலாமவன் இறைவனை 'வழிபடுகிறேன்' எனப் பாவித்து மலரிட்டான். மன்மதனோ **'இறைவனைப் பிளக்கிறேன். அவனது மனதினைப் பிளக்கிறேன்'** என எண்ணி மலரிட்டான். 'மலரிடுவது' என்பது ஒன்றானாலும், எண்ண வேறுபாட்டால் பயன் மாறுபட்டது. எனவே, எண்ணத்தினை மட்டுமே; பக்தியை மட்டுமே இறைவன் மெச்சுகின்றான் என்பது கருத்து.

பக்தியிருந்தால் மலரிட்டுத்தான் மோக்ஷமடையவேண்டு-மென்பதில்லை. கல்லினை எறிந்தும் வீடுபேறு பெறலாம் என்பதனைச் சாக்கியநாயனாரின் சரித்திரம் நமக்கு உணர்த்தும்.

பக்தியை உடையவர்களே அடியார். இப்படிப்பட்ட அடியார் என்னசெய்தாலும், இறைவன் அவற்றை திவ்ய பூஜையாக எண்ணி மகிழ்வார் என்பதனை கண்ணப்பர் சரித்திரம் உணர்த்துகிறது என்பதனை ஆதிசங்கரபகவத் பாதாள் சிவானந்த லஹரீயில் குறிப்பிடுகிறார்.

மார்காவர்தித பாதுகா பஶுபதேரங்கஸ்ய கூர்சாயதே
கண்டூஷாம்பு நிஷேசநம் புரரிபோர் திவ்யாபிஷேகாயதே ।
கிஞ்சித்பக்ஷித மாம்ஸஶேஷகவலம் நவ்யோபஹாராயதே
பக்தி: கிம் ந கரோத்யஹோ வநசரோ பக்தாவதம்ஸாயதே ॥

- ஶ்லோ.63. ஶிவானந்தலஹரீ

கண்ணப்பரால் இறைவனின் தலையில் வைக்கப்பட்ட, வழி நெடுகத் தேய்ந்த செருப்பினை இறைவன் கூர்ச்சமாக எண்ணினார். வாயிலிருந்து தன்மேல் கொப்பளிக்கப்பட்ட எச்சில் நீரை இறைவன் திவ்யாபிஷேகமாக பாவித்தார். சிறிதே கடிக்கப்பட்ட எச்சில் மாமிசத்துண்டினை இறைவன் புதிய உணவாக எண்ணி உண்டார். பக்தி என்ற 'பாவம்' எல்லா விதிமுறைகளையும் மாற்றிவிடும் என்பது கருத்து. இவ்வாறு அடியார் என் செயினும் இறைவன் ஏற்பதற்குக் காரணம் பக்தி பாவமேயாகும்.

அடியார்களோடு நின்று விடாமல், அடியார்களின் அடியார்களையும் இறைவன் விரும்புகிறார் என்பதனை, திருக்கன்றாப்பூர் தேவாரத்தில் நாவுக்கரசு சுவாமிகள் தெளிவு படுத்துகிறார்.

எவரேனும் தாம் ஆக இலாடத்து இட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி

உவராதேஅவர் அவரைக் கண்டபோதே
உகந்து அடிமைத்திறம் நினைந்து அங்கு உவந்துநோக்கி
இவர் தேவர் அவர் தேவர் என்று சொல்லி
இரண்டு ஆட்டாது ஒழிந்து ஈசன் திறமே பேணி
கவராதே தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே!

3-ம் பாடல், 183-வது தலம், திருக்கன்றாப்பூர்,
6-ம் திருமுறை, திருத்தாண்டகம்.

பக்தராக, அடியாராக இருந்தால் மட்டும் போதாது! சமயநெறிகளையும், சமயச் சின்னங்களையும் ஏற்றுக் கடைபிடிக்க வேண்டும் என்பதனை அப்பர் சுவாமிகள் இங்கு மறைமுகமாகச் சுட்டிக் காண்பிக்கிறார். இப்பேர்ப்பட்ட அடியார்களின் அடியார்களின் நெஞ்சினை இறைவன் சிறப்பாக விரும்புகிறார் என்பது கருத்து.

இறைவன்பால் பக்தி கொண்ட இப்படிப்பட்ட அடியவர்கள், கர்மவசத்தினால், உலக மரபின்படி தாழ்ந்தவராகிலும், வேறு விதத்தால் நிலைகுலைந்தோராகிலும், வணக்கத்திற்குரியவரே என்பதனையும், திருநாவுக்கரசு சுவாமிகள் கீழ்வரும் தனித் திருத்தாண்டகத் தேவாரத்தால் பறைசாற்றுகிறார்.

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வான் ஆளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லாராகில்,
அங்கம் எலாம் குறைந்து அழுகு தொழு நோயராய்
ஆ உரித்துத் தின்று உழலும் புலயரேனும்,
கங்கை வார்சடைக் கரந்தார்க்கு அன்பர் ஆகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

- 10-ம் பாடல், 6-ம் திருமுறை, தனித்திருத்தாண்டகம்.

ஸ்ரீ கீர்வாணேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் என்பவர் ஒருபடி மேலே சென்று, தாம் இயற்றிய 'ப்ரபஞ்ச-ஸார ஸார-ஸங்கிரஹம்' எனும் நூலில் கூறப்பட்டுள்ள மந்திரங்களை, உண்மையான பக்தராகில், எந்த ஜாதியினரும் பெறலாம் என்பதனை 'க்ரம தீபிகா' எனும் நூலினை ஆதாரமாகக் காட்டி விளக்குகிறார்:-

க்ஷிதிஸுர -நூப -வெஶ்ய - ஶூத்ரஜாநாம்
ஶுநி - வநவாஸி ஞூஹஸ்து - வணிநாம் ச ।
ஜடஹுத - யஜநாதிஹி: ஸநாம்
ஹூதி ஹி கஙகந கஸூவிக் கயணிக் ॥

- பக்கம்:68, ப்ரபஞ்சஸார ஸார ஸங்க்ரஹம்.

ஆனால், இந்து, இந்து அல்லாதவன், ஆஸ்திகன், நாஸ்திகன், மனிதன், தாவரம், ஜங்கமம் போன்ற வேறுபாடுகளை நீக்கி, இறைவன் கோணத்திலிருந்து இவை அனைத்தையும் பார்த்தால், இறைவன் இவை அனைத்தையும் தனது 'ஸாமானிய சன்னிதானமாக'க் கருதி, எல்லாவற்றினையும் தன் கோயிலாகக் கொண்டுள்ளான் என்பதனை திருஞானசம்பந்தப் பெருமானின் தேவாரத் திருவாக்கால் தெளிவுறலாம்.

உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப்படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கு அங்கே நின்றான் கோயில்
வரை சேரும் முகில் முழவ மயில்கள் பல நடம் ஆட வண்டு பாட
விரை சேர் பொன் இதழி தர மென் காந்தள் கை ஏற்கும் மிழலை ஆமே.

பாடல் 4, 1-ம் திருமுறை, 124-ம் தலம் திருவீழிமிழலை. என்று.

எனவே, எல்லாவற்றையும் கோயிலாகக் கொண்டுள்ள இறைவன், அனைவருக்கும் அருள் பாலிப்பார் என்பதில் ஐயமில்லை. அதிலும் பக்தியற்றவர்களுக்கும்; எவருக்கும், இருந்தபடியே அருள்பாலிப்பதில் திருச்செந்தூர், முருகப்

பெருமானுக்கு நிகர் வேறுயாருமில்லை என்பதனை ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் ஸ்ரீஸுப்ரஹ்மண்ய புஜங்கத்தில் எடுத்துரைக்கிறார்.

> 𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌮𑍍 𑌉𑌤𑌾𑌹𑍋 𑌨𑍃𑌣𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌭𑌾𑌜𑌾𑌮𑍍
> 𑌅𑌭𑍀𑌷𑍍𑌟 𑌪𑍍𑌰𑌦𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌾𑌃 ।
> 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑌜𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌪𑌿 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌦𑌾𑌨𑍇
> 𑌗𑍁𑌹𑌾𑌦𑍍 𑌦𑍇𑌵𑌮𑍍 𑌅𑌨𑍍𑌯𑌂 𑌨 𑌜𑌾𑌨𑍇 𑌨 𑌜𑌾𑌨𑍇 ॥

- ஶ்லோ -27., ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்

என்று.

திருச்செந்தூரில் முருகப் பெருமான் தன்னைப் பார்க்கும் நபர் எவரேனும், பக்தராக இல்லாவிட்டாலும், அருளுகிறார் என்றால், இறைவனோ, மதபேதம், ஜாதிபேதம், கருத்து வேறுபாடு போன்ற பல காரணங்களால், ஆலயத்துள் புகுந்து தன்னை தரிசனம் செய்ய இயலாதவர்களுக்கும் அருள் புரியவே, ஆங்காங்கே உள்ள இறைத்திருமேனிகளின் வாயிலாக **'வீதியுலா'** என்ற உற்சவத்தினை மேற்கொள்கிறார் என்பதனை **'உற்சவ விளக்கம்'** எனும் **'பண்டார சாத்திரம்'** பறை சாற்றுகிறது. அதாவது தன்னைப் பார்க்காதவர்களையும், பார்க்க இயலாதவர்களையும், பார்க்கக்கூடாது என்று கருதப்படுபவர்களையும், பார்க்கக்கூடாது என்று வெறுப்பவர் களையும் கூட, கருணையோடு, தான் பார்க்க வேண்டும், தனது பார்வைபட்டு அவர்கள் புனிதராக வேண்டும் என்று எண்ணியே, நாம் தெரிந்துகொள்ள வேண்டியே இறைத் திருமேனிகளை ஊடகமாகக் கொண்டு இறைவன் உலா வருகிறார். இதனை,

> **ஜாதி சண்டாளர் பொல்லாக் கன்ம சண்டாளரென்னும்**
> **போதமில், உயிர்கள் தம்மை கதியினிற் போக்க வேண்டி**
> **ஓதருங் கருணையாலே உமையவ ளோடுங் கூடி**
> **ஆதி பொய்ப் பாச நீக்க அவுத்திரி தொடங்கலுற்றார்.**

பக்கம் 58, மஹோற்சவ விளக்கம், சிவஸ்ரீ குமாரசாமி குருக்கள்.

என்பதிலிருந்து தெளியலாம்.

இவ்வாறு, வேறுபாடின்றி அனைத்துத் தாவ ஜங்கமங்களுக்கும் அருளவேண்டிய இறைவனுல வரும்போது, 'அவ்விறைவனை, இன்னார் தரிசித்தலாகாது என்பது முழுவதுமாக இந்துமத நெறிமுறைகளுக்கு முரணானது.

அதுவும், மஹோற்சவம் போன்றப் பெருவிழா தீக்ஷை எனக் கூறப்படுகிறது. 'தீக்ஷை' என்றால் அனைத்து உயிர்களுக்கும் மோக்ஷப்பேறு அளிக்கும் செயல் என்பது பொருள். மஹோற்சவம் போன்ற பெருவிழா ஸம்புவாகிய சிவபெருமானால் செய்யப்படும் தீக்ஷையாகையால் 'சாம்பவி தீக்ஷை' எனப்படுகிறது.

> ஶாம்° [27]ஶாம்ஶவி ஦ீக்ஷாஹ்ய உத்ஸவம் ஶாஶ்வதாஶ்ரயம் ।
> ஸகல கல்யாணம் ஊர்த்ஜ்வலம் உத்ஸவம் ஜ்ஞானஸம்பவம் ॥

ஶ்லோகம் 2,3A, ஸ்ரீமத் உத்தர காரணாகமம்

என்று ஸ்ரீமத் காரணாகமம் இதனைக் கூறுகிறது.

> 'சக்தி மனத்தாற்புரிகை, சாம்பவி ஞானக் கணினாற்
> சுத்தி செயல் என்றே துணி'

26-வது குறள், பக்-19, சைவ சமய நெறி

என்று 'சைவ சமய நெறி' எனும் நூல் இதனையே சூசகமாகச் சுட்டிக் காண்பிக்கிறது.

'தீக்ஷை' எனும் சைவ சமயச் சடங்கில் தீயினில், வாகீசி வாகீசன் என்ற பெயர் கொண்ட 'அம்மையப்பர்' பூஜிக்கப் பட்டு, தீக்ஷை செய்துகொள்பவன் அவர்களுக்குப் பிள்ளையாகப் பிறப்பதாகப் பாவித்துச் செய்யப்படுகிறது. மஹோற்சவம் என்பது தீக்ஷை எனில், அங்கு வாகீசன் யார்? எனில் ஸோமாஸ்கந்த மூர்த்தியே வாகீசனாவார். வாகீசி யார்?

---

[27] ஶாம்ஶவி

எனில் அருகிலுள்ள உமையே வாகீசியாவாள். தீ எது? எனில் நடுவிலுள்ள கந்தனே சிவத்தீயாகும். தீக்ஷை செய்து கொள்பவர்கள் எவரோ? எனில் அவ்வூரிலுள்ள ஆஸ்திக நாஸ்திகாதி ஸகல ஸ்தாவர ஜங்கமங்களுமே தீக்ஷை பெறுபவை தான் என்று விளக்குகிறது ஸ்ரீமத் காரணாகமம்.

ஸொ௨ாஸ்லநெஶ்லொ வஹ்நிः ஶூ௨ாயூாः வ்ரதயாரிணः ।
௯ஃக்ஷிதாஶ்வ யெ ஹக்ஷாः ஃக்ஷிதாஶ்வ விராமிணः ॥
ஸூயாசாரஸூ்வூாஶ்வ ஸதெ ஶிஷ்யூாஸ்லநெகஶः ।
வாமீஶ்வராகூதிः ஶஜ்ஜுः வாமீஶீ ஹொமஶக்திகா ॥
ஶிவாஃः ஸ்லந ஊதரூக்ஷः ...।

- ஸ்ரீமத் உத்தர காரணாகமம்

மேலும், தீக்ஷை பெறாதவர்கள், கயவர்கள், பக்ஷிகள், மிருகங்கள், மரங்கள், பக்தர்கள், தீக்ஷைபெற்றவர்கள் என்று அனைவருக்குமே மோக்ஷமளிப்பது 'வீதியுலா' எனும் உற்சவம், என்றும் விளக்குகிறது. ஸ்ரீமத் காரணாகமம்.

௯ஃக்ஷிதாநாம் யூ௪தூாநாம் வக்ஷிணாம் ஶூம[28]ஊாஸூணாஶ ।
ஹக்ஷாநாம் ஃக்ஷிதாநாம் ச ஸவெஷாம் ஸஂஸூதி வூ௨ஶ ॥

- ஶ்லோகம் - 95, பக் - 145, ஸ்ரீமத் உத்தர காரணாகமம்

எறும்பு முதற்கொண்டு அனைவரையுமே காக்க வேண்டியே ஆனந்தப்பெருங்கூத்தர் அருணோதயத்தில் உலாவருகிறார் என்பதனையும்,

௯ஸுணொ௨யகாயெ து ஶூநநஸஉவதாணூவஶ ।
விவீமிகாஃ ஸவெஷாஂ ரக்ஷணாயூஂ து யாநகெ ॥

- பக் - 277, மஹோத்ஸவ விதி.

என்று மஹோத்ஸவ விதி கூறுகிறது.

---

[28] ஊாஸூகஶ

இப்பெருமை வாய்ந்த நல்விழாவினைக் காணுதல், மண்ணிற் பிறந்த ஒவ்வொரு மாந்தரின் பெரும் பிறவிப் பயனாகும் என்பதே ஞானசம்பந்தப் பெருமானின் கட்டளை எனச் சேக்கிழார் பெருமான் கூறுகிறார்.

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

1087 -ம் பாடல், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம், பெரிய புராணம்.

கண்ணினால் மதிசூடும் அண்ணலார் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல், மண்ணிற் பிறந்தார் பெரும்பயன் என்று சொல்கிறார். மண்ணிற் பிறந்தார் என்றாரே தவிர வேறுபாடுகளை உரைக்கவில்லை.

இவற்றையெல்லாம் நிரூபிக்கும் வகையில் இன்றும், திருக்கோயில்களில் கொடியேற்றி பேரீதாடனம் செய்யும் போது,

'18-கணங்கள், பூதங்கள், கண்ணிற்குப் புலப்படுபவர்கள், புலப்படாதவர்கள், பௌத்தர்கள், சமணர்கள், வைசேஷிகர்கள், நையாயிகர்கள், மீமாம்ஸகர்கள், நாஸ்திகர்கள் என்று பலதரப்பட்டவரும் வந்து தரிசனம் செய்ய வேண்டும்' என சிவாசார்யார்கள் வேண்டுவது நடைபெறுகிறது.

ருஷ்யாதீநாம் கணதேவதாநாம்
ஸாதகை: பூதகணை: ச ஸார்த்தம் ।
ஆகத்ய ஸர்வம் ஶிவயாகதீர்த்தம்
ஹோமம் யஜ்ஞாங்கம் த்ருஷ்டிதாலயாமி ॥

- என்றும்

"...விஶ்வஉஜாயமூ ஊூஶ்யாஊஶ்யு மஜ்ரு வஜ்ரு ஶஉஷ க்ஷூஹூத வைஶேஷிக நையாயிக ஸாம்ஷக சாவூாக சாணக்ய ... வாத்ஸூாயந ... கஷாஉஶவஈஶாண ஶ்ருதி ஸ்மூதி ஶஹுஈ வஈஶாண தகூஶாஷூ ... ஷஜாமஷ்ஜுதாய ॥ என்றும் அனைவரையும் வரவேற்பார்கள்.

ஶ்ரீஆதிசங்கர பகவத் பாதாளோ உற்சவகாலம் மட்டுமின்றி எக்காலமும் இறைவனின் பார்வை நம்மேல் விழும் என்பதனை ஸௌந்தர்யலஹரி ச்லோகத்தில் கூறுகிறார். அந்த ச்லோகத்தையும் பொருளையும் பார்ப்போம்.

ஊஶா ஆஊவீயஸூா உஈ-உஸித-நீலொத்பல-ஈுசா
உவீயாம்ஸம் தீநம் ஸ்நவய க்ருவயா ஊாவி ஶிவெ ।
சுநேநாயம் யநொா ஷவதி ந ச தெ ஹாநிரியதா
வநெ வா ஹஷூா வா ஸஉகஈநிவாதொ ஹிஉகஈ: ॥

57-வது ஶ்லோகம், ஸௌந்தர்ய லஹரீ

தேவியினுடைய த்ருஷ்டியோ, கொஞ்சம் மலர்ந்த நீலோத்பல புஷ்பம் போல் பாஸித்துவரும். காதுவரை நீண்டதாயும் விளங்கி வருகிறது. இவ்வித மஹிமை தங்கிய த்ருஷ்டியினுடைய [29]கடாக்ஷபாதம் தன்னிடம் ஏற்படவேண்டுமென்று ஆசார்யாள் ப்ரார்த்திக்கின்றார்கள். "ஹே தாயே! கருணையாகிய அம்ருதத்தால் நிறைந்த உன் கடாக்ஷத்தால் என்னையும் நீ ஸ்நானம் செய்து வைக்க வேண்டும். ப்ரும்மாதி தேவர்களும் உன்னை பக்தி செய்து, உன்னுடைய அருகிலேயே இருந்து வருகிறார்கள். நானோ உன் பக்தி யாது என்பது தெரியாதவன்; வெகு தூரத்திலும் இருந்து வருகிறேன். உன் அருகில் வருவதற்கும் எனக்கு யோக்யதையில்லை. நான் பரமதரித்ரன். உன் கடாக்ஷபாதம்

---

[29] கடைக்கண் படுதல்

என்னிடம் விழுந்தால் நான் மஹாதனிகனாயும் புண்யவானாயும், ஆகிவிடுவேன். அது நிச்சயந்தான். அதனால் உனக்கு யாதொரு குறைவும் வராது. 'நீ புண்யம் செய்யவில்லையே, என்னிடம் பக்தியுமில்லையே; உன்னை நான் எப்படி தன்யனாக செய்வது' என்று கேட்கக்கூடாது. புண்யம் செய்தவனோ பாபம் செய்தவனோ எல்லா ஜீவனும் உனக்கு ஸமமல்லவா. சந்த்ரனுடைய கிரணங்கள், காட்டிலும், வீட்டிலும் ஸமமாகத்தானே [30]வ்யாபரிக்கின்றது. சந்த்ரனே காடு, வீடு என்று விஷமபுத்தி இல்லாமல் தன் கிரணங்களை ஸமத்வபுத்தியோடு எங்கும் வ்யாபரிக்கச் செய்வானேயானால், லோகமாதாவான உனக்கு உன் குழந்தைகளிடம் பாபி, புண்யவான் என்ற தாரதம்யமில்லாமல் உன் கடாக்ஷத்தை செலுத்துவது அலங்காரமில்லையா? ஆகையால் என்னிடமுள்ள புண்யபாபத்தை கவனிக்காமல் உன் கடாக்ஷாம்ருதத்தால் என்னை நனைத்து [31]க்ருதார்த்தனாகச் செய்யவேண்டும்'' என்று பரமாசார்யாள் ப்ரார்த்திக் கின்றார்கள். தாயாருக்கு, குழந்தைகளிடமுள்ள குண தோஷங்களை விசாரித்து தாரதம்யத்தைப் பார்ப்பது ஸ்வபாவமல்ல. ஸாமான்யமான ஸ்த்ரீகளுக்கே இவ்விதம் ஸ்வபாவம் இருக்குமேயானால் ஸ்ரீமாதாவான பரதேவதையினிடம் இவ்விதமான ஸ்வபாவம் குடியிருந்து வருவதற்குக் கேட்கவும் வேண்டுமா? இவ்விதமான பாவனையோடு தேவியைப் பூஜிக்கிறவர்கள் தேவீ கடாக்ஷத்தால் பரிசுத்தர்களாக ஆகி மஹா புண்யவான்களாகவும் தனிகர்களாகவும் ஆவார்கள் என்பது ஸித்தமாகிறது''.

- தேதியூர் ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஶாஸ்த்ரிகள் உரை.

---

[30] வியாபித்தல் - படருதல் - பரவுதல்

[31] தன் செயலின் பலனை அடைந்தவனாக

எனவே, இந்து மத நூல்களின் துணையோடு, இறைவனின் கோணத்திலிருந்து நம்மைப் பற்றி ஆராயும் போது,

1. மதவேறுபாடு, ஜாதி வேறுபாடு, ஆஸ்திக-நாஸ்திக வேறுபாடு, தீக்ஷித-அதீக்ஷித வேறுபாடு, இன்னும் சொல்லப்போனால் விலங்கு - மனித வேறுபாடு கூட இறைவனுக்குக் கிடையாது.
2. உயிர்களை உயிர்களாக மட்டுமே இறைவன் எண்ணுகிறார்.
3. அனைத்து உயிர்களிலும் வேறுபாடின்றி உறைகின்றார்.
4. தனது கருணைக்கடைக்கண்களை வேறுபாடின்றி அனைவரின் மீதும் செலுத்துகிறார்.
5. ஆலயங்களிலுள்ள இறைத்திருமேனியின் வாயிலாக அனைவருக்கும் அருள்பாலிக்க மோக்ஷத்தினை அளிக்க உற்சவ காலங்களில் வீதியுலா வருகின்றார்.
6. எனவே இறைவன் அனைவரையுமே பார்வையிடுகிறார்.

போன்றவை தெளிவாகின்றன.

அதே இந்துமதநூல்களின் துணையோடு நம் கோணத்திலிருந்து இறைவனைப்பற்றி ஆராயும்போது,

1. இந்துக்களின் இறைத்திருமேனிகளை தரிசிக்க நாம் இந்துக்களாக இருந்தால் தான், அதாவது, இந்துநூல்களின் மேலும், இந்து இறைவன் மீதும், நம்பிக்கையும், பக்தியும் கொண்டிருந்தால்தான் உரிமை கேட்பது சரியாகும்.
2. இன்னும் சொல்லப்போனால், இந்து மதத்தின் அந்தந்த சமயங்களின் ஒழுக்கங்களுக்குக் கட்டுப்பட்டு, அதன்படியே அந்தந்த இறைவனை தரிசிக்கும்

உரிமையைத் தான் நம் எல்லோருக்கும் இந்துமத நூல்கள் அளித்துள்ளன.

3. இவை அனைத்தும் இருந்தும், முக்கியமாக பக்தி இருந்தும், ஜாதி, இனம், மொழி போன்ற காரணங்களைக் காட்டி உலாவரும் இறைவனைத் தரிசிக்கக் கூடாது என்று ஒருவர் சொன்னால் **"அது தவறு"** என்பது **"சைவ பூஷணம்[32]"** போன்ற நூல்களிலிருந்து பெறப்படுகிறது.

---

[32] ஸ்ஷ்ஷநெ து யயா ஶிவாஶ்ரிஜநம் யஜ்ூவபூஜாதூா வதெகு தஸெூாக்ஷா நரகாணபூவெ து வஸதி: ஸுஹெகவக்ஷாவயிஃ ।
வஞா ஹாவயிரவ்யூதஸூ து தயா ஈஊ்ரகுிவஹூாவயிஃ
வூாஜ்ஞாவாஉய ஜெஶிகம் வஉதி வெஜ்ஜாஉாவூஉஜுகுயஃ ॥௨௦॥

ஶிவஸம்ஸ்காரமென்னும் ஸமயதீக்ஷைபெற்று ஶிவனுடைய அடையாளமாகிய விபூதி ருத்ராக்ஷம் தரித்த ஶிவபக்தர்களை, எவனொருவன் முன்னுள்ள சாதியை நினைந்து நிந்தை செய்கின்றானோ, அவன், பிரம்மாவினுடைய நாளிலே பதினைந்து நாள் நரகத்திற் கிடப்பான் என்றும், அவரிலும் அதிகமான விஶேஷதீக்ஷையுடையாரை நிந்தைசெய்தவன் விட்டுணுவினுடைய நாளிலே ஐந்துநாள் நரகத்திற் கிடப்பான் என்றும், அவரிலும் அதிகமான நிர்வாணதீக்ஷையுடையாரை நிந்தை செய்தவன், ருத்திரனுடைய நாளிலே மூன்றுநாள் நரகத்திற் கிடப்பான் என்றும், அவரினும் அதிகமான ஶைவாசாரியராய், குருபீடமாயிருப்பவரை நிந்தை செய்தவன், ஸதாஶிவவருடத்தில் மூன்றுவருடம் நரகத்தில் கிடப்பானென்றும், இவ்வாறு ஸ்வச்சந்தபைரவம் எனும் உபாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்க.

- *சைவபூஷணம், ச்லோ-20, பக்10-11*

''கொடிக்கவி''யில் வடமொழி இலக்கணம்

'ஶைவஸித்தாந்தம்' எனும் தத்துவத்துறைக்குப் பிறப்பிடம் தமிழகம். மெய்கண்டாரின் 12 சூத்திரங்களை முதலாய்க்கொண்டு அமைந்துள்ளதால் இத்தத்துவத்துறைத் தொடர்பான நூல்களுக்கு **'மெய்கண்ட சாத்திரம்'** எனப் பெயர்.

மெய்கண்டாரின் சிவஞானபோதம் தொடங்கி 14 நூல்கள் **''மெய்கண்ட சாத்திரங்கள்''** என வழங்கப்படுகின்றன. **'ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்'** அருளிய நூல்களுள் **'கொடிக்கவி'** எனும் நூலும் மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றாகும். நான்கே பாடல்களைக் கொண்ட இந்நூல் அமைப்பில் சிறியதாயினும், பல ஶைவஸித்தாந்த தத்துவ விஷயங்களை நுண்ணிய மறைபொருளாய் விளக்குவதோடல்லாமல், அவற்றிற்கும் சடங்குகளாகிய க்ரியைகளுக்கும் உள்ள தொடர்பினையும் தெளிவுபடுத்துகின்றன.

கோயில்களில் உற்சவகாலங்களில் நடைபெறும் **'கொடியேற்று விழா'** வின் தத்துவம் என்ன? என்பதனை விளக்கும் இந்நூலானது, தில்லையில் ஒரு சமயம் கொடியானது கொடிமரத்தில் ஏறாது போகவே, இறைவன் கட்டளைப்படி தில்லைவாழ் அந்தணர்கள் ஸ்ரீஉமாபதி சிவாசாரியாரைப் பணிந்துவேண்ட, அவரும் தில்லை திருக்கோயிலின் கொடிமரத்தருகில் வந்து இந்நான்கு பாடல்களைப்பாட, ஏறாத கொடி ஏறியது. எனவே அப்பாடல்களுக்கு **'கொடிக்கவி'** எனப்பெயர் வழங்கலாயிற்று[33].

கொடிக்கவியின் நான்காவதாகிய கடைசி பாடல் இவ்வாறு அமைந்துள்ளது :-

---

[33] பக்.1,கொ.மூ.உ.வி. முன்னுரை

[34]அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.

"அஞ்செழுத்து, எட்டெழுத்து, ஆறெழுத்து, நாலெழுத்து, ஆகிய நான்கும் திருவைந்தெழுத்தின் வகைகள்[35]. இந்நான்கு மந்த்ரங்களையும் மற்றும் பிஞ்செழுத்துப் பெருவெழுத்து ஆகிய இரண்டினையும் நெஞ்சில் அழுந்தும் படியாய் தியானித்து உபாசித்தால், பேசும் எழுத்தோடு கூட பேசாத எழுத்தும் சேர்ந்து வெளிப்படும் என்பதனைக் குறிப்பால் உணர்த்தும்படிக் கொடிக் கட்டினேன், என்பது இதன் பொருள்'' என்பதனை பல உரைகள் விளக்கியுள்ளன.

இவ்விடத்தில் அஞ்செழுத்து, எட்டெழுத்து, ஆறெழுத்து, நாலெழுத்து ஆகியவை யாவை? அதுபோல பிஞ்செழுத்து, பெருவெழுத்து என்பவை யாவை? பேசும் எழுத்து, பேசா எழுத்து என்பவை யாவை? என்பதனையும் பல உரைகள் விளக்கியுள்ளன.

'பிஞ்சு எழுத்து' என்பதும், 'பேசும் எழுத்து' என்பதும், 'வ' என்பதின் காரணப்பெயர்கள். அதுபோல 'பெருஎழுத்து' மற்றும் 'பேசா எழுத்து' என்பவை 'சி' என்பதன் காரணப் பெயர்கள்.

'சி' மற்றும் 'வ' எனும் எழுத்துக்கள் ஏன் அவ்வாறு குறிக்கப்பட்டன என்பதற்கான காரணங்களை அனைத்து உரையாசிரியர்களும் விளக்குகின்றனர்.

பிஞ்செழுத்து, பெருவெழுத்து, பேசும் எழுத்து, பேசா எழுத்து என்பவற்றின் பொருள்களை ஆராயுமுன்,

---

[34] இப்பாடலுக்கான பொருள் என்ன என்பதை ஒன்பது நூல்களோடு ஒப்பிட்டு நிறுவுகிறது இக்கட்டுரை.
[35] பக்.90, சை.ச.க.

திருவைந்தெழுத்தின் ஐந்து எழுத்துக்களும் தனித்தனியே சுட்டிக்காட்டும் பொருட்களை அறியவேண்டும். அதாவது திருவைந்தெழுத்தில்,

சி என்பதற்கு சிவன்
வ என்பதற்கு அருள்
ய என்பதற்கு உயிர்
ந என்பதற்கு மறைப்பாற்றல் (திரோதாநம்)
ம என்பதற்கு ஆணவமலம், என்றவாறு

பொருள்.

"ஈசன், அருள், ஆவி, எழிலார் திரோதம், மலம்
ஆசில் எழுத்து அஞ்சின் அடைவாம்" என்னும் உண்மை விளக்கம் இதற்குப் பிரமாணம்[36].

மேலே குறிப்பிட்ட திருவைந்தெழுத்தின் ஐந்து பொருள்களுள், அருள் எனும் அருட்சக்தி (பராசக்தி) பிற நான்கு பொருள்களைக்காட்டிலும் பிஞ்சாகவும், பேசுவதாகவும் அமைந்துள்ளதால், அந்த அருட்சக்தியின் பிஞ்சுத் தன்மையையும், பேசும் தன்மையையும் காரணமாகக் கொண்டு, அவ்வருட்சக்தியின் பெயர்ச் சொல்லாகிய "வ" எனும் எழுத்து, "பிஞ்செழுத்து" எனவும், "பேசும் எழுத்து" எனவும் மேற்படி கொடிக்கவி நான்காம் பாடலில் குறிக்கப்பட்டது.

அதாவது பிஞ்சாகிய அருட்சக்தியின் பெயர்ச் சொல்லாகிய 'வ' என்பது பிஞ்செழுத்து எனவும், பேசுவதாகிய அருட்சக்தியின் பெயர்ச்சொல்லாகிய 'வ' என்பது பேசும் எழுத்து எனவும், இப்பாடலில் கையாளப்படுகின்றன. அதாவது பொருளில் உள்ள தன்மைதான் சொல்லில் ஏற்றப்படுகிறது என்று பல உரைகள் கருதுகின்றன.

---

[36] பக்.270,சி.அ.

அதுபோலவே, மேலே குறிப்பிட்ட திருவைந்தெழுத்தின் ஐந்து பொருட்களுள் 'சிவன்' என்ற சிவபெருமான், பிற நான்கு பொருட்களைக் காட்டிலும் பெரியவராயும், பேசாதவராயும் அமைந்துள்ளதால் அந்தச் சிவபெருமானின் பெரிய-தன்மையையும், பேசாத தன்மையையும் காரணமாகக் கொண்டு, அச்சிவபெருமானின் பெயர்ச்சொல்லாகிய 'சி' என்பது 'பெரு-எழுத்து' எனவும், 'பேசா-எழுத்து' எனவும், மேற்படி கொடிக்கவி நான்காம் பாடலில் குறிப்பிடப்பட்டது.

அதாவது, ''பெரியோனா''கிய சிவபெருமானின் பெயர்ச்சொல்லாகிய 'சி' என்பது பெரு-எழுத்து. பேசாதவராகிய சிவபெருமானின் பெயர்ச்சொல்லாகிய 'சி' என்பது பேசா-எழுத்து. அதாவது பொருளில் உள்ள தன்மைதான் சொல்லில் ஏற்றப்படுகிறது என்று பல உரைகள் கருதுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள 8 ஆசிரியர்களின் விளக்கங்களிலிருந்தும் மேற்சொன்ன கருத்துத் தெளிவாகிறது. அதோடுமட்டுமல்லாமல்,

1. அருட்சக்திக்குப் 'பிஞ்சுத்-தன்மை' எப்படி உள்ளது? எப்போது உள்ளது ?
2. அருட்சக்திக்குப் 'பேசும்-தன்மை' எப்படி உள்ளது? எப்போது உள்ளது ?
3. சிவபெருமானுக்குப் 'பெரிய-தன்மை' எப்படி உள்ளது? எப்போது உள்ளது ?
4. சிவபெருமானுக்குப் 'பேசாத்-தன்மை' எப்படி உள்ளது? எப்போது உள்ளது ?

என்பனவும் தெளிவாகின்றன. அவற்றை இனி பார்ப்போம்.

பிஞ்செழுத்தென்னும் வகாரமாகிய பராசக்தியையும், மேலைப் பெருவெழுத்தென்னும் சிகாரமாகிய

சிவத்தையும், தன்னுடைய இருதயத்திலே வைக்கில் **'பேசுமெழுத்துடனே பேசாவெழுத்தினையும் கூசாமற் காட்டக் கொடி'** பேசுமெழுத்தென்னும் வகாரமாகிய சக்தியும், பேசாவெழுத்தென்னும் சிகாரமாகிய சிவமும் இரண்டறக் கூசாமல் அழுத்துவிக்கக் கொடிகட்டினேன் என்க.

பக்.738 மெ.சா.மூ.உ

"பிஞ்செழுத்து-வகரம். பெருவெழுத்து-சிகரம். இடையினத்தில் மொழிமுதலாகும் யகரமும், வகரமும் திருவைந்தெழுத்தில் முறையே ஆருயிரின் அடையாளமாகவும், திருவருளின் அடையாளமாகவும் நிற்கின்றன. இவற்றுள் வகரம் முன்னிற்கின்றது திருவைந்தெழுத்தில், ஆனால் நெடுங்கணக்கில் நாலாவதாக நிற்கின்றது. இடையெழுத்தாறில் யகரம் நீங்கலாகப் பார்ப்பின் வகரம் நடுவெழுத்தாகும். "சிவ சிவ" என்பதில் வகரம் நடுவெழுத்தாக நிற்பதும் காண்க. இதுவே **"உடையாளுன்றன் நடுவிருக்கும்"** என்னும் உண்மையாகும். பிஞ்சு-மென்மை; இளமை. பெருவெழுத்து - சிகரம். பெருமைமிக்கவெழுத்து; பெருநிறைவெழுத்து. இதன் கண் ச்+அ+இ+ என ஒருமெய் எழுத்தும், இரண்டுயிரெழுத்தும் அமைந்துள்ளன. அவை முறையே சரண், அவன், இவன், என்னும் சொற்களின் முதலெழுத்துக்களாகும். சரண் என்பது திருவடிப்புகலையும், அவன் என்பது முதல்வனாகிய ஆண்டானையும், இவன் என்பது ஆருயிராகிய அடிமையையும் குறிப்பனவாகும். இவற்றாலும் சிகரம் பெருவெழுத்தாகும்".

- பக். *11*, கொ.மூ.உ.வி, - பக்.*30*, உ.போ.கொ.நெ.உ.

மென்மையான எழுத்தாகிய திருவருட்சக்தியைக் குறிக்கும் வகரத்தையும், உயர்ந்த பெருஎழுத்தாகிய சிவபெருமானைக் குறிக்கும் சிகரத்தையும் நெஞ்சத்திலே பதியுமாறு நினைந்து இடையறாது ஓதுவதால் பேசும் எழுத்தாகிய அருட்சக்தியைக் குறிக்கும் வகரம் பேசா

எழுத்தாகிய சிவத்தைக் குறிக்கும் சிகரத்தை மிக எளிதாக உயிரோடு கூட்டுவிக்கும். அவ்வாறு கூட்டுவிப்பதற்காகக் கொடிகட்டினேன்.

பக். 83, மெ.நூ.ஏ.

பிஞ்செழுத்து ‘வ’ பெருவெழுத்து ‘சி’ பிஞ்செழுத்து, பெருவெழுத்து என்பனவெல்லாம் மந்த்ரசாத்திர பரிபாஷைகள்.

பக்.20, கொ.க

“பிஞ்செழுத்து

சிவாய நம என்பதில் உள்ள வகரம் பிஞ்செழுத்தாகும். வகரம் திருவருட்சக்தியைக் குறிக்கும். இதுவே உயிரோடு கூடிநின்று அவ்வுயிர் பக்குவப்பட்டபின் சிவத்தைக் காட்டுகிறது. பிஞ்சு முதலில் தோன்றி பின்பு பழமாதலைப்போலத் திருவருள் முற்பட்டு நின்று பின்பு சிவத்தைக் காட்டுதலின் வகரம் பிஞ்சு எழுத்து எனப்பட்டது.

பெரு எழுத்து

சிவாயநம என்பதில் உள்ள சிகரம் மேலைப் பெரு எழுத்தாகும். திருவருளின் துணையால் உயிர் இறுதியில் பெறத்தக்க பெரும்பேறு சிவம் ஆகையால் சிகரம் மேலைப்பெரு எழுத்து எனப்பட்டது.

பேசும் எழுத்து

சிவாயநம என்பதில் உள்ள வகரம் பேசும் எழுத்தாகும். திருவருள் ஞானம் உயிரோடு கூடி அறிவு விளக்கம் செய்யும் முறையில் தொடர்புகொள்வதால் பேசும் எழுத்து எனப்பட்டது.

பேசா எழுத்து

சிவாயநம என்பதில் உள்ள சிகரம் பேசா எழுத்தாகும். முத்தியில் சிவமும் ஆன்மாவும் அத்துவிதக்கலப்புற்று இருக்கும் போது உயிர் சிவத்தால் பேரின்பம் நுகரும். ஆனால்

“சிவம், ஆன்மாவால் எந்த விகாரமும் இன்றி இருக்கும். இதனால் சிவம் பேசா எழுத்து எனப்படும்”

பக்.72,மு.தெ.

“சிவத்தை உணர்தற்குத் திருவருள் காரணமாயிருத்தலின் அத்திருவருட்சக்தியின் குறியீடாக விளங்கும் வகரத்தைப் பிஞ்செழுத்து என்றார். அதனால் அடையத்தக்கதும் அதனினூங்கு அடையத்தக்கதொன்று இல்லாததுமான சிவப்பரம்பொருளைக் குறிக்கும் குறியீடான சிகரத்தை மேலைப் பெருவெழுத்து என்றார். திருவைந்தெழுத்தை இடைவிடாது எண்ணுதலின் பயன் உயிர் திருவருளைப்பெற்று சிவத்தை அடைவதாம். இப்பேற்றினைப் பெறவே கொடிகட்டுவதாக ஆசிரியர் அருளுகின்றார். திருவருள் சிவத்தோடு உயிரைக்கட்டுதலால் அதனைப் ‘பேசும்எழுத்து’ என்றார். தான் எவற்றினும் தொடக்குண்ணாததும், தன்னின் மேலாக எதுவும் இல்லாததுமாக விளங்கும் பரம்பொருள் சிவமாதலின் அதனைப் ‘பேசாஎழுத்து’ என்றார்.”

பக், *04*,வி.வெ.கொ.க

பிஞ்செழுத்தாகிய வகாரம் திருவருளைக் குறிக்கும். ஆன்மாக்களின் எளிமையான இயல்புக்கு ஏற்ப எளிதில் பற்றுதற்கு உரிய மென்மை உடையது ஆகலின், அது, பிஞ்சு எழுத்து எனப்பட்டது.

பெருஎழுத்தாகிய ‘சி’ காரம் சிவபெருமானைக் குறிக்கும். பெறுதற்கறிய பொருள்கள் எல்லாவற்றினும் பெரியதாக சிவபரம்பொருள் உள்ளமையால், அதனைக் குறிக்கும் எழுத்து பெருஎழுத்து.

திருவருளின் உதவியின்றிச் சிவனடியைக் கூடுதல் இயலாமை பற்றி, அருளைப் பிஞ்சாகக்காட்டி, அரனைப் பெரியநிலையில் வைத்துக்காட்டினர்.

பக். 268,269 சி.அ.

திருவைந்தெழுத்தில் திருவருளைக்குறிக்கும் வகாரமாகிய எழுத்தினைப் 'பிஞ்செழுத்து' என்றும், சிவத்தைக் குறிக்கும் சிகாரமாகிய எழுத்தினைப் 'பெருஎழுத்து' என்றும் குறிப்பிடுகிறார். பிஞ்சு முற்றினால் நறுங்கனியாகும். அவ்வாறே திருவருளால் சிவானந்தம் விளையுமாதலின் வகாரத்தைப் பிஞ்செழுத்து என்றார். யகாரமாகிய ஆன்மா, வகாரமாகிய அருளிலே ஒடுங்கி நிற்க, அருளும் சிவமுமாகிய வகாரம், சிகாரம் என்னுமிரண்டு மாத்திரமாய் நிற்றல் உண்டு. முடிவில் வகாரமாகிய அருளையும் தன்னிடத்தே அடக்கிக்கொண்டு சிகாரமாகிய சிவம் மாத்திரம் நிற்றலின் பெருவெழுத்து எனக் குறித்தார்.

பக். 90, சை. ச.க.

மேற்படி உரைகளை ஆராய்ந்தால் மூன்று பக்ஷங்கள் = நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. அதாவது மேற்படி உரைகளுள் கொ.மூ.உ.வி, சை.ச.க, மெ.நூ.ஏ., உ.போ.கொ.நெ.உ., மு.தெ., வி.வெ.கொ.க., சி.அ., ஆகிய உரைகள், அருட்சக்தியினிடமுள்ள பிஞ்சுத்தன்மையையும், பேசுந்தன்மையையும் பலமுறைகளில் நிலைநாட்டி, அந்தக் காரணத்தினால் அவ்வருட்சக்தியின் பெயர்ச்சொல்லாகிய 'வ' என்னும் எழுத்தினை பிஞ்செழுத்தெனவும், பேசும் எழுத்தெனவும் நிலை நாட்டுகின்றன. அதுபோலவே சிவபெருமானிடத்தில் உள்ள பெரிய-தன்மையையும், பேசாத் தன்மையையும் பலமுறைகளில் நிலைநாட்டி, அந்தக் காரணத்தினால் அச்சிவபெருமானின் பெயர்ச் சொல்லாகிய 'சி' எனும் எழுத்தினைப் பெருவெழுத்தெனவும், பேசா

எழுத்தெனவும் நிலைநாட்டுகின்றன. இது பொருள் பற்றிய நிலை. முதல் பக்ஷம்-முதல் நிலைப்பாடு.

ஆனால், மெ.சா.மூ.உ., என்ற உரை 'வ' எனும் எழுத்தினை நேரடியாகவே பிஞ்சு எழுத்து எனவும், பேசும் எழுத்து எனவும், அது போல் 'சி' எனும் எழுத்தினை நேரடியாகவே 'பெருவெழுத்து' எனவும், பேசா எழுத்து' எனவும் நிலைநாட்டுகின்றது. இது சொல் பற்றிய நிலை. இரண்டாம் பக்ஷம். இரண்டாம் நிலைப்பாடு.

ஆனால் கொ.க. என்ற உரையோ காரணங்களைக் கூறாமல், 'வ' மற்றும் 'சி' எழுத்துக்களைப் பிஞ்செழுத்து, பெருவெழுத்து என்றெல்லாம் குறிப்பிடுவது 'மந்த்ர சாத்திர பரிபாஷை' என்றுக் கூறிவிடுகிறது. இது மந்த்ர சாத்திரம் பற்றிய நிலை. மூன்றாம் பக்ஷம். மூன்றாம் நிலைப்பாடு.

முதல்பக்ஷத்தில் அருட்சக்திக்குப் பிஞ்சுத்தன்மையை நிலைநிறுத்துவது சிறிது கடினமானதாயும், கற்பனை நிறைந்ததாயுமே உள்ளது. அதற்கான காரணங்கள்:-

1. அருட்சக்தியை 'பிஞ்சு' என்று அழைக்கும் மரபு வேறு எவ்விடத்திலும் காணப்படவில்லை.
2. தவிரவும் அருட்சக்தியைப் 'பிஞ்சு' என்றுக் குறிப்பிட்டால் சிவபெருமானை 'முற்றிய' என்று எதிர்த் தன்மையைக் கொண்க் குறிப்பிட்டிருக்கவேண்டும்.
3. சிவபெருமானைப்'பெரு' என்றுக் குறிப்பிட்டதால், ''பிஞ்சு என்பதற்குச் 'சிறிய' என்று பொருள்'' என்று வைத்துக் கொண்டாலும் கூட, 1.உயிர், 2. மறைப்பாற்றல், 3. ஆணவாதிமலம் ஆகியவையும் கூடச் சிவபெருமானைக் காட்டிலும் 'சிறியன' என்பதால், 'பிஞ்செழுத்து' என்பதற்கு அவைகளையும்

பொருளாகக்கொள்ள வேண்டியச் சூழ்நிலை ஏற்படுகிறது.

4. இதுபோலவே, அருட்சக்தியிடம் விளக்கப்பட்டுள்ள பேசுந்தன்மை உயிருக்கும் உள்ளதால், 'பேசும் எழுத்து' என்பதற்கு 'உயிரின் சொல்லாகிய - ய' என்றும் பொருள்பட வாய்ப்புள்ளது.
5. இதுபோலவே சிவபெருமானிடம் விளக்கப்பட்டுள்ள பேசாத்தன்மை, ஆணவாதி மலங்களுக்கு முக்காலும் பொருந்துமானதால், 'பேசாஎழுத்து' என்பதற்கு, 'ஆணவாதிமலங்களின் சொல்லாகிய-'ம' என்றும் பொருள்பட வாய்ப்புள்ளது.
6. தவிரவும், பொருளின் தன்மைகளை எழுத்துக்களில் ஏற்றிப்பேசும் இம்முறை சுற்றி வளைப்பதாய் அமைந்துள்ளது. எனவே, இம்முதல் நிலை ஏற்புடையதாய் இல்லை.

இரண்டாம்பக்ஷத்தில் 'பிஞ்சு', 'பெரு', 'பேசும்', 'பேசா', என்பன முறையே 'வ' மற்றும் 'சி' எனும் எழுத்துக்களை உரித்துச்சொல்லும் உரிச்சொற்களாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

முதல் பக்ஷத்தில் உள்ள பொருந்தாமை, இந்த பக்ஷத்தில் ஏற்படாவிட்டாலும், 'வ' எனும் எழுத்து 'பிஞ்சு' எனவும், 'பேசும்' எனவும் ஏன் உரித்துச் சொல்லப்பட்டது? 'சி' எனும் எழுத்து 'பெரு' எனவும், 'பேசா' எனவும் ஏன் உரித்துச் சொல்லப்பட்டது? என்ற விபரம் இல்லை?

முதல் இரண்டு பக்ஷங்களிலுமே தெளிவு இல்லாததை மனதிற்கொண்டே மூன்றாவது பக்ஷமானது, 'இவை மந்த்ர சாத்திர பரிபாஷை' என்று ஒதுங்கிவிட்டது. இந்த பக்ஷத்தில் குறை இல்லாவிடினும், 'வ' மற்றும் 'சி' மந்த்ர சாத்திரங்களில்

'பிஞ்சு' என்றெல்லாம் குறிப்பிடப்படுவது தெளிவாக்கப் படாததால் இப்பக்ஷமும் தெளிவற்றதாய் உள்ளது.

அப்படியென்றால், பிஞ்செழுத்து, பெருவெழுத்து, பேசும் எழுத்து, பேசாவெழுத்து என்பனவற்றிற்கெல்லாம் என்ன பொருள் கொள்வது? எனில், பொருளை முன்போலவே கொள்ளலாம். ஆனால், அதற்கான காரணங்கள் மட்டுமே வேறுபடுகின்றன. அவை பின்வருமாறு:-

கொடிக்கவியை இயற்றிய ஸ்ரீ உமாபதி சிவாசார்யார் தமிழ் மற்றும் வடமொழியில் புலமை பெற்று, இரு மொழிகளிலும் நூல்களை இயற்றியவர்[37].

அவரால் இதே பாடலில் 'அஞ்செழுத்து', 'எட்டெழுத்து', ஆறெழுத்து', 'நாலெழுத்து', என்ற இடங்களில், அஞ்சு, எட்டு, ஆறு, நாலு ஆகியவை 'எழுத்து' என்பதின் உரிச்சொற்களாகவே ஏற்கப்பட்டனவேயொழிய, பொருட் தன்மைகளாக ஏற்கப்படவில்லை.

நம் ஐயப்பாட்டிற்கு இடமான பிஞ்செழுத்து, பெருவெழுத்து, பேசும் எழுத்து, பேசாஎழுத்து என்ற ஒவ்வொரு சொல்லிலும் 'எழுத்து' என்ற சொல்லினை அயர்வின்றிச் சொல்லி, அச்சொல்லின் உரிச்சொல்லாகவே 'பிஞ்சு-பெரு-பேசும்-பேசா' என்பவற்றை உபயோகித்துள்ளார்.

தமிழ்மொழியின் இலக்கண அறிவினைக்கொண்டு பார்க்கும் போது 'பிஞ்சு-பெரு-பேசும்-பேசா' ஆகிய தன்மைகள் எழுத்துக்களுக்கு இல்லை எனத் தீர்மானிக்கப் படவே, அவ்வெழுத்துக்களின் பொருளாகிய அருட்சக்தியில் பிஞ்சுத்தன்மையும் பேசும்தன்மையும், அதுபோல,

---

[37] பக்.79, மெ.நூ.ஏ., பக். 1, கொ.மு.உ.வி.

சிவபெருமானிடத்தில் பெரியதன்மையும் பேசாத் தன்மையும் முதல் பக்ஷத்தில் திணிக்கப்பட்டன.

ஆனால் இதற்கான அவசியமே இல்லை. ஸ்ரீ உமாபதி சிவாசார்யார் வடமொழி ஒலி இலக்கணத்தின் படி அவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம் அல்லவா!. அதனை இனிப் பார்ப்போம்.

திருவைந்தெழுத்தில் உள்ள ஐந்தெழுத்துக்கள் சி-வா-ய-ந-ம ஆகியவை. அவற்றுள் உயிரெழுத்துக்களைத் தவிர்த்தால் ச்-வ்-ய்-ந்-ம் என்று மெய்யெழுத்துக்கள் மிஞ்சும். வடமொழி ஒலிஇலக்கணத்தில் ஒவ்வொரு எழுத்தும் உண்டாவதற்கு, அவற்றிற்கு 1. உற்பத்தி இடம், 2. அகத்து முயற்சி=ஆப்யந்தர யத்நம், 3. புறமுயற்சி = பாஹ்யயத்நம் என மூன்று கூறுகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் மேற்கூறிய எழுத்துக்களுக்குரிய புறமுயற்சிகளின்படி அவற்றின் பெயர்களைப் பார்ப்போம்.

	எழுத்து	புறமுயற்சிகளின்படி பெயர்கள்			
	1	2	3	4	5
1	ச்	விவாரம்	ச்வாஸம்	அகோஷம் பேசா	மஹாப்ராணன் பெரு
2	வ்	ஸம்வாரம்	நாதம்	கோஷம் பேசும்	அல்பப்ராணன் பிஞ்சு
3	ய்	ஸம்வாரம்	நாதம்	கோஷம் பேசும்	அல்பப்ராணன் பிஞ்சு
4	ந்	ஸம்வாரம்	நாதம்	கோஷம் பேசும்	அல்பப்ராணன் பிஞ்சு
5	ம்	ஸம்வாரம்	நாதம்	கோஷம் பேசும்	அல்பப்ராணன் பிஞ்சு

இவற்றின் பொருளைப் பார்ப்போம்:-

1. எந்த எழுத்துக்களை உச்சரிக்கும்போது மூச்சுக்காற்று சிறிதுமட்டுமே தேவைப்படுகிறதோ அவை 'அல்ப ப்ராணன்' எனப்படும். அல்பம்=சிறியது=பிஞ்செழுத்து.
2. எந்த எழுத்துக்களை உச்சரிக்கும்போது மூச்சுக்காற்று அதிகம் தேவைப்படுகிறதோ அவை 'மஹா ப்ராணன்' எனப்படும். மஹா(ந்)=பெரியது- பெருவெழுத்து
3. எந்த எழுத்துக்களை உச்சரிக்கும்போது கோஷம் என்ற விசேஷத்தன்மை ஒலியில் ஏற்படுகிறதோ அவை கோஷம் எனப்படும். கோஷம்=பேசும் எழுத்து.
4. எந்த எழுத்துக்களை உச்சரிக்கும் போது கோஷம் என்ற விசேஷத்தன்மையானது ஒலியில் ஏற்படுவது இல்லையோ அவை அகோஷம் எனப்படும். அகோஷம்=பேசாஎழுத்து.

இந்த விளக்கத்தின்படிப் பார்த்தால் பெருவெழுத்தாய் இருத்தலும் பேசா எழுத்தாய் இருத்தலும், 'ச்' என்ற எழுத்தின் சொந்தத் தன்மைகளே ஆகும். எனவே பெருவெழுத்தும், பேசாஎழுத்தும் 'ச்' என்பதே என்பது திண்ணம்.

பிஞ்செழுத்தாயிருத்தலும், பேசும் எழுத்தாய் இருத்தலும் 'வ்-ய்-ந்-ம்' என்ற நான்கு எழுத்துக்களுக்கும் பொதுவான தன்மை. அப்படியெனில் பிஞ்செழுத்தெனவும் பேசும் எழுத்து எனவும், இந்த நான்கினுள் எந்த எழுத்தினைக் எடுத்துக்கொள்ளவேண்டும் எனில்:-

1. மேற்படிப் பாடலில் 'பிஞ்செழுத்தும்', 'பேசும் எழுத்துடனே' என்று ஒருமை காணப்படுவதால், 'வ்-ய்-ந்-ம்' என்ற 4 எழுத்துக்களுள் ஒன்றே ஒன்று தான் கொள்ளத்தக்கது. அது உயர்ந்ததாய் இருத்தல் வேண்டும்.

2. 'வ்-ய்-ந்-ம்' என்று 4 எழுத்துக்களுள் எது உயர்ந்தது என்பதனை மேற்படிஒலிஇலக்கணம் கொண்டு அறிய முடியாததால் அவற்றின் பொருளை ஆராயவேண்டிய அவசியமாகிறது. மேற்படி (பக்-35) உண்மை விளக்கத்தின் பொருள் படி "வ" என்பதன் பொருளாகிய அருட்சக்தியே பிற பொருட்களைக் காட்டிலும் உயர்ந்தது ஆதலால், இவ்விடத்தில் 'பிஞ்செழுத்து' என்பதும் 'பேசும் எழுத்து' என்பதும் "வ" என்பதே என்பது திண்ணம்.
3. அருட்சக்தி, பிறபொருட்களைக் காட்டிலும் எவ்விதம் உயர்ந்தவள் என்பதைத் தெள்ளப்புரிந்துகொள்ள முதல்பக்ஷத்தில் (பக்-40) கூறப்பட்டுள்ள பொருத்தமான காரணங்களையும் எடுத்துக் கொள்ளலாம்.

இவ்விதமாய் "பிஞ்செழுத்துக்கள்" ஆகிய நான்கிற்கும் வடமொழி ஒலிஇலக்கணத்தின் படி முதலில் பொருள் கொண்டு, பிறகு மேற்கூறிய மூன்றுபக்ஷங்களில் (பக். 40-41) கூறப்பட்ட விளக்கங்களைக் கொண்டு தெளிவுபெற்று, தீர்மானித்தால் எந்தக் கடினமும் இருக்காது.

ஒரு நூலினைப் படிக்கும்போது அந்நூலாசிரியரின் பின்னணிகளையும் தெரிந்துகொண்டு, அப்பின்னணிகளின் அடிப்படையில் அந்நூலினைப் படித்தால் அப்படிப்பு தெளிவுடையதாக இருக்கும் என்பதற்கு மேற்படித் தீர்மானமும் ஓர் உதாரணம்.

ஸ்ரீ உமாபதி சிவாசார்யார் வடமொழி மற்றும் செந்தமிழ் ஆகிய இருமொழிப் புலவரானதால், வடமொழி ஒலி இலக்கணத்தில் உள்ள அல்பப்ராணன், மஹாப்ராணன், கோஷம், அகோஷம் ஆகியவற்றை முறையே பிஞ்செழுத்து, பெருவெழுத்து, பேசும் எழுத்து, பேசா எழுத்து என

மொழிபெயர்த்திருப்பது ஆச்சர்யத்திற்குரியதோடல்லாமல் சுவைப்பதற்கும் உரியதாகும்.

இருமொழிதனையும் விழியெனக் கொள்வோம்
சித்தாந்தத்தின் செம்பொருள் அறிவோம்.

குறியீட்டு விளக்கம்

1. மெ.சா.மூ.உ. = மெய்கண்ட சாத்திரம் - மூலமும் உரையும்.
2. உ.போ.கொ.நெ.உ = உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த போற்றிப் பஃறொடை,கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறிவிளக்கம்
3. மெ.நூ.ஏ. = மெய்கண்ட நூல்களுள் ஏழு
4. கொ.க = கொடிக்கவி
5. கொ.மூ.உ.வி. = கொடிக்கவி மூலமும் உரையும் விளக்கமும்.
6. மு.தெ. = முந்நூல் தெளிவு
7. வி.வெ.கொ.க = வினா வெண்பாவும் கொடிக்கவியும்.
8. சி.அ =சித்தாந்த அட்டகம் .
9. சை.ச.க. = சைவ சமயக் கல்வி 3ம் பகுதி

கும்பாலங்காரம்

கும்பத்தினை அலங்கரிப்பது "கும்பாலங்காரம்" எனப்படும். இங்கு 'கும்பம்' என்ற சொல்லானது, கடம் (குடம்), கலஶம், வர்த்தனீ ஆகிய அனைத்தையும் பொதுவாய்க் குறிக்கும். கும்பாபிஷேகம் முதலிய விஶேஷங்களில் நடைபெறும் "கும்பாலங்காரம்" என்ற நிகழ்ச்சியை அனேகமாக அனைவரும் அறிவர்.

மேற்படி 'கும்பாலங்காரமானது', ஆடம்பரத்திற்காகவும் படாடோபத்திற்காகவும் மட்டுமே செய்யப்படுவதாகவே வேத -ஶாஸ்த்ராதிகளை மட்டுமே கற்றவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் அவ்வெண்ணம் தவறானது.

ஏனெனில் 'ஸ்ரீவாமதேவ பத்ததி' எனும் நூல் கும்பாபிஷேகத்தின் 64 க்ரியைகளைக் குறிப்பிடும் போது,

"ஸவ்ருதிஂஶக ஜஉஂ கஊ கூஂஹாஜ்ஞார ஹவ ஷி"[38]

என்று, 37வது க்ரியையாகக் கும்பாலங்காரத்தினைக் குறிப்பிடுகிறது.

மேலும், கும்பத்தினை வைப்பதற்குத் தான்யங்களைப் பரப்புதல், நூல்சுற்றுதல், வஸ்த்ரம் - கூர்ச்சம் - மாஇலை ஆகியவற்றால் அலங்கரித்தல், ரத்னம் - ஸ்வர்ணம் - ம்ருத்திகைகள் போன்றவற்றை இடுதல், தேங்காயினால் அலங்கரித்தல் போன்றவை சில க்ருஹ்ய - ப்ரயோகங்களிலும் கூட காணப்படுகின்றன. ஆகமஸம்ப்ரதாயத்தில் இவையனைத்தும் மிக மிக விஸ்தாரமாய் விதிக்கப்பட்டுள்ளன.

"உஜுஂ விநா க்ரியா நாஷ்டி" என்ற வாக்கிற்கிணங்க கும்பத்தினை அலங்கரிப்பதற்கு அதிகப்படியாக

---

[38] வாமதேவபத்ததி, ச்லோ.எண்., 114-B, பக்.12

வேதமந்த்ரங்கள், ஆகம மந்த்ரங்கள் ஆகிய இரண்டினையும் உச்சரிப்பது ஆகம ஸம்ப்ரதாயமாகும்.

கும்பத்தின் அளவு, கும்பத்தின் நிறம், கும்பத்தின் உலோக வகை, கும்பத்தின் உருவஅமைப்பு, நூலின் நிறங்கள், நூலின் எண்ணிக்கை, சுற்றப்படும் நூல்களின் இடைவெளி...... என்றவாறு கும்பாலங்காரம் தொடர்பான விஷயங்களைச் சிவாகமங்கள் விரிவாய் விவரிப்பது போல வேறு நூல்கள் விவரிப்பதாய்த் தெரியவில்லை.

கும்பாலங்காரத்தில் மூன்று அம்ஶங்கள் கவனிக்கப் படவேண்டியவை. பாமரன் கூட அலங்கரிக்கப் பட்ட கும்பத்தினைப் பார்த்தவுடன், காரணமே தெரியாமல், பரவசப்பட்ட நிலையினை அடைகிறான். **இது முதல் அம்ஶம்.**

அர்ச்சகரோ கும்பத்தினைக் கும்பமாகப் பார்க்கவில்லை. கும்பத்தின் ஒவ்வொரு பகுதியையும் இறைவனின் ஒவ்வொரு உறுப்பாகவே பாவிக்கவேண்டும் என்று பல சிவாகம நூல்கள் குறிப்பிடுவது போல இறைவனின் உறுப்புக்களாகவே கும்பத்தின் அலங்காரப் பொருட்களைப் பார்க்கிறார்.

கும்பத்தின் அடியில் போடப்படும் ஏழு தான்யங்களும் அர்ச்சகரைப் பொறுத்தமட்டில் தான்யங்களல்ல! சிவபெருமானுக்கு ஆஸனம். சுற்றிலும் சுற்றப்படும் நூல் நாடி நரம்புகளாகும். மேலே போர்த்தப்படும் வஸ்த்ரம் மேற் தோலாகும். கும்பத்தின் வெளிப்புறத்தில் பூசப்படும் செம்மண் பெருமானின் உடலெங்கும் ஓடும் உதிரமாகும். கும்பத்தினுள்ளே வார்க்கப்படும் புனிதநீரானது "மேதஸ்" என்ற தாதுவாகும். உள்ளே போடப்படும் மண்வகைகள் இறைவனின் மாம்ஸமாகும். ஜலத்தில் சேர்க்கப்பட்ட நவரத்னங்கள் பரமேஶ்வரனுக்கு ஶுக்லமாக அமைகின்றன. அதில் வைக்கப்படும் பஹி:கூர்ச்சமோ இறைவனுக்குத்

திருமுடியாகவும் ஆகின்றது. அந்த:கூர்ச்சம் எலும்பாகவும், தேங்காய்த் தலைப்பகுதியாகவும் பத்ரங்கள் ஜடையாகவும் திகழ்கின்றன.

இவ்வாறாகக் கும்பத்தின் அலங்காரப் பொருட்கள் அனைத்தையும் இறைவனின் உடலுறுப்புக்களாகவே பார்த்த அர்ச்சகர், அதனை மேலும் அனுக்ரஹகர்த்தாவாகச் செய்ய, தனது உயிருக்கு உயிராக உள்ள மந்த்ரத்தையே, பரமேஶ்வரனின் உயிராக அக்கும்பத்தில் வைத்து ஆவாஹனம் செய்துவிடுகிறார். அர்ச்சகரின் நிலையிலிருந்து பார்க்கப்பட வேண்டிய **இரண்டாவது அம்ஶம்** இதுவாகும்.

நமது உடல் ஜடமானபடியால், உயிர் வந்து சேர்ந்த பின்பே உடல் இயங்கும். ஆனால் மேற்படிக் கும்பாலங்காரப் பொருட்களனைத்தையும் மந்த்ரம் சொல்லியே வைப்பதனால்; ஒவ்வொரு பொருளும் மந்த்ரஶக்தியோடு கூடியிருப்பதனால்; இறைவனின் ஒவ்வொரு உறுப்பும் மந்த்ரவடிவானபடியால் ஆவாஹனம் செய்வதற்கு முன்பே கூட (உயிரற்ற நிலையில் கூட) கும்பமாகிய இறைவனின் உடல் ஜடமில்லை என்பதனை; ஶைவசித்தாந்தத்தை கும்பாலங்கார க்ரியை விளக்குகிறது. எனவேதான் அலங்கரிக்கப்பட்ட கும்பமானது **"வித்யாதேஹம்"** என்றுக் கொண்டாடப்பட்டு அதற்கும் தூபாதி உபசாரங்கள் செய்யப்படுகின்றன.

அடுத்து, நிஷ்களபரமேஶ்வர விஷயத்தில் மேற்சொன்ன: 1. த்வக்(மேல் புறத்தோல்) 2. ரக்தம் 3.மாம்ஸம் 4. மேதஸ் = கொழுப்பு 5. அஸ்தி 6. மஜ்ஜா = எலும்பினுள்ளே நிரம்பியுள்ள மென்மையான பொருள் 7. ஶுக்லம் = ஜீவதாது ஆகிய ஸப்ததாதுக்களும், நாடி - நரம்புகளும் எவ்வாறு திகழமுடியும்? எனில், உண்மையில் நமது உடலில் இருப்பது போல இறைவனுக்கு ஸப்த - தாதுக்கள் முதலியவை

கிடையாது. ஏனெனில் இவையெல்லாம் பஞ்சபூதமயமானவை. மாறுதலுக்குட்பட்டதால் அநித்யமானவை.

எனவே, பரமேஶ்வரனுக்கு உறுப்புக்கள் என்பவை யனைத்தும் [39] அத்வமயமானவை என்பதனை ஶைவாகமங்கள் மூலம் உணர வேண்டும்.

அதாவது [40]'**மந்த்ராத்வா**'வானது இறைவனுக்கு ரத்தமாகவும், [41]'**பதாத்வா**'வானது இறைவனுக்கு மாம்ஸமாகவும் - நாடி - நரம்புகளாகவும், [42]'**வர்ணாத்வா**'-வானது ஸ்வாமிக்கு மேற்தோலாகவும், [43]'**புவனாத்வா**'வானது பரமேஶ்வரனுக்கு ரோமங்களாகவும், [44]'**தத்வாத்வா**'வானது சிவபெருமானுக்கு மேதஸ், அஸ்தி, மஜ்ஜா, ஶுக்லங்களாகவும், [45]'**கலாத்வா**'வானது ஈஶனின் தலை முதலிய ஐந்து முக்கிய உறுப்புகளாகவும் பாவிக்கப்படவேண்டுமென சிவாகமங்கள் சொல்லுகின்றன.

இதனால் என்ன தெரிகின்றதென்றால் கும்பத்தின் ஒவ்வொரு அலங்காரப் பொருட்களும் கூட பரமேஶ்வரனின் அந்தந்த உறுப்புக்களாய்த் திகழ்கின்றன என்று முதலில் சொன்னதின் தாத்பர்யம்; அவை அனைத்தும் அந்தந்த அத்வாக்களாகவே திகழ்கின்றன என்று ஊர்ஜிதமாகின்றது. எனவே, அர்ச்சகர் உயர்நிலையில் த்யானிக்கும் போது

---

[39] இறைப்பயணத்திற்கான ஒருவித வாழ்வியல் வழியாக ஆகமங்களில் குறிப்பிடப்பட்ட வழிகள் அத்வாக்கள் எனப்படுவன. அவை மந்த்ராத்வா, பதாத்வா, வர்ணாத்வா, புவனாத்வா, தத்வாத்வா, கலாத்வா என்பன.

[40] பனிரெண்டு மந்த்ரங்கள்.

[41] 81 பதங்கள் ('பதம்' என்ற சொல் '81' என்ற எண்ணின் குறியீடாகும்)

[42] 51 எழுத்துக்கள்

[43] 224 புவனங்கள்

[44] 36 தத்துவங்கள்

[45] ஐம்பெரும் பகுதிகள்.

கும்ப-அலங்காரப் பொருட்களை அத்வாக்களாக பாவிக்கிறார் என்பது மூன்றாவதம்ஶம்.

மேற்கூறிவை தொடர்பான சில ஶ்லோகங்கள்:

"வஸ்ூம் =ചഃൂ, விஜிவ்ഃஜ്ൾ ச = ഹ്യിഥം,

ஐாംஸം வடெ = ഷൂதிகா,

ஒஃஃ = தொயஃ, குய குஷ்ரி=கூவுசூஃ, குஷிதஃ

ஸംவீத-ஸூகும்=ஷிரா ।

ஶூஷ்ம் = ഃயூ-ரஷ-ஒஹஃ கூஸூஃம்

ஙுஷ்ொ ஃஙுஃ=ஜீவிதம்

யாமூம் ஸவ்கஃ = ஞூஸஙம், ஃவவியள

ஶ0ஹொஃ ஐஃம் வூஜஙஃ ॥"

- ஶ்லோகம்72, ஸித்தாந்தஸாராவளீ

"ஐாംஸம் = கூംஹஃஜ், ஊயூஃஜ்=ஷி=ரூயிரம்,

ஒஃஃ=குംபூ, ஸூகும்=ஷிரா,

ரஷ்ம்=ஶூஷ்ஃ, குய குஷ்ரி=கூவுசூஃ, குயவா

=வக்ஷ்ரம் தூ = சூபாமயவா ।

வஸ்ூம்=கூக், வுஷஃ=உஷஃாஜஃ, உவிதம்;

வகும் = ஜடா, ஜீவிதம்=,

ஃஞூம், ஸூாஃ, ஃூநியாநூஃ=ஞூஸநஃ ஐதி

யூாநம் மணெஶ, குசூநெ ॥"

- ஶ்லோ.227,ஶைவ பூஷணம்

"ஶாஞூதீத கூஶா-ஶீஷூ, ஶாஜி-வக்ஷுஸரொரூஹஃ ।

விஃூா-விதத வக்ஷாஜம், வுதிஷ்டா-ஶூஹூஃணூஷஃ ॥

நிவூத்தி-ஜாநூஜஃாംவிரம், ஹுவநாயூ-தநூரூஹஃ ।

வணூ-கூவஜஞாரூயிரம், வஃ-ஃாംஸஷிராவிதஃ ॥

தகூ-குஷ்ரி-ஃஜா-ஶூகூரூ யாதூம், ஸஜொமொகூஷஃஃ ।

ஶிவாஜ தகூமஜூாயுவூாவிநம் ஸவூஶா ஶிவ॰ ॥

- தீக்ஷாவிதி, ஸ்ரீமத் - அகோர ஶிவாசார்ய பத்ததி

மேற்கூறிய ஶ்லோகார்த்தங்களின் ஒப்பாய்வு அட்டவணை

எண்	கும்பாலங்காரப் பொருட்கள்	ஶைவ பூஷணம் நூலில் குறிப்பிடப்பட்ட உறுப்பு	ஸித்தாந்த ஸாராவளி நூலில் குறிப்பிடப் பட்ட உறுப்பு	உறுப்புக்கள் ஆன ஆறு அத்வாக்கள்
1.	கும்பத்தின் உள்ளே போடப்படும் மண்	மாம்ஸம்	மாம்ஸம்	பதாத்வா
2.	கும்பத்தின் மேலே பூசப்படும் செம்மண்	ரக்தம்	ரக்தம்	மந்த்ராத்வா
3.	கும்பத்தினுள்ளே ஊற்றப்படும் புனித நீர்	மேதஸ்	மேதஸ்,மஜ்ஜா	தத்வாத்வா
4.	கும்பத்தின் மேலே சுற்றப்படும் நூல்	நாடி-நரம்பு	நாடி-நரம்பு	பதாத்வா
5.	கும்பத்தினுள்ளே இடப்படும், தங்கம் நவரத்தினம்	ஶுக்லம்	ஶுக்லம்	தத்வாத்வா
6.	கூர்ச்சம்	எலும்பு (அந்த:கூர்ச்சம்), முகப்பகுதி- திருமுடி (பஹி:கூர்ச்சம்)	எலும்பு	(எலும்பு) தத்வாத்வா (முகம்) ஶாந்திகலை
7	மேலே சுற்றப்படும் வஸ்த்ரம்	---	மேல் தோல்	வர்ணாத்வா
8.	தேங்காய்	தலைப்பகுதி	---	ஶாந்த்யதீத கலை
9.	சாற்றப்படும் பத்ரங்கள்	ஜடை	---	-----
10.	ஆவாஹிக்கப்பட்ட மந்த்ரம்	இறைவனின் உயிர்	இறைவனின் உயிர்	-----
11.	ஏழு வகையான தான்யங்கள்	ஆஸனம்	ஆஸனம்	----

மேற்படி விஷயங்களை ஸித்தாந்தஸாராவளியின் ஸம்ஸ்க்ருத உரையிலும் காணலாம்.

ப்ராஸாத:

ப்ரஸாத: என்பது தூய்மை, மகிழ்ச்சி, அனுக்ரஹம் போன்றவை. "ஸ்வாத்துஸாத: ஸ்வாதுநோர்ஜயோ" என்றும், "ப்ரஸாத: ப்ரஸந்நதா" என்றும் அமரகோஶம் கூறும்.

ப்ராஸாத: என்பது கோயில், அரண்மனை போன்ற இருப்பிடங்கள். "ஹர்ம்யாதி தநிநாம் வாஸ: ப்ராஸாதோ தேவபூபுஜாம்" என்பதும் அமரகோஶம்.

ப்ரஸாத: இயற்கையாய் அமைந்தது. அதில் செயற்கை கிடையாது; கூடாது. ப்ராஸாத: செயற்கையாய் அமைக்கப் பட்டது. மனிதமுயற்சியால் அமைக்கப்பட்டது. அது இயற்கையாக இருக்க முடியாது.

மேற்படி இரண்டு சொற்களையுமே ப்ர+ஸாத: என்று தான் பிரிக்க வேண்டும். செயற்கையானதைக் குறிப்பிடும் போது மட்டும் உபஸர்கமாகிய "ப்ர" என்பது நீண்டு தீர்க்கமாய் அமையும். எனவே ப்ராஸாத: என்றாகிறது. "ஸாத-காரயோ: க்ருத்ரிமே தீர்கோ வாச்ய:" என்ற வரருசி முனிவரின் வார்த்திக வாக்யமே இதற்கு ப்ரமாணம்.

இயற்கையாகவே தூய்மையானதும் மகிழ்வின் வெளிப்பாடுமாகிய பரமேஶ்வரரின் ப்ரஸாதத்தினைப் பெறவே, நாம் செயற்கையான ப்ராஸாதத்தினை= திருக்கோயிலை அமைத்து வழிபடுகிறோம்.

தவிர, "ப்ராஸாத:" என்பது ஶைவாகம மரபில் மிகச் சிறந்த மந்த்ரமாகும். பரமேஶ்வரருக்குள்ள பல பெயர்களுள் சிறந்த பெயராகும். ஸித்தாந்த ஸாராவளியின் உரையாசிரியர் ஸ்ரீ அனந்தஶம்பு "பரஶிவ வாசக ப்ராஸாதமந்த்ர:" என்றுக் குறிப்பிடுகிறார். ஶிவபெருமானை "ஶிவ" என்ற சொல்லால் குறிப்பிடுவதை விட ப்ராஸாதத்தால் குறிப்பிடுவது மிகவும் மேன்மையானது. ஆனால் இதனை மந்த்ரமாக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

எங்கும் வ்யாபித்துள்ள பரமேஶ்வரன் விஶேஷமாக = ஸ்தூலமாக எழுந்தருள ஶைவாகமங்கள் இரண்டு ப்ராஸாதங்களையும் விதிக்கின்றன. ஒன்று கண்ணினால் உணரத்தக்கது. மற்றொன்று (காதாலும்) மனதாலும் உணரத் தக்கது. ஒன்று கற்களால், மண்ணினால், சுதையால் இன்னும் பிறவற்றாலானது. மற்றொன்று ஸூக்ஷ்ம ஒலிகளால் ஆனது. ஆனால் இரண்டுமே மனிதமுயற்சியால் ஏற்படுபவை. முதல் ப்ராஸாதம் சிற்பியின் முயற்சியின் பயன். இரண்டாவது சிவாசார்யாரின் முயற்சி. எனவே தான் ஸம்ஸ்க்ருத இலக்கணப் படி ப்ர என்பது நீண்டு ப்ராஸாதஃ என்றாயிற்று.

விமானம் என்றழைக்கப்படும் ப்ராஸாதத்திற்கு எவ்வாறு பல பேதங்களுண்டோ, அவ்வாறே மூலமந்த்ரம் (ஓமைந ஓம் ஹாம் ஹௌம் ஶிவாய நமஃ । இதி உக்தேன என்று ஸ்ரீ நிர்மலமணி தேஶிகர் குறிப்பிடுவார்.) என்றழைக்கப்படும் ப்ராஸாதத்திற்கும் பல பேதங்களுண்டு.

“ப்ராஸாத ஶப்தஸ்ய உச்சாரஃ பஞ்சவிதஃ । ஹ்ரஸ்வ-தீர்க்-ப்லுத-ஸூக்ஷ்ம-அதிஸூக்ஷ்ம பேதேந” என்று விவரமாக ஸ்ரீஅனந்தஶம்பு குறிப்பிடுவார்.

“தத் யஃ ஸூக்ஷ்ம ஸர்வகதோ ப்ராஸாத ப்ரவணோ த்யேயஃ ஸஃ பிந்து-ஶக்தி-ஸமநாஸ்தாந த்ரிதய வதிநீஃ....” என்றும் “யஸ்ய து ப்ராஸாதஶைவப்ராஸாதே நிஷ்டா உக்திஃ” என்றும் ஸ்ரீமான்-அப்பைய தீக்ஷிதர் ஶிவார்சனா-சந்த்ரிகாவில் ஸந்த்யாவந்தனத்தில் குறிப்பிடுகிறார்.

“அகாராதிதாந்தாக்ஷரத்ரயேந ப்ரணவேந” “சதுர்ஷ்டேந ப்ரணவேந” “பஞ்சகேந ப்ரணவேந” என்றெல்லாம் ஸ்ரீமத் அகோரஶிவாசார்யார் குறிப்பிடுகிறார்.

நிர்மலமணி தேஶிகர் "ஜெயாஇ கயொவெதம் " என்ற இடத்தில் "ஔ" என்பதற்கு ஜெயா என்று பெயர் என்று விளக்கி 12/13 கலைகளை விளக்குகிறார்.

ஸ்ரீஸ்வச்சந்த ஆகமம் அகாரஶ்ச உகாரஶ்ச என்று தொடங்கி 12 கலைகளை விளக்குவதாக ஸ்ரீ அனந்தஶம்பு குறிப்பிடுகிறார். இதனையும் ஸ்ரீநிர்மலமணி தேஶிகரின் உரையையும் ஒப்பிட்டால் கீழ்க்கண்ட அட்டவணை பெறப்படும்.

கீழிருந்து மேலாக கலைகள்

	ஸ்ரீ ஸ்வச்சந்த-ஆகமம்	ஸ்ரீ நிர்மலமணி தேஶிகரின் வ்ருஊா		
	கலைகள்	கலைகள்	வ்யாப்தி ஸ்தானம்	
		பெருவெளியில் பஞ்சாக்ஷரத்தினைக் காட்டிலும் வேறுபடாமல் அப்பஞ்சாக்ஷரத்தின் ஸ்வரூபமாகவே விளங்கும் பரமசிவம்		
12	உன்மநா	உன்மநா	அதன்மேல் 4 அங்குலம்	4
11	ஸமநா	ஸமநா	அதன்மேல் 4 அங்குலம்	4
10	வ்யாபிநீ	வ்யாபிநீ	அதன்மேல் 3 அங்குலம்	3
9	ஶக்தி:	ஶக்தி:	ப்ரஹ்மரந்த்ரத்திற்கு மேலே 1 அங்குலம்	1
8	நாதாந்த:	நாதாந்த:	ப்ரஹ்மரந்த்ரம் வரை	
7	நாத:	நாத:	அதன் மேல்	
6	நிரோதீ	நிரோதீ	லலாடத்திற்கு மேல்	
5	அர்த்தசந்த்ரம்	அர்த்தசந்த்ரம்	லலாடம்	
4	பிந்து	பிந்து	தாலு - பிந்துஸ்தானம்	
3	மகாரம்	---	கண்டம் - தாலு	
2	உகாரம்	ஊ	ஹ்ருதயம் - கண்டம்	
1	அகாரம்	ஔ	நாபி - ஹ்ருதயம்	
0	-	ஹ்	மூலாதாரம் முதல் நாபி வரை	

பல மஹிமைகளைக் கொண்ட இந்த ப்ராஸாத மந்த்ரம் ஸ்ரீஆதிஶங்கர பகவத்பாதர் காலத்திலேயே பிற ஸம்ப்ரதாயங்களிலும் ப்ரஸித்தமாய் இருந்துள்ளது. ஏனெனில் அவர் இயற்றிய ப்ரபஞ்சஸாரத்தின் சுருக்க நூலாகிய ஸ்ரீகீர்வாணேந்த்ர ஸரஸ்வதீ இயற்றிய "ப்ரபஞ்சஸார ஸாரஸங்க்ரஹ:" எனும் நூலில் கீழ்கண்ட முக்கியக் குறிப்புகள் காணப்படுகின்றன.

"ஶங: ப்ரஸாதப்ரதகயாக ப்ராஸாத ஸஂஜ்ஞா"

"ஹௌ° ஐதி ஶஞு: ஹகார ஞதூ°தூஶஸ்வூர ஙிநூ°ஹி: கயஂ ஶஞு:"

"தஜ் ந்யாஸஂ கு°வூாண: யகு தெஶெ திஷுதி தஂ தெஶஂ

யொஜநஶிதஂ ஶெவகெூஷகு° ஐதி சூவக்ஷதெ"

"சூஷெ யகு தயா கூஙு°நெவ ஷிநஶ: விந்யஸ்தெஹ: வு°ஶாநு ।

கெூஷகுஂ தெஶ° கூஙு°ஞ யொஜநஶிதஂ ஶெவாமஶஜ்ஞா: விடு°:" ॥

வைத்தன அத்துவாவும் வடிவென மறைகளெல்லாம்

ஶைவஸித்தாந்தம், மூன்று பதார்த்தங்களை நித்யம் எனக்கொண்டுள்ளது. அவை பதி, பசு, பாசம் எனப்படுபவை. பதி என்பவர் பரமேஶ்வரர். பசுக்கள் மூன்று விதமானவை. எண்ணில் அடங்காதவை. பாசமும் மூன்று விதம் அவை ஆணவம், கர்மம், மாயை எனப்படுபவை.

பசுக்கள் தொன்றுதொட்டே ஆணவம் என்ற பாசத்தினால் தனது உண்மையான ஸ்வருபம் மறைக்கப்பட்டு வருந்துபவை. அந்த ஆணவமலத்தின் மறைப்பிலிருந்து அப்பசுக்களை விடுவிக்கச்செய்து, அவற்றின் உண்மையான நிலையை அனுபவிக்கும்படிச் செய்து அவற்றிற்கு ஶிவானந்தம் என்ற பெருமகிழ்ச்சியை ஏற்படுத்துவதே தனது தலையாயக் கடமையாய் பரமேஶ்வரன் கொண்டுள்ளார் என்பதை ஶிவாகமங்கள் விரிவாக உரைக்கின்றன.

இதற்காகவே பரமேஶ்வரன் ஸ்ருஷ்ட்யாதி பஞ்சக்ருத்யங்களை செய்யத் தொடங்குகிறார். அதாவது பசுக்கள் தங்களுடைய கூடப்பிறந்த ஸஹஜமலமாகிய ஆணவமலத்திலிருந்து விடுபடவேண்டி, பரமேஶ்வரரானவர் அப்பசுக்களை மேலும் இரண்டு மலங்களோடு தொடர்புறச் செய்கிறார். அவையே கர்மபாசமும் மாயாபாசமும் ஆவன.

இம்மூன்று பாசங்களோடு பசுக்கள் நிரந்தரமாகத் தொடர்புகொண்டு இருக்கவேண்டும் என்பது பரமேஶ்வரரின் எண்ணமல்ல!. மாறாக இம்மூன்று பாசங்களின் தொடர்பினால் பசுவானது முதிர்வுநிலையை= பரிபக்குவநிலையை அடைந்து முடிவில் இம்மூன்றையும் துறந்து, அதன் பின்பு பரமேஶ்வரரிடம் லயமடையவேண்டும் என்பதே அவரது

திருவுள்ளமாகும். இவற்றையெல்லாம் நாம் ஶைவாகமங்களிலிருந்து அறியலாம்

மேற்படி விசாரத்தால் பசுக்களாகிய உயிர்கள் பரமேஶ்வரனைச் சென்றடைய இடையில் ஏற்பட்ட பாதைகளைப் போன்றவையே மேற்படிப் பாசங்கள் என்பது தெளிவாகிறது. பாதையை ஸம்ஸ்க்ருதத்தில் 'அத்வா' என்று குறிப்பிடுவார்கள்.

மேற்படி மூன்று பாசங்களுள் மாயாபாசமானது சுத்தமாயை, அசுத்தமாயை என்று இருவகைப்படும், இவ்விருவகை மாயைகளிலிருந்தும் ஆறுவிதமான பொருட்கள் பரமேஶ்வரரால் தோற்றுவிக்கபடுகின்றன. அப்பொருட்களுக்கு கலா, தத்வம், புவனம், வர்ணம், பதம், மந்த்ரம் என்று பெயர். இவற்றைத் தான் ஷடத்வாக்கள் = ஆறுவழிகள் என்று ஶைவாகமங்கள் குறிப்பிடுகின்றன. இவற்றுள் முந்தைய அத்வாக்கள் வ்யாபகமானவை = பிந்தையதைக் காட்டிலும் அதிகமாகப் பரவியவை. பிந்தைய அத்வாக்கள் முந்தியதைக் காட்டிலும் வ்யாப்யமானவை = குறைவாகப் பரவிக்கிடக்கும் தன்மையன.

எனவே சிறுபாத்திரங்கள் பெரியபாத்திரங்களில் அடங்குவது போலவே, பிந்தைய அத்வாக்கள் முந்தைய அத்வாக்களுள் ஒடுங்கும் இயல்புடையன. இதையே ப்ரயோக நூல்களில் "மந்த்ர-பத-வர்ண-புவன-தத்வ-கர்பிதா கலா" என்றுக் குறிப்பிடுவார்கள்.

மேற்படி ஆறு அத்வாக்களுக்கும் உட்பிரிவுகள் பல இருக்கின்றன. முதலில் கூறியபடி ஆணவம், கர்ம எனும் இருபாசங்களுடன் கூடிய பசுக்கள் தங்களது அவ்விரு பாசங்களும் தங்களைவிட்டு அகலவேண்டும் என்றால் இந்த

ஆறு அத்வாக்களைக் கடந்தே தீரவேண்டும். எனவே பாதை போன்ற ஸ்வபாவம் கொண்டதால் ஷடத்வா என்ற பெயர் இவைகளுக்குப் பொருத்தமானதே.

இந்த ஆறு அத்வாக்களும் மாயையிலிருந்து பிறந்தவை. மாயையானது ஜடமானபடியால், அதன் கார்யமாகிய இந்த ஆறு அத்வாக்களும் ஜடமானவையே. அப்படியென்றால் ஜடமான ஷடத்வாக்கள் எவ்வாறு செயல்படக்கூடியவை? என்ற கேள்வியானது எழுகிறது. இவ்வனைத்தையும் பதியாகிய பரமேஶ்வரர் வ்யாபித்து அதிஷ்டித்து இருக்கும் பொழுது, அவரது ஶக்தியால், ஜடமாயினும் இவை அனைத்தும் செயல்படும் ஆற்றலைப் பெறுகின்றன.

பரமேஶ்வரன் இந்த ஆறு அத்வாக்களையும் எவ்வாறு வ்யாபித்து இருக்கிறார் என்பதை தெள்ளத்தெளிவாகவும் விரிவாகவும் ஒரு ஶைவஸித்தாந்தி அறிந்துகொள்ள வேண்டுமென்றால், அதற்கு ஷடத்வந்யாஸம் என்ற ப்ரயோகத்தை விட்டால் வேறு வழி கிடையாது. அப்படிப்பட்ட பெருமைவாய்ந்தவை ஷடத்வ ந்யாஸங்கள்.

பரமேஶ்வரனுக்கு உருவமற்ற நிலை நிஷ்களம் என்றும், உருவமுள்ள நிலை ஸகளமென்றும் வழங்கப் படுகிறது. இவ்விருநிலைகளிலும் சரி பரமேஶ்வரன் எவ்வாறு இவ்வத்வாக்களை வ்யாபித்து இருக்கிறார் என்பதை அறிய ஷடத்வந்யாஸங்களை விட்டால் வேறுவழியில்லை.

பரமேஶ்வரனை விக்ரஹம், மண்டலம், கும்பம், போன்றவற்றில் ஆவாஹனம் செய்யும்பொழுது, பல உறுப்புக்களோடு கூடியவராக அவரை த்யானம் செய்து ஆவாஹனம் செய்ய, ஆகமங்களிலே ஸ்வாமியினுடைய

ரூபத்யானங்கள் விரிவாக விவரிக்கபட்டுள்ளன. அந்த ரூபத்யானங்களோடு கூடிய ஆவாஹனமுறையை, ஸகளரூபமாகிய ஸ்வாமியை ஆவாஹனம் செய்வதற்கு நாம் கையாண்டு வருகிறோம். ஆனால், அவரை நிஷ்களமாகவும் ஆவாஹனம் செய்ய வேண்டுமென்றால் அதற்காக ஆகமங்களிலும் பத்ததிகளிலும் ஒரு த்யானஶ்லோகமானது நமக்கு கிடைக்கின்றது. அது பின்வருமாறு,

> "ஶாந்த்யதீத கலா-ஶீர்ஷம், ஶாந்தி-வக்த்ரஸரோருஹம் ।
> வித்யா-விததவக்ஷோஜம், ப்ரதிஷ்டா-ஸுஹ்ருதம்புஜம் ॥
> நிவ்ருத்தி-ஜாநுஜங்காங்க்ரிம், புவநாத்வ-தநூருஹம் ।
> வர்ண-த்வக்ஸந்தத்யயிரம், பத-மாம்ஸஸிராவிதம் ॥
> தத்வ-ஸப்த-தாது-ஸம்பூர்ண யாதும், ஸர்வமந்த்ரகேஶம் ।
> ஶிவாங்க தத்வமூர்த்யத்வமாவிநம் ஸதாஶிவம் ॥

- *தீக்ஷாவிதி, ஶ்ரீமத் - அகோர ஶிவாசார்ய பத்ததி*

மேற்படி இந்த த்யானஶ்லோகத்தில் ஒவ்வொரு அத்வாக்களும் பரமேஶ்வரரின் ஒவ்வொரு உறுப்பாக விளங்குகிறது. ஶாந்த்யதீதகலையானது இறைவனது திருமுடியாகவும், ஶாந்திகலையானது இறைவனது முகத் தாமரை போன்றதாகவும், வித்யாகலை அவரது மார்புப் பகுதியாகவும், ப்ரதிஷ்டாகலையானது நாபிப்பகுதியாகவும், நிவ்ருத்திகலையானது அவரது முழங்கால் குதிக்கால் போன்ற உறுப்புக்களாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு கலாத்வா வினுடைய ஐந்துபேதங்களும் இறைவனுடைய ஐந்து உறுப்புகளாகக் காணப்படுகின்றன. அடுத்து இருக்கக்கூடிய புவனாத்வாவில் 224 புவனங்கள். இந்த எல்லா புவனங்களும் பரமேஶ்வரனுடைய ரோமங்களாகத் தென்படுகின்றன. 12 மந்த்ரங்களையுடைய மந்த்ராத்வாவானது பரமேஶ்வர னுடைய உடலின் மேலே காணக்கூடியத் தோலாக விளங்குகிறது. 51 வர்ணங்களைக் கொண்ட

வர்ணாத்வாவானது, பரமேஶ்வரனுடைய உடலினுள்ளே ஓடக்கூடிய உதிரமாக அமைந்திருக்கிறது. 81 பதங்களைக் கொண்ட பதாத்வாவானது, பரமேஶ்வரனுடைய உடலினுள்ளே இருக்கக்கூடிய மாம்ஸமாகவும் நாடியாகவும் அமைந்திருக்கிறது. 36 தத்துவங்களைக்கொண்ட தத்வாத்வா வானது, பரமேஶ்வரனுடைய உடலினுள்ளே இருக்கக்கூடிய எலும்புப் பகுதிகளாகவும், மஜ்ஜை என்ற தாதுவாகவும், ஶுக்லம் என்ற தாதுவாகவும் அமைந்திருக்கிறது. இவ்வாறு ஆறு அத்வாக்களின் வடிவமாகத் திகழக்கூடிய (அல்லது) ஆறுஅத்வாக்களை வ்யாபித்திருக்கக்கூடிய ஶிவபெருமானை த்யானம் செய்தால் போகம், மோக்ஷம் இரண்டும் கிடைக்கும் என்று இந்தத் த்யான ஶ்லோகம் நமக்கு விவரிக்கிறது.

இதிலிருந்து ஶிவபெருமான் எவ்வாறெல்லாம் ஆறு அத்வாக்களை வ்யாபித்திருக்கிறார் என்று ஓரளவு தெரிந்து கொள்ளலாம். ஆனால் இதையும் தாண்டி ஶைவாகமத்தின் பத்ததிநூல்கள் மிகவும் நுணுக்கமாக இறைவனது எந்தெந்த உறுப்பாக, எந்தெந்த அத்வாக்கள் சரியாக அமைந்திருக்கின்றன என்று மிகவும் உன்னிப்பாக ஸூக்ஷ்மமாக விளக்குகின்றன. 224 புவனங்கள் இறைவனது எந்த எந்த இடங்களில் அமைந்திருக்கின்றன என்றும் மேலும், விரிவாக சொல்லக்கூடிய இந்த விஷயங்ளெல்லாம் நமக்கு ஷடத்வந்யாஸங்களில் இருந்து மட்டுமே கிடைக்கப் பெறக்கூடியவை. மேலும் அந்த ந்யாஸங்களிலும் ஸாங்க ஷடத்வந்யாஸம் என்றும் சாதாரணமாக ஷடத்வந்யாஸம் என்றும் இருவகையாக நமக்கு கிடைக்கின்றன. ஸாங்க ஷடத்வந்யாஸங்களில் இறைவனது கைவிரல்களில் அமைந்துள்ள பர்வாக்களில் கூட எந்த புவனாத்வாக்க ளெல்லாம் இருக்கின்றன என்று அறியலாம்.

எனவே ஒரு ஸாதகனாகிய அர்ச்சகரானவர், தான் பூஜை செய்யும்பொழுது, இந்த ஷடத்வாக்களை ந்யாஸம் செய்து, இறைவனது தேஜோமயமான "ஐதி ஊதிும் தெஜொஊவாം உணூாகாா௴ சுவிஜஙாவயவா௴" என்று சொல்லக்கூடிய அந்த அகண்டமான மூர்த்தியில் எல்லா ந்யாஸங்களைச் செய்வது போலவே, ஸாங்கோபாங்கமாக விவரிக்கக்கூடிய இந்த ஷடத்வந்யாஸங்களையும் பலநாட்கள் செய்துவந்தால், பரமேஶ்வரனாகிய பதிக்கும், ஆறு அத்வாக்களுக்கும் இருக்கக்கூடிய ஸம்பந்தத்தை அந்த ஸாதகன் ஒவ்வொரு நாளும் நன்கு த்யானிக்கக் கூடிய ஒரு வாய்ப்பானது நிஶ்சயம் ஏற்படும்.

இதுபோன்ற ஒரு வாய்ப்பானது வைதிக ஶைவாகமங்களைச் சார்ந்து இருக்கக்கூடிய ப்ரயோகத்தை விட்டால் வேறுவழியில் தெரிந்துகொள்ள வழியேயில்லை என்பதை, அனைத்து ஶைவஸித்தாந்திகளும் நன்கு உணர்ந்துகொண்டு, இந்த ஷடத்வந்யாஸத்தின் எல்லா விஷயங்களையும் நன்கு தெரிந்துகொண்டு, பூஜைசெய்யும் போது மட்டுமல்லாமல், பிற சமயங்களிலும் கூட இறைவனது அனைத்து உறுப்புக்களையும் அணுவணுவாகத் தெள்ளத் தெளிவாக த்யானம் செய்து, அதனால் தத்வங்களையெல்லாம் அனுஸந்தானம் செய்துகொண்டு, முறையாக ஶிவபெருமானை அடையக்கூடிய வழியை அனைவரும் தேடிக்கொள்ள வேண்டும்.

ஶிவபெருமானின் திருமுகங்களும் வேதங்களும்

வேதங்கள் ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வண வேதம் என்று நான்கு. கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்று திஶைகளும் நான்கு. ஈஶானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்று ஶிவ பெருமானுக்குரிய முகங்கள் ஐந்து. நமது பல ப்ரமாண நூல்களில் இந்த இந்த திஶைக்குரிய வேதங்கள் இவை, என்று குறிப்புகள் காணப்படுகின்றன. அதுபோலவே இந்த இந்த திஶைக்குரிய ஶிவபெருமானின் முகங்களும் இவை என்றும் காணப்படுகிறது. பொதுவாக கிழக்கு திஶைக்குரிய முகம் தத்புருஷம் என்றும், தெற்கு திஶைக்குரிய முகம் அகோரம் என்றும், மேற்குதிஶைக்குரிய முகம் ஸத்யோஜாதம் என்றும், வடக்குதிஶைக்குரிய முகம் வாமதேவம் என்றும் பல ஆகமங்களிலும் காணப்படுகிறது. ஈஶானமுகம் மேல்திஶையைச் சார்ந்தது. ஸாதாரணமாகத் திஶைகளுக்கும் முகங்களுக்கும் இருக்கும் தொடர்பு பெரும்பாலும் மாறுபடாது.

ஆனால், வேதங்களுக்கும் திஶைகளுக்கும் உள்ள தொடர்பும், வேதங்களுக்கும் முகங்களுக்கும் உள்ள தொடர்பும் பலவிதங்களில் பல்வேறாகக் காணப்படுகிறது. இவற்றினை இக்கட்டுரையில் ஒப்பாய்வு செய்வோமாக.

யஜுர்வேதத்தில் **"ருசாம் ப்ராசீ மஹதீ திக் உச்யதே"! 'தக்ஷிணாம் ஆஹு: யஜுஷாம் அபாராம் ! ஸாம்னாம் உதீசீ மஹதீ திக் உச்யதே! அதர்வணாம் அங்கிரஸாம் ப்ரதீசீ'** என்று காணப்படுகிறது.

இதன்படி ருக்வேதத்திற்கு உரிய திஶை கிழக்கு எனவும், யஜுர்வேதத்திற்கு உரிய திஶை தெற்கு எனவும், ஸாமவேதத்திற்கு உரிய திஶை வடக்கு எனவும், அதர்வண வேதத்திற்கு உரிய திஶை மேற்கு எனவும் தீர்மானமாகிறது.

ஆனால், மஹாந்யாஸத்தில் வரும் த்யானஶ்லோகம் தரும் செய்தியோ வேறாக உள்ளது. **'... ருக்வேதநாதோதயம்... ஸ்தானோர்முகம் பஶ்சிமம்'** என்று உள்ளது. இதிலிருந்து ருக்வேதத்திற்கு உரியமுகம் மேற்கு என்று தெரிகிறது.

'... யாஜுஷ வேதகோஷஜனகம் வக்த்ரம் ஹரஸ்ய உத்தரம்' என்று உள்ளது. எனவே யஜுர்வேதத்திற்கு உரியமுகம் வடக்கு என்றுத் தெரிகிறது.

'... கம்பீரத்வனிஸாமவேதஜனகம்... பூர்வம் முகம் ஶூலின:' என்று உள்ளது. இதனால் ஸாமவேதத்திற்கு உரிய திஶை கிழக்கு என்று உறுதியாகிறது.

'... வந்தே தக்ஷிணமீஶ்வரஸ்ய வதனம் ச அதர்வ நாதோதயம்' என்று உள்ளதால் அதர்வணவேதத்திற்கு உரிய திஶை தெற்கு என்று உறுதியாகிறது. மஹாந்யாஸப் ப்ரகரணத்தில் இருந்து பெறக்கூடிய தகவல் இவ்வாறு உள்ளது.

ஆனால் **'ஸ்ரீமத் அகோரஶிவாசார்யரின் ஶிவப்ரதிஷ்டா விதி'**யில் **'மண்டபபூஜா ப்ரகரண'**த்தில் காணும் போது அதிலிருந்து, ருக்வேதத்திற்கு கிழக்கு என்றும், யஜுர்வேதத்திற்கு தெற்கு என்றும், ஸாமவேதத்திற்கு மேற்கு என்றும், அதர்வண வேதத்திற்கு வடக்கு என்றும் தெரிகிறது.

ஆனால் **'ஸ்ரீமத் காமிகாகமம்'** (பூர்வபாகம், பாலஸ்தாபன விதி படலம்) தரக்கூடிய தகவலோ வேறுவிதமாக உள்ளது. அதில் **'ஸத்யோஜாதஸ்து ருக்வேத: வாமதேவோ யஜுஸ்ஸ்ம்ருத:'** (ஶ்லோ-53b) **அகோரஸ் ஸாமவேதஸ்து அதர்வ: புருஷஸ்-ஸ்ம்ருத:** (ஶ்லோ 54A) என்று உள்ளது. இதன்படி ருக்வேதத்திற்கு மேற்குத்திஶை என்றும், யஜுர்வேதத்திற்கு வடக்குத்திஶை என்றும், ஸாமவேதத்திற்கு

தெற்குத்திஶை என்றும், அதர்வணவேதத்திற்கு கிழக்குத்திஶை என்றும், தீர்மானம் ஆகிறது.

அதாவது, ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம் என்ற நான்கு வேதங்களுக்கும், முதல் ப்ரமாணத்தின்படி கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு ஆகியவை முறையே திஶைகளாகவும், இரண்டாவதுப் ப்ரமாணப்படி நேர்தலைகீழாக மேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகியவை முறையே திஶைகளாகவும், மூன்றாவது ப்ரமாணப்படி கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகியவை முறையே திஶைகளாகவும், நான்காவது ப்ரமாணப்படி மேற்கு, வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகியவை முறையே திஶைகளாவும் தீர்மானம் ஆகிறது.

அதாவது நான்கு ப்ரமாணங்களும் வெவ்வேறான நான்கு செய்திகளைத் தருகின்றன. இவை நான்கையும் உற்றுநோக்கும் பொழுது ஸாமவேதத்திற்கு கிழக்கு முதலிய நான்கு திஶைகளோடும் தொடர்பு உள்ளது தெளிவாகிறது. அதுபோல் அதர்வண வேதத்திற்கும் நான்கு திஶைகளோடும் உள்ள தொடர்பு தெளிவாகிறது.

ஆனால் ருக்வேதம், கிழக்கு மேற்கு ஆகிய இரண்டு திஶைகளோடு மட்டுமே தொடர்பு கொண்டுள்ளது. ருக்வேதத்திற்கு தெற்கு மற்றும் வடக்கு திஶையோடு தொடர்பு கிடையாது. அதுபோலவே யஜுர்வேதத்திற்கு தெற்கு மற்றும் வடக்குத் திஶையோடு மட்டுமே தொடர்பு உள்ளது. யஜுர்வேதத்திற்கு கிழக்கு மற்றும் மேற்குத் திஶையோடு தொடர்பு கிடையாது.

இவ்வாறாக ஒவ்வொரு ப்ரமாணங்களும் ஒவ்வொரு விதமான வெவ்வேறு தகவல்களை தரும்போது எது உண்மையானது? என்ற ஸந்தேஹம் வருவது இயல்பு.

எனினும் பல்வேறு கல்பகாலங்களின்படி இவை அனைத்துமே உண்மையானவையே என்று 'ஶிவதத்வரஹஸ்யம்' என்ற நூலில் "தஸூ வ உதுதி: கஜூஹெஷெந ஙஹுயா" என்று ஸ்ரீவீரபத்ரஸ்வாமியின் உத்பத்தி விஷயத்தில் 'ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதர்' குறிப்பிடுவதையே நாம் இங்கு பொருத்திக் கொள்ளலாம்.



வைதிக-ஶைவஸந்த்யாவந்தனங்கள்

(சில கருத்துக்கள்)

𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑌾𑌰𑍋𑌽𑌪𑌿 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌪𑍂𑌜𑍍𑌯𑍋 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

இன்று தமிழகத்தில் விளங்குகின்ற ஶிவாலயங்களில் பூஜை செய்கின்ற அர்ச்சகர்களுள் 99வீதத்தினர் 'குருக்கள்' என்று அழைக்கப்படுகின்ற ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள். ஆகமங்களில் இவர்கள் 'ஆதிஶைவர்கள்' என்று குறிப்பிடப்படுகின்றனர்.

சேக்கிழார்பெருமான் தமது திருத்தொண்டர் புராணத்தின் "முப்போதும் திருமேனி தீண்டுவார்" புராணத்தில், இவர்களை, 'முதற்சைவர்=ஆதிஶைவர்' என்றும், 'சிவவேதியர்' என்றும் குறிப்பிடுகிறார். சிவவேதியர் என்ற சொல்லே ஆகமங்களில் 'ஶிவப்ராஹ்மண:', 'ஶிவத்விஜ:', 'ஶிவவிப்ர:' என்றெல்லாம் குறிப்பிடப்படுகிறது.

'ப்ராஹ்மணர்', 'வேதியர்', 'த்விஜர்', 'விப்ரர்' போன்ற அடைமொழிகள் ஆதிஶைவர்களுக்கு விளங்குவதால், அவர்கள், வேதாத்யயனயோக்யர்கள், வைதிக ஸந்த்யா வந்தனத்தையும் செய்யக்கடமைப்பட்டவர்கள் என்பது புலனாகிறது.

ஸ்ரீமத் காமிகம் முதலான ஆகமங்களிலும்,

[46]𑌸𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌿𑌧𑌿𑌜𑍍𑌞𑍈𑌃 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌿𑌸𑍍𑌰𑌃 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌵𑍇𑌦𑍋𑌕𑍍𑌤𑌾 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑍇𑌨 𑌤𑌚𑍍𑌚 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌿𑌭𑌿𑌃 ॥

என்பது போன்ற வாக்யங்கள், ஆதிஶைவர்கள் வைதிக ஸந்த்யாவந்தனமும் செய்யவேண்டும் என்பதை உணர்த்து முகமாக விளங்குகின்றன.

[46] ஶ்லோ. எண். 3, பஶ்சிமத்வாரார்ச்சனவிதி:, காமிகாகமம் உத்தரபாகம்.

ஶாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளக் க்ரியைகளுள் மிகவும் எளிமையானது ஸந்த்யாவந்தனமே ஆகும். பிற க்ரியைகளைச் செய்யவேண்டுமென்றால், அதற்குப் பல பொருட்கள் தேவைப்படும். ஆனால், ஸந்த்யாவந்தனத்திற்கோ ஜலம் மட்டுமே போதுமானது.

ஸந்த்யாவந்தனம் ஒரு தனித்த க்ரியையாக இருந்தாலும்கூட, அனைத்துக் க்ரியைகளுக்கும் மூலமாகவும், மதத்தின் தத்துவங்களையெல்லாம் உள்ளடக்கியதாகவும் விளங்குகிறது. ஸந்த்யாவந்தனம் செய்யாமல் வேறு எந்த க்ரியையைச் செய்தாலும், அது பலனற்றதாகவே ஆகிறது என்பது ஶாஸ்த்ரங்களின் தீர்மானம்.

"விெ்ரா வ்ருக்ஷஃ தஸ்ய ஊலம் ஹி ஸாங்ய்ா
வெஉாஃ ஶாவாஃ யஉ்ூகஉ்ூாணி வணூ் ।
தஸ்ாநுஉலம் யதூதொ ரக்ஷிதவ்யம்
ஊஉெ ூிஷெ ஙெவ ஶாவா ந வ்ருக்ஷஃ" ॥

என்ற வசனம் ஸந்த்யாவந்தனத்தின் அவஶ்யத்தை அழகாக உணர்த்துகிறது.

வைதிகஸந்த்யாவந்தனம் மட்டுமன்றி, நமது பாரதத் திருநாட்டின், ஷண்மதங்களிலும் கூட தனித்தனியே ஸந்த்யாவந்தனம் கூறப்பட்டுள்ளது.

ஶைவஸமயத்தில் காயத்ரீ என்பது ஒரு தனி தேவதையாகக் கருதப்படவில்லை. காயத்ரீ உபாஸனை *ஶிவஶக்தி* உபாஸனையே என்பதை *'ஶிவார்ச்சனா சந்த்ரிகா'* என்ற நூலில் *'ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதர்'*,

"ூாஉஶாஜ்ஹ்ூதம் ஶம்ஹும் ூந்ரெகூெ்ூிவாஶ்ரிதா" ॥

என்று குறிப்பிடுகிறார். அதாவது, சந்த்ரனை விட்டு சந்த்ரனது ஒளி எங்ஙனம் நீங்காது விளங்குகிறதோ அதுபோல, த்வாதஶாந்தத்தில் விளங்கும் ஶிவபெருமானை விட்டு

எப்பொழுதும் நீங்காத ஶிவஶக்தியே, ஸந்த்யாதேவியாக வழிபடப்படுகிறாள். காலம் மற்றும் அதிகாரிபேதத்தால், அவளே மூன்றுநிலைகளில் விளங்குகிறாள் என்று குறிப்பிடுகிறார்.

'ஸ்ரீ ஞானஶிவாசார்'யரும் தமது 'ஶிவபூஜாஸ்தவம்' எனும் நூலில் இக்கருத்தையே 'ஏகைவார்த்த' எனத் தொடங்கும் ஶ்லோகத்தில் குறிப்பிடுகிறார்.

"ஊகெவாயூதஃ ஈஶஶக்திஃ கூிதா யா கூெக-ஈவா ஶிவா
காஓ-உவாயி-வஶாக் ஜிஜாஃ து கூஉிநம் ஞாவஹ்ாஜி-ஈவெண தாஃ ।
யூாயஜி கூகு து நிஃஓ-கூதூ-ஶிவயொஃ ஸங்ஃ ச ஸெஶவீ வாா
ஸங்ாதஃ ஶிவ ஊவ ஸாயகவஸெஃ யெ்ூயஃ ஸஊா நிஃஓஃ ॥"

அதாவது, ஆதிஶைவர்கள் தாம் செய்யும் வைதிக ஸந்த்யாவந்தனத்தில் ஸந்த்யாதேவீ என்ற பெயரில், ஶிவஶக்தியை உபாஸிக்கின்றனர். ஶைவஸந்த்யா வந்தனத்திலோ ஸந்த்யாதேவியின் ப்ரபாமண்டலத்தில் இருந்துகொண்டு, ஶிவபெருமானையே உபாஸிக்கின்றனர். ஸந்த்யாவினை வணங்குதல் என்பது முதல் ஸந்த்யாவந்தனம். ஸந்த்யாவில் இருந்துகொண்டு ஶிவபெருமானையே வணங்குதல் இரண்டாவது ஸந்த்யாவந்தனம் என்பது வேறுபாடு.

ஸ்ரீமத் ஞானஸம்பந்தப் பெருமான் தமது பதிகத்தில், **'செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே'** என்றும், ஸ்ரீமத் ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் **'அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி'** என்றும் குறிப்பிடுவது, ஶைவாகமவாக்யங்களின் கருத்துக்களை உறுதிப்படுத்துகின்றன.

ஸ்ரீ சிவபஞ்சாஸன வேதிகை

பரமபதியாகிய சிவபெருமான் உலகங்களனைத்தையும் கடந்து விளங்குவதோடல்லாமல், உலகனைத்தையும் ஊடுருவியும் நிற்கின்றார் என்பது நமது வேதாகமங்களின் உரத்தசிந்தனையாகும். எனவே பரமேச்வரன் 'எங்கும் வ்யாபித்தவர்' என்றுப் போற்றப்படுகிறார்.

எங்கும் வ்யாபித்த ஒருவர், 'ஒரு குறிப்பிட்ட இடத்திலும் இருக்கிறார்' என்று குறிப்பிடலாமே தவிர, 'ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே இருக்கிறார்' என்றுக் குறிப்பிடமுடியாது.

பரமேச்வரன், அண்டசராசரங்களனைத்தையும் பரவி விரிந்துள்ளதால், இவ்வண்டசராசரங்களனைத்தும் கூட பரமேச்வரனின் இருப்பிடமாக; அமைவிடமாக அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது. அமைவிடத்தினை 'ஆஸனம்' என்றுக் குறிப்பிடுவர்.

பொதுவாக 'ஆஸனம்' என்பதுதான், அதன்மேல் அமருபவரைத் தாங்கும்; இருக்கும்படிச் செய்யும்! ஆஸனம் = அமைவிடம் என்பது இல்லையேல், அமருபவர் நிலைபெறவே முடியாது. இது நம் விஷயம்.

சிவபெருமான் விஷயத்தில் எவ்வாறெனில், சிவபெருமான் ஒருவரே இவ்வுலகமனைத்தையும் இயங்கும்படித் தாங்குகிறார். அதாவது உலகனைத்திற்கும் அவரே ஆதாரமாகத் திகழ்கிறார். உலகனைத்தும் அவருக்கு ஆதாரமாகத் திகழுவதில்லை!

நிலத்தடியில், நெடுகப் பரவியுள்ள தண்ணீருக்கு, ஒரு சிறு கிணறு, ஆதாரமாகவோ, அமைவிடமாகவோ ஆவதில்லை. இருப்பினும், "கிணற்றுத்தண்ணீருக்குக் கிணறு

ஆதாரம்'' என்று சொல்வது உபசாரவார்த்தையே. அதுபோல, இவ்வுலகனைத்தையும் கடந்தும் பரவியுள்ள சிவபெருமானுக்கு, இவ்வுலகனைத்தும் ஆதாரம் = ஆஸனம் = அமைவிடம் என்று சொல்வதும் உபசாரச் சொல்வழக்கே ஆகும்.

சிவபெருமானை எழுந்தருளச் செய்யும் ஒரு அமைவிடம் = ஆஸனம், மந்த்ரங்கள் போன்றவற்றால் மட்டுமே ஸம்ஸ்காரம் செய்யப்பட்டால், அந்த ஆஸனமானது 'ஸ்தண்டிலம்' எனப்படும்.

சிற்பசாஸ்த்ர முறைப்படி அமைக்கப்பட்டு, பின்பு மந்த்ரங்கள் போன்றவற்றால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டால், அதே ஆஸனமானது 'வேதிகை' எனப்படும். சைவாகமங்கள் இவ்வுலகமனைத்தையும் ஐந்தாகப் பிரித்து, ஐந்துமே சிவபெருமானின் ஆஸனங்கள் என உபதேசிக்கின்றன. எனவே, சைவாகமங்கள் மற்றும் சிற்பசாஸ்த்ரங்களின் உபதேசப்படி, சிவபெருமானுக்கே உரிய ஐந்து ஆஸனங்களாகிய அனைத்துலகங்களையும் வடித்துக் காட்டும் வடிவமே ''ஸ்ரீ சிவபஞ்சாஸன வேதிகை'' எனப்படுகிறது.

அனந்தாஸனம், ஸிம்ஹாஸனம், யோகாஸனம், பத்மாஸனம், விமலாஸனம், என்று ஒன்றன்மேல் ஒன்றாக அமைந்துள்ள பஞ்சாஸனங்களை, ஒரு அர்ச்சகப் பெருமகனார், எவ்வாறெல்லாம் மனதில் பாவிக்க வேண்டும்! எவ்வாறெல்லாம் பூஜிக்க வேண்டும்! என்று சைவாகமங்கள் விரிவாய்ப் பலவாறாய்ப் பலகோணங்களில் விவரிக்கின்றன.

மனதில் பாவனை செய்வதற்காகவே சிவாகமங்களால் விவரிக்கப்பட்ட விஷயங்கள், நமது மனத்தின்கண் ஆழப்பதியவேண்டும் என்பதற்காகவே, விரிவாய் விளக்கப்பட்ட விபரங்களில் சிலவற்றை மட்டுமே திரட்டி,

நமது முன்னோர்கள், அப்பஞ்சாஸன விபரங்களை, சிற்ப சாஸ்த்திரத்தின் துணையோடு ஆங்காங்கே திருக் கோயில்களில் கருங்கல்லில் வடித்துக் காட்டியுள்ளனர். அவ்வாறு வடித்துக்காட்டப்பட்டவைகளுக்கு "ஶ்ரீசிவ பஞ்சாஸன வேதிகை" என்று பெயர்.

காஞ்சீபுரம் ஶ்ரீஏகாம்ரேசுவரர் திருக்கோயில், திருக் கழுக்குன்றம் தாழக்கோயில், விரிஞ்சிபுரம் ஶ்ரீமார்க்க பந்தீசுவரர் திருக்கோயில், வேலூர் ஶ்ரீஜலகண்டேசுவரர் திருக் கோயில் போன்ற இடங்களில் கருங்கல்லில் எளிமையான முறையில் வடித்துக்காட்டப்பட்ட 'ஶ்ரீசிவபஞ்சாஸனவேதிகை' களை நாம் இன்றும் கண்டு இன்புறலாம்.

நம் முன்னோர்கள் பஞ்சாஸன உருபடிகளில் = பிம்பங்களில் சிலவற்றை மட்டும், இறைத்திருமேனி உலாவரும் வாகனங்களின் கீழ்ப்பகுதியிலும் வடித்துக் காண்பித்துள்ளதை நாம் காண்கிறோம். கும்பாபிஷேக காலங்களில் மட்டும் யாகமண்டபத்தின் நடுவே, சுதையில் அமைக்கப்பட்ட 'பஞ்சாஸன வேதிகை'களை நாம் இன்று பல இடங்களில் தரிசனம் செய்கிறோம்.

ஆனால், சைவாகமங்களில் பாவனைக்காக விளக்கப்பட்ட பஞ்சாஸனங்களின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வேதிகையை உருவாக்குவ தென்பது கடினமானபடியால், நடைமுறையில் ஆங்காங்கே சிறிதுசிறிதாகக் காணப்படும் பல அம்சங்களையும் கூடியவரை ஒன்றுதிரட்டி, ஶைவாகமங்கள், சிற்ப சாஸ்த்ரங்கள், நடைமுறை, தற்போதையத் தேவை, இடவசதி, பொருளாதாரவசதி, என்று பல அம்சங்களையும் கூடியவரை அனுசரித்து, சைவாகமங்களும், சிற்ப சாஸ்திரங்களும் இழைந்தோடும் வகையில், உயர்ந்த மரத்தில் உருப்பெற்றதும், திகழும் திருவாசியாகிய பிரபை, திங்களைப் போன்று

வெண்குடை என்றவாறு, பரமபதியாகிய பரமேச்வரனுக்கே உரிய தடஸ்தலக்ஷண உபசார - வர்க்கங்களோடு கூடியதுமாகிய "ஸ்ரீசிவபஞ்சாஸன வேதிகை" திருமயிலையில் வீற்றிருந்தருளும் கற்பகக் கடலாகிய ஸ்ரீகபாலீஸ்வரப் பெருமானுக்கு 22.11.2015 அன்று ஸமர்பணம் செய்யப்பட்டது.

அதன் நிழற்படத்தையும் விளக்கத்தையும் காண்போம்.



பெருமை நிறைந்த 'ஸ்ரீசிவபஞ்சாஸன வேதிகை'யில் என்னென்ன உருபடிகள்/ பிம்பங்கள்/ விக்ரஹங்கள்/ படிமங்கள் அமைந்துள்ளன என்பதனை விரிவாய்ப் பார்ப்போமாக.

ஸ்ரீ சிவபஞ்சாஸன வேதிகை		
எண்	உருபடி /பிம்பம்/விக்ரஹம்/படிமம்-விபரங்கள்	எண்ணிக்கை
	கீழிருந்து மேலாக	
1.	4 சக்கரங்களுடன் கூடிய படிசட்டம்	1
2.	கூர்மம் (ஆமை)	1
3.	நெற்கதிர் தாங்கிய ஆதாரசக்தி அம்பிகை	1
4.	அனந்தாஸனம் - முக்கோணச் சட்டம்	1
5.	மஹாநாகம்	1
6.	அஷ்ட நாகங்கள்	8
7.	மஹாநாகத்தின் உள்ளே அனந்தேச்வரர்	1
8.	அஷ்ட பர்வதங்கள்	8
9.	அஷ்ட திக்கஜங்கள்	8
10.	ஸிம்ஹாஸனம் - சிற்பவேலையுடன் சதுரச் சட்டம்	1
11.	அஷ்ட ஸிம்ஹங்கள்	8
12.	யோகாஸனம்-சிற்பச் சிறப்புடைய எண்கோணச் சட்டம்	1
13.	அஷ்ட பூதங்கள்	8
14.	பத்மாஸனம்-சிற்பக் கலைவாய்ந்த வட்டவடிவச் சட்டம்	1

15.	அஷ்டபத்மரூபமானதளங்கள்	8
16.	அனேக உபதளங்கள்	1
17.	அஷ்ட தளாத்மக மஹாபத்மம்	1
18.	விமலாஸனம் - மாசிப்பத்திரக் கலைநயத்துடன் அறுகோணச் சட்டம்	1
19.	இருபுறமும் இரு சிறப்பு வேலைப்பாடுகளைக் கொண்ட திருவாசி - பிரபை	1
20.	பிரபு சின்னமாகிய வெண்குடை	1
	மேலிருந்து கீழாக	
21.	பத்மாஸனத்தில் அஷ்டதளரூபமாக அஷ்டவித்யேச்வர வடிவங்கள்	8
22.	யோகாஸனத்தில் அஷ்டகணேச்வர வடிவங்கள்	8
23.	ஸிம்ஹாஸனத்தில் தசதிக்பாலகர் வடிவங்கள்	10
24.	கூர்மத்தின் மேல் அனந்தாஸனத்தில் தசாயுதங்கள்	10
25.	12 கோணங்களுடன் பஞ்சாங்க - பஞ்சவர்க வேலைகளுடன் உள் கூடுகள்	3

எண்	மேற்கண்ட விபரங்களுக்கான ப்ரமாணங்கள்
	கீழிருந்து மேலாக
1	----------------
2	அத: கூர்மஶிலாஸீனாம் - பக்- 78, ஸ.ஸா.ஸ.

3	மௌளௌள பீஜாங்குராகாராம் - பக்- 78, ஸ.ஸா.ஸ.
4	அநந்தாக்யம் த்ரிகோணகம் - பக்- 82, ஸ.ஸா.ஸ
5	அநந்தம் நீலஸங்காஶம் ஸஹஸ்ரபணிமண்டிதம் - பக்- 114, ஶி.ஸி.ப்ர.வி.
6	அநந்தாத்யா அஷ்டநாகா:பூஜ்யா:கூர்மஶிலோபரி - பக்- 124, ஶி.ப்ர.வி.
7	தந்மத்யகமநந்தேஶம் - பக்- 113, ஶி.ஸி.ப்ர.வி.
8	காஞ்சீபுரம், திருக்கழுக்குன்றம் முதலிய கோயில்களிலுள்ள கருங்கல் வேதிகைகள்.
9	காஞ்சீபுரம், திருக்கழுக்குன்றம் முதலிய கோயில்களிலுள்ள கருங்கல் வேதிகைகள்.
10	ஸிம்ஹாஸனம் சதுஷ்கோணம் - பக்- 82, ஸ.ஸா.ஸ.
11	ஸிம்ஹாக்ருதீன் ஸ்மரன், - பக்- 114, ஶி.ஸி.ப்ர.வி.
12	யோகாஸனம் சாஷ்டகோணம் - பக்- 82, ஸ.ஸா.ஸ.
13	பூதரூபேண கோணேஷு - பக்-223, பூ.கார
14	பத்மஞ்ச வர்துளாகாரம் - பக்- 82, ஸ.ஸா.ஸ.
15	வித்யேஶ்வரதளச்சன்னம் (ப்ரயோக க்ரந்தங்களில் அஷ்டவித்யேஶ்வரர்களுக்கும் தனித் தனியே விதிக்கப்பட்ட ஷடுத்தாஸனபூஜை ப்ரமாணம்)
16	"உபதளேப்யோ நம:" - தருமபுரம் ப்ரயோகபாடம்.
17	"வித்யேஶ்வராஷ்டக ரூபாணி தளானி ஸஞ்சிந்த்ய"
18	ஷட்கோணம் விமலாஸனம் - பக்- 82, ஸ.ஸா.ஸ.

19	நடைமுறை உபசாரம்
20	நடைமுறை உபசாரம்
21	அநந்தாத்யா தளாக்ரேஷு - பக்-229, க்ரி.க்ர.த்யோ, ப்ர.
22	பீடகண்டே கணேஶ்வரா: - பக்-229, க்ரி.க்ர.த்யோ, ப்ர.
23	பீடபாதே து லோகேஶா: - பக்-229, க்ரி.க்ர.த்யோ, ப்ர.
24	ததஸ்த்ராணி ஶிலோபரி - பக்-229, க்ரி.க்ர.த்யோ, ப்ர
25	வேதிகையின் பலத்திற்காக சிற்பசாஸ்த்ரமுறைப்படியான கல்பனம்

அளப்பரிய அளவையையும், பெருமையையும் கொண்ட ஸ்ரீசிவபஞ்சாஸன வேதிகையை **'சிவபூஜாஸ்தவம்'** எனும் நூலில் ஸ்ரீ(ஞான ஶம்பு)சிவாசார்யார்,

'யாரிகாஹிய-ஶக்திபீஜ: கந்தபத்மஜகந்தம்
வர்ணு-வொய-விராம-ஹூதி-வக்ஷம் விநொசவதுஷ்டய: ।
மாகுகம் உவந-வயம் கவஷம் ஸகெஸர-கணிகம்
ஶக்தி-உணுவ-ஸஜ்ஞ-யுக்த: கஹம் நமாமி ஶிவாஸந: ॥'

தாமரைக்கிழங்காகிய ஆதாரஶக்தியோடும், ஆயிரம் இதழ் தாமரைமொட்டாகிய **அனந்தாஸனத்தோடும்,** ஆஸனந்-தாங்கிகளாகிய தர்ம - ஞான - வைராக்ய - ஐஶ்வர்ய - அதர்ம-அஞ்ஞான - அவைராக்ய - அனைஶ்வர்ய - வடிவான **ஸிம்ஹாஸனத்தோடும்,** கீழ்-மேல் விரிப்புவடிவான **யோகாஸனத்தோடும்,** தள-கேஸர-கர்ணிகையுடன் ஒன்பது ஶக்தி கொண்ட **பத்மாஸனத்தோடும்,** ஸூர்ய-சந்த்ர-அக்னி-ஶக்தி-மண்டலரூபமான **விமலாஸனத்தோடும்** கூடிய ஸ்ரீ ஶிவ பஞ்சாஸனத்தை நான் வணங்குகிறேன், என்று வணங்குவது போலவே நாமும் வணங்குவோமாக.

திருவாசகச் சிந்தனை

வேண்டத்தக்கது அறிவோய் நீ வேண்ட, முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ வேண்டி, என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய், யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உன் தன் விருப்பு அன்றே.

- 6. குழைத்தப்பத்து, மணிவாசகப் பெருமான், திருவாசகம்

எது விரும்பத் தக்கது? எது விரும்பத்தகாதது? என்பதை சிவபெருமான் மட்டுமே அறிவார்.

விரும்பத்தக்கதை விரும்பினால் கூட, அதனையும் முழுவதுமாக அளிக்க வேண்டுமெனில், அதற்கும் சிவபெருமான் ஒருவரே வல்லவராவார்.

அயனும், மாலும் சிவபெருமானை (அடையும் பொருட்டு) வேண்டி விரும்பினாலும், சிவபெருமான் அவர்களுக்குப் புலப்படவில்லை அல்லவா? (லிங்கோத்பவர் கதை)

எனவே, தான் (சிவபெருமான்) விரும்பத்தக்கவராக இருப்பினும், தன்னை விரும்புபவருக்குத் தன்னையே முழுவதுமாக அளிக்கவல்லவராயினும், அயனுக்கும், மாலுக்கும் அவர் தன்னை புலப்படுத்தாததால், அடைய அருள் செய்யாததால், அவர்கள் விரும்பியவிதம் சரியில்லை என்பது தெளிவாகிறது. ஏனெனில், விரும்பியவர்களோ மிகப் பெரியவர்கள்; விரும்பப் பட்டவரோ மிகவும் விரும்பத் தக்கவர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் விருப்பம் நிறைவேறவில்லையே!

அவ்வாறு இருந்தும் சிவபெருமான், என்னை வேண்டிப் பணிகொண்டதால், சிவபெருமானாலேயே விரும்பத்தக்க வண்ணமாக நான் இருக்கிறேன் என்பது திண்ணம்.

எனவே, ‘விருப்பம்’ என்பது, விரும்புபவருக்கு உட்பட்டதாயினும், விரும்பத்தகுந்ததை கூட அடையும் ஆற்றல் விரும்புபவருக்கு இல்லாததால், சிவபெருமானின் அருள் இல்லாத பக்ஷத்தில், ‘விருப்பம்’ என்பதே வீணாகும்.

விரும்பத்தக்கதாயினும், விரும்பும்வகை சரியில்லை எனில், அவ்விருப்பமும் நிறைவேற்றப்படாது என்பதும் திண்ணம்.

விருப்பத்திற்குப் பயன் யாது எனில், அது நிறைவேறுவதே! நிறைவேறுவதும் நம் கையில் இல்லாததால், தனிப்பட்ட விருப்பம் என்பதே வீண்.

எனவே சிவபெருமான் எனக்கு அளிக்கவிரும்பி எதனை அளித்தாரோ, அதனையே நானும் விரும்புகிறேன், வேறொன்றை விரும்புவதில்லை.

இதனைத் தவிர நான் ஒன்றினை விரும்புகிறேன் எனில், அது சிவபெருமானின் விருப்பமேயன்றி வேறில்லை.

வக்ஷத்ஜிஷ

ஸைவகாலவிவெக வ்யாவ்யாந- த்தில்,

கஜிதெ -

வக்ஷத்ஜிஷாம்யு வவெூண, ஈக்ஷாம்ஷாவி விவஜூயெகு ।

.... ஸைவகாலவிவெகஃ (நாமாவலிஃ)பக் -39

என்று உள்ளது. அதன்படி அமாவாசை, பௌர்ணமி ஆகிய இரண்டு பர்வங்களாலும் பிளவு ஏற்படக்கூடாது என்றுத் தெரிகிறது. ஆனால், ப்ரதிஷ்டைக்குரிய = ப்ரதிஷ்டைக்காக எடுக்கப்பட்ட நக்ஷத்ரம் சித்ரிதமாக இருந்தால் தோஷமா? அல்லது ப்ரதிஷ்டைக்கு எடுக்கப்பட்ட வேறு ஏதாவது காலவிஶேஷங்கள் சித்ரிதமாக இருந்தால் தோஷமா? என்பது இங்கு ஸ்பஷ்டமாக இல்லை.

ஆனால் வாமதேவ பத்ததியில்,

கூஜா கஜாரயொஃ உயெூ து கஉாஸஜஊணாஜிகஃ ॥ சுகூ॥
யஜி வெயம் ஹவெகு தகு கூஷளாரஷொஷஃ ந விஜூதெ ।
வூதிஷா கஜாரயொஃ உயெூது கஉாஸஜஊணாஜிகஃ ॥ சுகூஅ॥
யயா ந ஸஂஹவெகு விஹாஞ் வூதிஷாஞு தயா உரெகு ।
ஊக்ஷாயாஞு ஜவெ யாமெ கூஉாஸஜஊணாஜிகஃ ॥ சுகூகூ॥
ஸஂஹவெகு யஜி ஜொஷாய ந ஹவதூெவ ஷணூவ ।

என்று உள்ளது. இவ்வரிகள் அங்குரார்பண ப்ரகரணத்தில் உள்ளன. அதன் பின் ரக்ஷாபந்தனம் செய்து கொள்ளவேண்டும். அதற்கு ஆசார்யர் க்ஷௌரம் செய்து கொள்ளவேண்டும். க்ஷௌரத்தினை அங்குரார்பணத்திற்கு முன்பும் செய்துகொள்ளலாம். அல்லது அங்குரார்பணத்திற்குப் பின்பு, ரக்ஷாபந்தனத்திற்கு முன்பும் செய்துகொள்ளலாம். க்ஷௌரத்திற்குப் பௌர்ணமி, அமாவாசை, ஸங்க்ராந்தி தினங்கள், ஶ்ராத்ததினங்கள், போன்றவை நிஷேதிக்கப்

பட்டுள்ளன. எனவே அங்குரார்பணம் செய்தபிறகு ப்ரதிஷ்டை தினத்திற்கு முன்பாகவே மேற்சொன்ன பௌர்ணமி போன்ற திதிகள் நடுவில் ஸம்பவித்தால் க்ஷௌரம் செய்து கொள்வதற்கு தர்மஶாஸ்த்ரம் இடம் கொடுக்காது. க்ஷௌரம் செய்து கொள்ளாவிடில் ரக்ஷாபந்தன யோக்யதை ஏற்படாது. எனவே அங்குரார்பணதினத்திற்கும் ப்ரதிஷ்டாதினத்திற்கும் நடுவில் அமாஸங்க்ரமணாதிகள் ஸம்பவிக்காத வண்ணம் நாளைக் குறிக்க வேண்டும் என்று இந்நூல் கூறுகிறது. மேலும் இந்த ஸந்தர்பத்தை நன்கு யோசித்தால், அங்குரார்பணத்திற்குப் பிறகோ, அல்லது அந்த தினத்திலோ அல்லது அனுஜ்ஞைக்கும் அங்குரார்பணத்திற்கும் இடையிலோ தான் க்ஷௌரம் செய்து கொள்ளவேண்டும். அதற்குப் பல நாட்கள் முன்பு க்ஷௌரம் செய்துகொள்வது பொருத்தமில்லை, அவ்வாறு செய்து கொண்டால் மேற்சொன்ன விஷயம் வ்யர்தம் என்பது புலப்படும்.

அனுஜ்ஞை ஆரம்பித்த பிறகு அங்குரார்பணத்திற்கு முன்பு அமாஸங்க்ரமணாதிகள் ஏற்பட்டால் க்ஷௌரதோஷம் கிடையாது என்பதை நோக்கும் போது, மத்தியில் ஏற்பட்ட அமாதிகளுக்கும், க்ஷௌரத்திற்கும் என்ன சம்பந்தம் என்று நினைக்கத் தோன்றும். ஆனால் அவ்வசனத்தை பர்யாலோசனை செய்தால் இவ்வாறு தோன்றுகிறது - அமாதி தினங்களில் க்ஷௌரம் செய்துகொள்ள நேர்ந்தால் கூட தவறேதும் இல்லை. தேவதா உத்தேச்யமாக இருப்பதால்.

சரி, அங்குரார்ப்பணத்திற்குப் பிறகு அமாதிகள் ஏற்பட்டு அப்போது க்ஷௌரம் செய்து கொண்டால், அதுவும் தேவதோத்தேச்யகமானதால் அதில் தவறு இருக்காது தான், பின்பு ஏன் அதை மட்டும் நிஷேதம் செய்தார்? என்று ஆலோசித்தால், முன்பு அஜிதத்தில் கூறிய பக்ஷச்சித்ர

தோஷத்தை மனதில் கொண்டே இவ்வாறு இப்பக்ஷத்தை நிராகரித்திருக்க வேண்டும்.

மேலும், அமாஸங்க்ரமணபதஸாஹசர்யத்தால் ஶ்ராத்த-தர்பணாதி தினங்களை விவக்ஷித்திருக்க வேண்டும். எனவே ஆதிசப்தத்தால் 96 ஶ்ராத்ததினங்களை அர்தம் செய்ய வாய்ப்புண்டு. அப்பக்ஷத்தில் அங்குரார்ப்பணத்திற்குப் பின்பு 96-ஶ்ராத்ததினங்கள் போன்றவை, ஸம்பவிக்காதவண்ணம் ப்ரதிஷ்டாதினம் இருத்தல் வேண்டும் என்றுப் படுகிறது. இதனால் மத்தியில் க்ஷௌரம் செய்துகொள்ளும் பக்ஷத்தில், மன்வாதி, யுகாதி தினங்களும் வராமல் பார்க்கவேண்டும் என்றும் படுகிறது.

இதனால், அஜிதத்தின் பர்வஶப்தத்தால் பௌர்ணமியும் க்ராஹ்யமெனத் தெரிகிறது.

ஸத்யோஜாத ஶிவாசார்யரின் காமிகாகமத்திலோ,

> ஞூாஹூாகீ? சுவஸாநாஜு௦ வக்ஷஉயஸூாஸ்ரிதெ ‖ கஅ
> ந ஜொஷ௦ ஐதி விஹூாத௦ வ்ரதிஷூாஙு ஸூாஉரெகீ ।
> - ஸஜ்ெஹாஜாத ஶிவாஉாயடி காஸிகாமஃ (பக்.-74)

என்ற வாக்யம், சம்பந்தமே இல்லாமல் திடீரென சொல்லப் படுவதால் "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்பது போன்று இருக்கிறது. மேலும் அதே நூலில், "கும்பாபிஷேக ஆரம்ப முதல் கும்பாபிஷேகபர்யந்தம் சுக்லபக்ஷம், க்ருஷ்ண பக்ஷம் ஸம்பந்திக்குமாயின் இது தோஷமில்லை கும்பாபிஷேகம் செய்யலாம்"[47] என்று இருப்பதும், அதற்குச் சிலர், 'பௌர்ணமியால் வெடீ ஏற்பட்டால் தோஷமில்லை, அமாவினால் வெடீ ஏற்பட்டால் தான் தோஷம்' என்று விளக்கம் கூறுவது, முன்கூறிய மன்வாதிதினங்களைப் பற்றி நினைக்கும் பொழுது பொருத்தமற்றதாகத் தான் தெரிகிறது.

---

47 ஸத்யோஜாத ஶிவாசார்ய காமிகாகமம் தமிழுரை, பக்கம் - 74

எனவே சில பெரியவர்களிடம் விசாரித்த வரையில், எந்த வகையிலும் பக்ஷச்-சித்ரம் கூடாது. அங்குரார்ப்பணத்திற்கு முன்பாகில் அமாவாசை அன்று கூட ப்ரதிஷ்டாதி அங்கமாய் க்ஷௌரம் செய்து கொள்ளலாம். அங்குரார்ப்பணத்திற்குப் பின்பாகில் அமாவாஸ்யாதிகளில் க்ஷௌரம் செய்யக்கூடாது. எனவே அதுபோன்ற அமைப்பில் ப்ரதிஷ்டா முஹூர்த்தம் நிர்ணயிக்கக் கூடாது.

குருக்கள் ஆத்மார்த்த பூஜையைச் செய்து முடித்த பின்புதான் பரார்த்த பூஜைக்குச் செல்லவேண்டுமா ?

அவ்வாறு இல்லை. பரார்த்தபூஜையில் விதிக்கப்பட்டது போன்றே, ஆத்மார்த்த பூஜையிலும் மூன்றுகாலபூஜைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரேஒரு காலபூஜையை போகாங்கபூஜையோடு விஸ்தாரமாகச் செய்துவிட்டு, பிற இரண்டுகாலங்களின் பொருட்டு அஷ்டபுஷ்பார்ச்சனை போன்றவற்றைச் செய்யவேண்டும், என்ற விஷயங்கள் க்ரியாக்ரம த்யோதிகாவிலும், ப்ரபாவிலும் காணப்படுகின்றன.

எனவே அந்த முக்கியமான ஒருகாலபூஜை எப்பொழுது செய்யப்படவேண்டும்? என்பதற்கு ப்ரபாவில்,

"ஸுகு ஊகஙகாஜாஉபுநஂ ஊவூஂ ஊயூஜிந ஊவ ஙாயபு

தஷெஸூவ ஊவூகுஜுஊெஃ"

என்று மாத்யாஹ்நிகஸமயத்தில் தான் அந்த முக்கிய ஒருகால பூஜையைச் செய்யவேண்டும் என்று பதிலளிக்கிறார். அதன் விரிவை அங்கேயே காணலாம்.

ஆனால் அதே க்ரியா-க்ரம-த்யோதிகாவில்,

"ஊயூா.ஹூஸஊயஂ யாவக் ஸூாயூாயாஜிகஂ ஙூகு"

"ஊயூா.ஹூஸஊயெ$வி உஜிவபுவக் ஸூா.ந-ஸாஙூா-

ஶிவாஉபுநாஜி ஙூயபுாக்"

என்றும், இரண்டு இடங்களில் மாத்யாஹ்ந ஸமயத்தில் ஸ்வாத்யாயம், ஸ்னானம், ஸந்த்யா மறுபடியும் சிவபூஜை போன்றவற்றை விதித்திருப்பதால், முதலில் கூறிய விஸ்தாரபூஜை "ப்ராதஃகாலத்தில்" செய்யவேண்டியவையே என்பதுபோலத் தென்பட்டாலும், அதற்கு ஸமாதானம் சொல்லிவிடலாம்.

அதாவது, [48]‘ப்ரபா’வின்படி மத்யாஹ்ந ஆரம்பஸமயத்தில், அஃதாவது, சரியாக ஐந்துமுஹூர்த்த காலங்கள் கழிந்த உடனேயே ஶிவபூஜை ஆரம்பித்துத் தொடர்ச்சியாகச் செய்துமுடித்து, பிறகு, கபிலாபூஜையும், பிறகு மத்யாஹ்ன முடிவுவரை ஸ்வாத்யாயம் செய்தும், பிறகு, மத்யாஹ்னம் முடியும் வேளையில், ஸ்னான மாத்யாஹ்நிகங் களைச் செய்யவேண்டும் என்றவாறு ஸமாதானம் சொல்லலாம்.

மற்றபடி, ஶிவபூஜை செய்யவேண்டும் என்ற வாக்யம் மேற்படி மாத்யாஹ்நிகவிதியில் உள்ளதுபோல, ஸந்த்யா வந்தனவிதியிலும்,

'வஶ்சாத் ஸாயாஹ்நஸமயே‌஽பி ஸந்த்யாமுபாஸ்ய, யதாஶக்தி பூஜா-ஜப-த்யாந-ஸ்வாத்யாயாந் குர்யாத்'

- ப்ர-கசச, ப்ரபா

என்றுப் பூஜையைக் குறிப்பிட்டிருப்பதால், அந்தந்தக் காலங்களில் சிவபூஜை செய்யவேண்டும் என்பதனை ஞாபகப்படுத்துகிறாரே தவிர, அஶக்தர் விஷயத்தில், ஏககால பக்ஷத்தில் ப்ராத:காலம் தான் முக்யகாலம் என்று சொல்வது போலத் தெரியவில்லை.

எனவே ‘ப்ரபா’வின்படியும் மத்யாஹ்னஸமயமே முக்யகாலமாக உள்ளதால், குருக்கள் பரார்த்தபூஜை செய்த பிறகு கூட, ஆத்மார்த்த பூஜை செய்தால் தவறேதுமில்லை.

மேலும், உஷ:காலத்தில் ஆத்மார்த்தபூஜை முடித்துப் பின்புதான் பரார்த்தபூஜைக்குச் செல்லவேண்டும் என்றால் கீழ்கண்டச் சிக்கல்கள் எழுகின்றன.

---

[48] (மாத்யாஹ்நிகே) =மத்யாஹ்நே । மாத்யாஹ்நிகோ நாம பஞ்சமுஹூர்த்தாத்மகோ ஸப்தமாஷ்டமநவமகாலவர்த்தி: கால:। ததா, பஞ்சமுஹூர்த்தே: ப்ராக்ஸமயே: குர்யாத் மாத்யாஹ்நிகம் விதி: ।

- ப்ர-௩௦, ப்ரபா

1. ஒருநாள் என்பது 'உஉயாஉஉயம வாஈ' என்று சொல்லப் படுவதால், உஷ:காலத்தில் செய்யும்பூஜை முந்தைய கிழமையைச் சாருமா? அன்றைய கிழமையைச் சாருமா?

2. தினமும் இதுபோல் உஷ:காலத்திலேயே ஆத்மார்த்தபூஜை செய்யவேண்டுமென்றால், மார்கழி மாதங்களில் செய்யப்படும் உஷ:கால ஆத்மார்த்த பூஜைக்கும், மேற்கூறியதற்கும் என்ன வித்யாசம்?

அஷ்டத்ரவ்யங்கள்

"𑌅𑌷𑍍𑌟𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌹𑌵𑌿𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌮𑌾𑌨𑌸𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃" என்று ஸ்ரீஸுந்தரேஶ ஶர்மா இயற்றிய உச்சிஷ்டகணபதி அஷ்டோத்தர ஶதநாமங்களுள் ஒருநாமம். கணபதிக்கு 'அஷ்ட த்ரவ்யங்கள்' மிகவும் பிடித்தமானவை என்பதை இன்று அனைவரும் அறிவர்.

அஷ்டத்ரவ்யங்களைப் பற்றிச் சிவாகமங்களில் குறிப்பு உள்ளதாகத் தெரியவில்லை. ப்ரபஞ்சஸாரஸாரஸங்க்ரஹம் எனும் நூல்,

"𑌮𑍋𑌦𑌕-𑌪𑍃𑌥𑍁𑌕-𑌸𑌲𑌾𑌜𑌾𑌃 𑌸𑌸𑌕𑍍𑌤𑍁𑌵𑌂𑌶𑍇𑌕𑍍𑌷𑍂-𑌨𑌾𑌰𑌿𑌕𑍇𑌲-𑌤𑌿𑌲𑌾𑌃।
[49]𑌕𑌦𑌲𑍀𑌫𑌲-𑌸𑌹𑌿𑌤𑌾𑌨𑌿 𑌇𑌤𑍍𑌯𑌷𑍍𑌟𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌿" ॥

எனக் கூறுகிறது. 1.கொழுக்கட்டை 2. அவல் 3.நெற்பொரி, 4. சத்துமாவு[50] 5. கரும்பு 6.தேங்காய் 7. எள் 8. வாழைப்பழம் என இவை அஷ்ட த்ரவ்யங்கள்.

அஷ்டத்ரவ்யங்கள் + த்ரிமதுக்கள் (த்ரிமதுரங்கள்/மதுத்ரயம்)

அஷ்டத்ரவ்யங்களை த்ரிமதுரங்களோடுச் சேர்த்துத் தான் ஹோமம் செய்யவேண்டும். ஆனால் எவ்வாறு சேர்த்து ஹோமம் செய்யவேண்டும் என்பதில் இருபக்ஷங்கள் உள்ளன. ப்ர.ஸா.ஸா.ஸ - பக். 526, 557, க.உ.அ.ம.க.வி - பக்.137, ஆகியவற்றில் அஷ்டத்ரவ்யங்களோடு ஒன்றாகக் கலந்தே ஹோமம் செய்ய விதியுள்ளது.

---

[49] "கதளீபல ஸஹிதா இத்யஷ்ட" என்று 'கணபதி உபாஸனை' அல்லது மஹாகணபதி விதானம் எனும் நூலில் உள்ளது.

[50] இன்று கடைகளில் முந்திரி போன்றவை போட்டு விற்கப்படும் சத்துமாவு அல்ல.

ஆனால், 'ஹோமவிதானம்' (அண்ணா) - பக்.130, 131 நூலில், த்ரிமதுக்களில் 8 த்ரவ்யங்களையும் தனித்தனியே தோய்த்து ஹோமம் செய்யக் கூறப்பட்டுள்ளது. எனவே இரண்டு பக்ஷங்களுக்கும் ப்ரமாணம் உண்டு.

த்ரிமதுக்கள்

த்ரிமது, த்ரிமதுரம், மதுத்ரயம், மதுபர்க: ஆகிய பதங்கள் பல்வேறு ஸந்தர்பங்களில், ஆகமங்களிலும் சரி, வேறு தந்த்ரங்களிலும் சரி, பரவலாகக் காணப்படுபவையே. அந்த மூன்று பொருள்களும் கூட ஆங்காங்கே வேறுபட்டும் ஒன்றுபட்டும் காணப்படுகின்றன. அவற்றை ஆராய்ந்தபோது ஒன்றுமட்டும் தெளிவாகிறது. அது 'தேன் இன்றி அவை எதுவுமில்லை' என்று.

இனி, அஷ்ட-த்ரவ்யங்களோடு கலக்கும் த்ரிமதுவைப் பற்றிப் பார்ப்போம். அதுவும் இருவகை என ப்ர.ஸா.ஸா.ஸ - பக்.67 குறிப்பிடுகிறது. அதாவது,

வகை ஒன்று	வகை இரண்டு
தேன்	தேன்
நெய்	நெய்
வெல்லம்	பால்

என்று உள்ளது. அதிலும் விக்நேஶ்வர் விஷயத்தில் முதல்பக்ஷமே பெரும்பாலும் உள்ளது என்றும் உள்ளது. மேலும், வெல்லம் என்ற இடத்தில் 'நாட்டுச் சர்க்கரை அல்லது குழவுஜீனி' என க.உ.அ.ம.க.வி (பக்-24) நூலும், 'வெல்லச் சர்க்கரை' என ஹோமவிதானம் (பக்-136) எனும் நூலும் மாற்றிக் குறிப்பிடுகின்றன. அவற்றுள் பெரும் வேறுபாடு இல்லை என்பதனை நாமே உணரலாம்.

இவ்வாறு முன் பார்த்த அனைத்தையும் ஆராய்ந்தால் அஷ்ட த்ரவ்ய விஷயத்தில் கீழ்கண்டவாறு நான்குபக்ஷங்கள் உள்ளதை உணரலாம்.

1) கலந்த எட்டு த்ரவ்யங்களை	தேன் நெய் வெல்லம்	ஆகியவற்றுடன் ஒன்றாய்க் கலந்து ஹோமம் செய்தல்
2) கலந்த எட்டு த்ரவ்யங்களை	தேன் நெய் வெல்லம்	ஆகியவற்றில் தோய்த்து தனித்தனியே ஹோமம் செய்தல்
3) கலந்த எட்டு த்ரவ்யங்களை	தேன் நெய் பால்	ஆகியவற்றுடன் ஒன்றாய்க் கலந்து ஹோமம் செய்தல்
4) கலந்த எட்டு த்ரவ்யங்களை	தேன் நெய் பால்	ஆகியவற்றில் தோய்த்து தனித்தனியே ஹோமம் செய்தல்

இவற்றினைத் தவிர, கேரளதேஶத்தில் 'பக்வ அஷ்ட த்ரவ்யம்' நடைமுறையில் உள்ளது. அதாவது, இவற்றையெல்லாம் கலந்து அடுப்பில் பக்வம் செய்தே உபயோகிக்கிறார்கள்.

பல்வேறு மதுத்ரயங்களும் மதுபர்கங்களும்

மேலே தந்த்ரக்ரந்தங்களில் உள்ள மதுத்ரயங்களைப் பற்றிப் பார்த்தோம். இதுபோலவே சிவாகமங்களிலும் மூர்த்திஹோம ஸந்தர்பத்தில் ஒரு மதுத்ரயம் வருகிறது. அதேபோல அஸ்த்ராபிஷேக ஸந்தர்பத்திலும் ஒரு மதுத்ரயம் வருகிறது.

'மதுபர்கம்' என்றுப் பார்த்தால், வாமதேவபத்ததியில் 'ப்ரதிஷ்டை செய்யும் ஆசார்யருக்குத் தர'' ஒரு மதுபர்கத்தைக் குறிப்பிடுகிறார். ஸ்ரீகனகஸபாபதீய போதாயன பூர்வ

ப்ரயோகத்தில் 'வரனுக்குத் தருவதற்கு' இருவிதமான மதுபர்கத்தைக் குறிப்பிடுகிறார். இவை அனைத்தினையும் திரட்டி வரிசைப்படுத்திக் கீழே பார்ப்போம்.

ஸந்தர்பம்	மதுத்ரயம்	நூற்பெயர்	பக்கம்
ஸ்ரீகணபதி ஹோமம்	தேன், நெய், வெல்லம்	ப்ர.ஸா.ஸா.ஸ	67
ஸ்ரீகணபதி ஹோமம்	தேன், நெய், பால்	ப்ர.ஸா.ஸா.ஸ	67
மூர்த்திஹோமம்	தேன், நெய், பால்	ஶி.லி. ப்.வி	16
அஸ்த்ராபிஷேகம்	தேன், நா,சர்க்கரை, பால்	ஸ்ரீமத்.அ.ப,ப்ர. உ	385

ஸந்தர்பம்	மதுபர்கம்	நூற்பெயர்	பக்கம்
ப்ரதிஷ்டா ஆசார்யருக்குக் கொடுக்க	தேன், நெய், பால் வாழைப்பழம்	வாமதேவ பத்ததி	29,30
வரனுக்குக் கொடுக்க (ஒருவகை) ஸமாவர்த்தனத்தில்	தேன், நெய், தயிர் தண்ணீர்	ஸ்ரீகனகஸபாபதீய போதாயன பூர்வ ப்ரயோகம்	29
வரனுக்குக் கொடுக்க (இரண்டாம் வகை) ஸமாவர்த்தனத்தில்	தேன், நெய், பால், தயிர் தண்ணீர்	ஸ்ரீகனகஸபாபதீய போதாயன பூர்வ ப்ரயோகம்	29

ஊஜ்ரஊஹிஶா

ந ஶக்யாஃ வரிஸங்ஹ்யாதும் ஊஜ்ராணாம் ச தஃபாதநாஃ ॥
யாவஜோ ரூஜெவாஶ்ச ரக்ஷோ-யக்ஷ-ஊஹெஶ்வராஃ ।
தாவநுஜ்ராஃ ஸஊாஹ்யாதாஃ தெஷாம் ஸங்ஹ்யா ந விஜ்யுதெ ॥
ஜெஶஹாஷா நிபலாஶ்ச திஹ்யாக்ஷரவஜெயூதாஃ ।
ஸவூஜ்ஜாஃ ஸவூமாஃ ஶூலாஃ ஸவெூ ஸவூஜ்ஜூஹாவிதாஃ ॥
ந ஶீஊஸ்யாஃ விசாயூாஃ வா ஊஜ்ராஃ ஸ்லுஜியா நமெரஃ ।
வுஶாணஃ கூஜஉம் கூகூா ஶ்ரூலாதவும் ஹிதெஷிஹிஃ ॥
ஸவெூ ஊஜ்ராதகாஃ ஜெவாஃ ஸவெூ ஊஜ்ராஃ ஶிவாதகாஃ ।
ஶிவாதகஃ ஜஉம் ஜ்ராகூா ஶிவஜெவாநுவிஷயெகூ ॥

- ஸ்ரீரௌரவாகமம், 3வது படலம், பிரெஞ்சு இந்திய ஆய்வியல் நிறுவனம், 1961

ஊஜ்ராணாம் = மந்த்ரங்களும்

தஃபாதநாஃ = அவைகளை உடையவர்களும்

ச = (உம்)

வரிஸங்ஹ்யாதும் = (எண்ணுவதற்கு) எண்ணிப் பார்ப்பதற்கு,

ந ஶக்யாஃ = தகுந்தவர்கள் அல்ல

ரூஜெவாஃ = ருத்ரதேவர்களும்,

ரக்ஷோ- = 'ரக்ஷஸ்' என்பவர்களும்

யக்ஷ- = 'யக்ஷர்' என்பவர்களும்

ஊஹெஶ்வராஃ ச = 'மஹேஶ்வரர்களும்' (மஹேஶ்வரன்)

யாவஜஃ = எவ்வளவுபேர் உள்ளனரோ

தாவநுஜ்ராஃ = அவ்வளவு மந்த்ரங்கள்

ஸஊாஹ்யாதாஃ = கூறப்பட்டுள்ளன

தெஷாம் = அவைகளுக்கு

ஸஜ்ஞா = எண்ணிக்கையானது

ந விஜூதெ = இல்லை

ஜெஶஹாஷா = தேஶபாஷையில்

நிபஜ்ஷா: = புனையப்பட்டவைகள்

ஓிவூ = தேவலோகத்து

ஊக்ஷாை = எழுத்துக்களோடும்

வ்ஜெ: = (வார்த்தைகளாலும்) சொற்களோடும்

யுூதா: = கூடியவைகள்

ஸவெூ ூ = ஆகிய அனைத்துமே

ஸவூஜ்ஞா: = அனைத்தறிவும் படைத்தவை

ஸவூமா: = எங்கும் செல்லும் தன்மை படைத்தவை

ஶூஜா: = தூய்மையானவை

ஸவூஜ்ஞ = அனைத்தையும் அறிந்தவரால்

ஹாவிதா: = விதிக்கப்பட்டவை

நாரெ: = மனிதர்களால்

ஸ்வூயியா = தங்களது சிற்றறிவைக்கொண்டு

ஊஜ்ஞா: = மந்த்ரங்கள்

ந ஊோ∘ஸூா: = நல்ல முறையிலும் விசாரிக்கத்தக்கவை அல்ல.

ந விசாயூா: வா = குறுக்கிட்டு விசாரிக்கத் தக்கவையும் அல்ல

ஶூமஊ∘ = ஆகமத்தினை

வூஊாணீ = ப்ரமாணமாகக்

கூூகூா = கொண்டு

ஹிதைஷிஹி: = நன்மையை விரும்புபவர்களால்

ஶூஜாதவூ∘ = ஶ்ரத்தையோடு நடந்துகொள்ளத் தக்கது

ஸவெூ = எல்லா

ஜெவாஃ = தேவர்களும்

ஊஜாதகாஃ = மந்த்ரங்களைத் தங்களது உயிராகக் கொண்டவர்கள்

ஸவெூ = எல்லா

ஊஜாஃ = மந்த்ரங்களும்

ஶிவாதகாஃ = ஶிவபெருமானை உயிராகக் கொண்டவை

ஐஉ௦ = இதையெல்லாம்

ஶிவாதகூ = ஶிவபெருமானை உள்ளடக்கியதாக

ஜூாகூா = எண்ணி

ஶிவஊவ = ஶிவனையே

கூஙூவிஙயெகூ = ஒருவன் இடையறாது எண்ண வேண்டும்.

மந்த்ரங்களும் அவைகளை உடையவர்களும், (எண்ணுவதற்கு) எண்ணிப் பார்ப்பதற்கு, தகுந்தவர்கள் அல்ல. ருத்ரதேவர்களும், 'ரக்ஷிஸ்' என்பவர்களும் 'யக்ஷர்' என்பவர்களும், 'மஹேஶ்வரர்களும்' (மஹேஶ்வரன்), எவ்வளவுபேர் உள்ளனரோ, அவ்வளவு மந்த்ரங்கள் கூறப் பட்டுள்ளன. அவைகளுக்கு எண்ணிக்கையானது இல்லை.

தேஶபாஷையில் புனையப்பட்டவைகள், தேவ லோகத்து எழுத்துக்களோடும், சொற்களோடும் (வார்த்தைகளாலும்), கூடியவைகள் ஆகிய அனைத்துமே, அனைத்தறிவும் படைத்தவை. எங்கும் செல்லும் தன்மை படைத்தவை. தூய்மையானவை. அனைத்தையும் அறிந்தவரால் விதிக்கப்பட்டவை.

மனிதர்களால் தங்களது சிற்றறிவைக்கொண்டு மந்த்ரங்கள் நல்ல முறையிலும் விசாரிக்கத்தக்கவை அல்ல. குறுக்கிட்டு விசாரிக்கத் தக்கவையும் அல்ல. ஆகமத்தினை ப்ரமாணமாகக் கொண்டு நன்மையை விரும்புபவர்களால் ஶ்ரத்தையோடு நடந்துகொள்ளத் தக்கது.

எல்லாதேவர்களும் மந்த்ரங்களைத் தங்களது உயிராகக் கொண்டவர்கள். எல்லா மந்த்ரங்களும் ஶிவபெருமானை உயிராகக் கொண்டவை. இதையெல்லாம் ஶிவபெருமானை உள்ளடக்கியதாக எண்ணி, ஶிவனையே ஒருவன் இடையறாது எண்ண வேண்டும்.

- ரௌரவோத்தரம் 3வது படலம், பிரெஞ்சு இந்திய ஆய்வியல் நிறுவனம், 1985

நூல்விபரம்

1) அமரகோஶம், ஸுதா வ்யாக்யா, பண்டிட் சிவதத்தாதி மத:, சௌகம்பா ஸம்ஸ்க்ருத ப்ரதிஷ்டான், புதுதில்லி. 2011.

2) உச்சிஷ்டகணபதி அஷ்டோத்தரஶத நாம உரை, தஞ்சாவூர் ஸ்ரீஸுந்தரேஶ ஶர்மா இயற்றியது.

3) உத்தரகாரணாகமம், ஸ்ரீஷண்முகசுந்தர முதலியார், சிந்தாதிரிப்பேட்டை.

4) உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறிவிளக்கம், பழைய உரையும் விளக்கமும், பதிப்பாசிரியர்- கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர் திரு.ப. ராமநாத பிள்ளை, வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம். சென்னை - 1977. முதற் பதிப்பு 1968.

5) கனகஸபாபதீய போதாயனபூர்வப்ரயோகம், ஸ்ரீ ஸ்வாமிநாத ஶிவாசார்யர், தென்னிந்திய அர்ச்சகர் ஸங்கம், நள-சித்திரை, 1976.

6) கணபதி உபாஸனை அல்லது மஹாகணபதி விதானம், பதிப்பாசிரியர், ஸ்ரீக்ருஷ்ணமூர்த்தி ஶாஸ்த்ரிகள், தஞ்சை ஸரஸ்வதி மஹால் நூலகம், 1998.

7) காமிகாகமம், பூர்வபாகம், ஸ்ரீ ஸ்வாமிநாத ஶிவாசார்யர், தென்னிந்திய அர்ச்சகர் ஸங்கம், 1975.

8) காமிகாகமம், உத்தரபாகம், ஸ்ரீ ஸ்வாமிநாத ஶிவாசார்யர், தென்னிந்திய அர்ச்சகர் ஸங்கம், சென்னை, 1988.

9) காமிகாகமம், ஸத்யோஜாத ஶிவாசார்யர், தமிழுரை.

10) குமாரதந்த்ரம், E.M. கந்தஸ்வாமி ஶர்மா, தென்னிந்திய அர்ச்சகர் ஸங்கம், சென்னை,1974.

11) கொடிக்கவி மூலமும் உரையும், விளக்கமும், மெய்கண்டார் சைவப்பேரவை நான்காமாண்டு

துவக்கவிழா சிறப்பு வெளியீடு, திருச்சிராப்பள்ளி, 2006.

12) கொடிக்கவி, ஈச்வரமூர்த்திப் பிள்ளை உரை, வெளியீடு; சைவசித்தாந்த சபை, சங்கரன்கோயில், 2005.

13) க்ரியாக்ரமத்யோதிகா, ஸ்ரீமத் அகோரஶிவாசார்யர், ஸ்ரீநிர்மலமணி தேஶிகர் உரை, அம்பலவநாவல ஞானஸம்பந்ததேஶிக பராஶக்தி ஸ்வாமி, 1925.

14) க்ரியாஸாரः, பாகம் -2, S.Narayanaswamy sastry, University of Mysore, Mysore - 1957.

15) நித்யபூஜாலக்ஷண ஸங்க்ரஹம், சிவஸ்ரீ ஸ்வாமிநாத ஶிவாசார்யர், ஸ்ரீசிவாம்ருதஸங்கம், திருப்புத்தூர் - 2008.

16) ப்ரபஞ்சஸார ஸார ஸங்க்ரஹம், ஸ்ரீகீர்வாணேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸரஸ்வதிமஹால் நூல்நிலையம், தஞ்சாவூர், 1992.

17) பன்னிருதிருமுறை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2007.

18) மஹாந்யாஸः, வைதிக வர்த்தினி, மன்னார்குடி 1963

19) மஹோத்ஸவவிதி, ஸ்ரீமத் அகோரசிவாசார்யர், தென்னிந்திய அர்ச்சகர் ஸங்கம், சென்னை -1974.

20) மஹோற்சவவிளக்கம், அச்சுவேலி ச. குமாரசுவாமி குருக்கள் - 1943.

21) முந்நூல் தெளிவு, தா.ம. வெள்ளைவாரணம், சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை, 2005

22) மெய்கண்ட சாத்திரம்- மூலமும் உரையும், ஆசிரியர் - சி. நாகலிங்க முதலியார், வெளியீடு- திருவாவடுதுறை ஆதீனம், 1897.

23) மெய்கண்ட நூல்களுள் ஏழு, தெளிவுரையுடன், சி. சு மணி, வெளியீடு அருள்நந்திசிவம் அருட்பணி மன்றம், 1999.

24) யாஜுஷமந்த்ரரத்னாகரம், HERITAGE INDIA EDUCATIONAL TRUST, CHENNAI - 1997.

25) ரௌரவாகமம் ஸ்ரீமத், பாகம் -1, பிரெஞ்சு இந்திய ஆய்வியல் நிறுவனம், பாண்டிச்சேரி, 1985.

26) வ்யாகரணமஹாபாஷ்யம், மோதிலால் பனார்சிதாஸ் வெளியீடு, புதுதில்லி, 1967.
27) வாமதேவபத்ததி, ஸ்ரீ லோகாம்பிகா வேதசிவாகம வித்யாலயம், திருப்பாலைவனம், 1997.
28) வினா வெண்பாவும் கொடிக்கவியும், கு. சுந்தரமூர்த்தி, காசி மடம், திருப்பனந்தாள், 2004.
29) ஶப்தகல்பத்ரும:, ஸ்ரீவரப்ரஸாதவஸு, ஸ்ரீஹரிசரண வஸு, சௌகம்பா ஸம்ஸ்க்ருத சிரீஸ் ஆபீஸ், வாரணாஸீ, 1961.
30) ஶிவதத்வரஹஸ்யம், ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதர்.
31) ஶிவப்ரதிஷ்டா விதி, சிவஸ்ரீ C. ஸ்வாமிநாத சிவாசார்யர், தென்னிந்திய அர்ச்சகர் ஸங்கம், சென்னை, 1964.
32) ஶிவபூஜாஸ்தவம், ஸ்ரீ ஞானசிவாசார்யர், சைவாகம சித்தாந்த பரிபாலன ஸங்கம், தேவகோட்டை -1935.
33) ஶிவாநந்தலஹரீ, ஸ்ரீஆதிசங்கரர், அண்ணா, ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை -
34) ஶிவார்ச்சனா சந்த்ரிகா, ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர், சைவாகம சித்தாந்த பரிபாலன ஸங்கம், தேவகோட்டை - 1922.
35) ஶிவோத்கர்ஷமஞ்ஜரீ, மணல்மேடு சிவஸ்ரீ ராமநாத சிவாசார்யர் சதாபிஷேக விழாமலர், 2010.
36) ஶைவகாலவிவேகம், ஸ்ரீவெங்கடேஶ்வர வேத விஶ்வ வித்யாலயம், திருப்பதி, 2015
37) ஶைவபூஷணம், ஸ்ரீபஞ்சாக்ஷரயோகி இயற்றியது, ஸ்ரீஅகோர ஶிவாசார்ய டிரஸ்ட், சென்னை, 2005.
38) சைவ சமயக் கல்வி, 3ஆம் பகுதி, கட்டுரை ஆசிரியர், டாக்டர் ஆ. ஆனந்தராசன், தருமை ஆதீனம், 1986.
39) சைவ சமய நெறி, சிதம்பரம் மறைஞானசம்பந்தர், ஆறுமுக நாவலர் உரை, ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம், 2002.
40) ஸகலாகமஸார ஸங்க்ரஹம், மயிலை அழகப்ப முதலியார், கலி - 5012.

41) ஸித்தாந்தஶேகரம், ஸீதாராம ஸோமயாஜீ, ஸ்ரீ மனோன்மணீ க்ரந்தமாலா குஸுமம் -20, மைசூர், 1971.
42) ஸித்தாந்தஸாராவளி:, ஸ்ரீமத் த்ரிலோசன ஶிவாசார்யர், வ்ரஜ வல்லப த்விவேதி, ஶைவபாரதீ ஶோதப்ரதிஷ்டானம், வாரணாஸீ, 1998.

- அநந்தஶம்பு உரையுடன், vol xix, no.1, Bulletin of the Government Oriental Manuscripts Library, Madras, 1969.
43) ஸுப்ரஹ்மண்யபுஜங்கம், கிரிடிரேடிங், சென்னை.
44) ஸௌந்தர்யலஹரீ, தேதியூர் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஶாஸ்த்ரிகள் உரை, கிரிப்ரஸ், சென்னை, 1964.
45) ஸூதஸம்ஹிதா, ஸ்ரீமாதவாசார்யரது தாத்பர்யதீபிகா உரை, வாஸுதேவஶாஸ்த்ரி, ஆநந்தாஶ்ரம முத்ரணாலயம், புனே, 1924.
46) ஸ்வச்சந்த தந்த்ரம், (பாகம்-I-II) உத்யோத விவரணத்துடன், வ்ரஜ வல்லப த்விவேதி, பரிமள் பப்ளிகேஷன்ஸ், தில்லி, 2004.
47) சித்தாந்த அட்டகம், கு. வைத்யநாதன், திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், 1995.
48) ஹோமவிதானம், அண்ணா, ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 1977.

சென்னை, ஸம்ஸ்க்ருதக் கல்லூரியின் வியாகரணத்துறைத் தலைவர், பேராசிரியர், 'வியாகரண ஶிரோமணி, டாக்டர். ப்ரஹ்மஶ்ரீ ஸே. அருணஸுந்தர குருக்கள்' அவர்கள் எழுதியது ''ஶிவாகமச் சிந்தனைகள்'' என்ற இத்தொகுப்பு. இதனுள் ஆசிரியர் அவர்கள், பழம்பெரும்நாடாம் நம் பாரதமணித் திருநாட்டில் விளங்குகின்ற ஸமயங்கள் பலவற்றுள் நம் சைவஸமயம் மற்றும் அதன் ப்ரமாணநூல்களாகிய ஶிவாகமங்கள் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார்கள். இது இந்நூலுள் பேசப்படும் விஷயங்களைப் புரிந்துகொள்வதற்கு ஓர் அறிமுகம் போல் அமைந்துள்ளது.

சர்யை, க்ரியை, யோகம், ஞானம் என்ற நாற்பெரும் பிரிவுகளாக விளங்குகின்ற ஶிவாகமங்களில் கூறப்பட்டுள்ள விஷயங்களுள் சர்யாபாதம் தொடர்பானதாக 'இறைவனைத் தரிசிக்க எல்லோருக்கும் உரிமை' மற்றும் 'வைதிக-ஶைவஸந்த்யாவந்தனங்கள்' ஆகிய சிந்தனைகள் அமைந்துள்ளன.

'கும்பாலங்காரம்', 'ஸ்ரீஶிவபஞ்சாஸனவேதிகை', 'பக்ஷச்-சித்ரம்', 'குருக்கள் ஆத்மார்த்தபூஜையைச் செய்துமுடித்த பின்புதான் பரார்த்தபூஜைக்குச் செல்லவேண்டுமா?', 'மந்த்ரமஹிமா' ஆகிய சிந்தனைகள் க்ரியாபாதம் தொடர்பானதாக அமைந்துள்ளன.

'ப்ராஸாத:' என்ற தலைப்பிலான சிந்தனை யோகத்தையும் ஞானத்தையும் இணைக்கும் பாலம்போல அமைந்துள்ளது.

'கொடிக்கவியில் வடமொழி இலக்கணம்', 'வைத்தன அத்துவாவும் வடிவென மறைகளெல்லாம்', 'திருவாசகச் சிந்தனை' ஆகியவை ஞானபாதம் தொடர்பான விளக்கங்களை அளிக்கின்றன.

'ஶிவபெருமானின் திருமுகங்களும் வேதங்களும்', 'அஷ்டத்ரவ்யங்கள்' ஆகியவை ஸமயம் தொடர்பான பொதுவான விஷயங்களை அழகாக விளக்குகின்றன. ஶிவாகமம் என்ற பெருங்காட்டினுள் விளங்குகின்ற பொருள்களை ஆதவனின் கிரணங்கள் போல விளக்கும் இந்நூல் ஶைவாகம உலகிற்கு ஒரு பொக்கிஷம்.